

கல்கி
மணியம்
KALKI 14-7-1957
30 நயா பைசா



விம் உங்கள் வீட்டிற்கு அவசியம்
—சீக்கிரமாக, பிரகாசமாக சுத்தம் செய்ய
VIM
HOW TO USE
தரை
கண்ணாடிச் சாமான்கள்
சமையல் பாத்திரங்கள்

V. 484-50 TM

கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 16 இதழ் 50

தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

ஹேவிளம்பி ஆனி 30

அமெரிக்காவின் ஜின்னு பாணி

சங்கீதத்தில் அரியக்குடி பாணி, செம்மங்குடி பாணி என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். அதேபோல அரசியலிலும் "ஜின்னு பாணி" என்று ஒன்றிருக்கிறது.

ஜின்னு மறைந்தவுடன், ஜின்னு பாணி அரசியலும் மறைந்து விட்டது என்று எண்ணிக் கொண்டிருந்தோம். ஆனால் அது கொஞ்சங்கூட மறையவில்லை. அந்த அற்புத அரசியல் உத்தியை ஜின்னு அமெரிக்காவுக்குச் சாசனமாக எழுதி வைத்து விட்டுப் போயிருப்பதாகத் தெரிகிறது.

நேயர்களுக்குப் பத்து வருஷங்களுக்கு முன் பாரத நாட்டில் நிகழ்ந்த சம்பவங்கள் மறந்திருக்காது என்று நினைக்கிறோம். எனினும் ஜின்னுபாணி என்னவென்பதை நினைவுறுத்துகிறோம்.

ஜின்னு, காங்கிரஸுடன் ஒத்துப் போக ஒரு நிபந்தனை விதிப்பார். அதைக் காங்கிரஸ் ஏற்றுக் கொண்டு விட்டால், அதை விட்டு விட்டு வேறொரு நிபந்தனை போடுவார். அதையும் ஒப்புக்கொண்டு விட்டால் மூன்றாவதாக ஒரு புதிய நிபந்தனை போடுவார். மொத்தத்தில் காங்கிரஸும் முஸ்லிம் லீகும் ஒன்று சேராமலிருக்க எத்தனை வழிவகைகள் உண்டோ அத்தனையும் கண்டுபிடிப்பார். இதுதான் ஜின்னுபாணி.

இந்த ஜின்னுபாணி இப்பொழுது சந்தேகத்துக்கிடமின்றி அமெரிக்காவிடம் சரண் புகுந்துவிட்டது என்கிறார் ராஜாஜி. இந்த வாரம் 'ஸ்வராஜ்யா' பத்திரிகையில் தாம் எழுதியுள்ள கட்டுரையில்."

அணுகுண்டு, ஜலஜனகுண்டு சோதனைகளை நிறுத்துவது சம்பந்தமாக அமெரிக்கா என்னவெல்லாம் நிபந்தனைகள் விதித்து வந்ததோ அத்தனையையும் ஏற்றுக் கொண்டது ருஷ்யா. அத்தனை நிபந்தனைகளுக்கும் உட்பட்டுச் சோதனைகளை நிறுத்தத் தயாராக இருப்பதாகக் கூறியது. எனினும் அமெரிக்கா ருஷ்யாவிடம் இவ்விஷயமாக ஒப்பந்தம் செய்து கொள்ளத் தயாராயில்லை. "ருஷ்யாவின் வார்த்தையை எப்படி நம்புவது?" என்று சொல்லி எந்த உடன்பாட்டுக்கும் வராமல் இருந்து வருகிறது!

இந்த நிலையில் ருஷ்யா "தாற்காலிகமாகவாவது அணுகுண்டு சோதனைகளை நிறுத்தி வைக்க ஒப்பந்தம் செய்து கொள்வோம்" என்று கூறியது.

இதற்கு அமெரிக்கா ஒப்புக் கொள்வதாக ஐஸன்ஹோவர் நிருபர்களிடம் கூறினார். இந்த உடன்படிக்கைக்கான நிபந்தனைகளை ஆராயும்படி தமது பிரதிநிதிகளுக்குக் கட்டளையிட்டார். அணுகுண்டுகள் இல்லாத மற்றநாடுகள் எல்லாம் பெருமகிழ்ச்சியடைந்தன. கொஞ்ச காலமாவது வெற்றிகரமாக உடன்படிக்கையை மதித்து ருஷ்யாவும் அமெரிக்காவும் நடந்து கொண்டால், அணுசோதனை சகாப்தமே மீண்டும் தலை தூக்காமற் போவதற்கு ஏது உண்டல்லவா என்று உலகம் எண்ணியது!

ஆனால் வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது!

ஜின்னு பாணி மீண்டும் தலை தூக்கத் தொடங்கி விட்டது!

பிரிட்டனில் ஆயுதபரிகரண மகாநாடு நடைபெறுகிறது. அந்த மகாநாட்டுக்கு அமெரிக்காவின் பிரதிநிதியாகவும், மேற்கத்திய வல்லரசுகளின் பிரதிநிதியாகவும் விளங்கும் ஸ்டாஸ்ஸன் "அணு-ஜலஜ குண்டுகளை எதிர்காலத்தில் என்றாவது ஒரு நாள் ஒரேயடியாக ஒழித்துக்கட்டுவது என்பது முடியாத காரியம்" என்று கூறியிருக்கிறார். "அணுகுண்டுகளைப் பெற்றுள்ள மற்ற வல்லரசுகள் பரிபூரண பகிஷ்காரத்துக்கு ஒப்புக் கொண்டாலும் அமெரிக்கா அதற்கு இணங்காது" என்று கூறியிருக்கிறார்!

இதைவிடக் கேவலமான நிலை வேறு ஒன்று அமெரிக்காவுக்கு இருக்க முடியாது. பொருளி லும் ஆயுத பலத்திலும் உலக நாடுகளில் முதன்மை நாடாக விளங்கும் அமெரிக்கா இவ்வாறு பேசுவது அதன் பயங்கொள்ளித் தனத்தையே காட்டுகிறது!

ஒரு நாடு குண்டு வீசிய பிறகு அதைச் சமாளிக்க எதிரி நாடு வீசவேண்டும் என்ற நியதி இந்த விஷ குண்டுகள் சம்பந்தமாக இருக்க முடியாது. ருஷ்யா அமெரிக்காவைத் தாக்கினல் பதிலுக்கு அமெரிக்கா இந்த ஆயு தங்களைக் கொண்டு தாக்கும் என்று சொல்ல முடியாது. ஏனெனில் பதிலுக்குத் தாக்க அமெரிக்கா இருந்தால் அல்லவோ சாத்தியம்!

ஆக அணு ஆயுத யுத்தம் என்பது வீரத்தை யும் தீரத்தையும் விளக்கக்கூடிய யுத்தமாக இராது. உலகத்தையே அழிக்கக் கூடிய யுத்த மாக முடியும்! மனிதகுல நாகரிகத்தை அடி யோடு அழிக்கக்கூடிய யுத்தமாகவே இருக்கும். எத்தனையோ ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வளர்ந்து வந்துள்ள மனிதகுல நாகரிகம் அழிந்து போவதற்கு அமெரிக்கா ஏற்பாடு செய்கிறது என்பதுதான் இதன் பொருள்.

அமெரிக்க மக்களின் சுதந்திரத்துக்காகப் போராடிய வாஷிங்டன், நீக்ரோக்களின் அடிமை வாழ்வை அகற்றப் போராடிய ஆபிரகாம் லிங்கன் போன்ற மகான்களை ஈன்ற அமெரிக்கா மனித வாழ்வின் அழிவுக்கு வழி செய்கிறது என்பதை நினைக்க வியப்பாக இருக்கிறது! எவ்வளவு உன்னத நிலையி லிருந்து தாழ்ந்து விட்டது!

அமெரிக்கா உலகை அழிக்கக் கண்மூடித்தன மாக நடந்து கொண்டாலும் மற்ற நாடுகள் சும்மா இருக்க முடியாது.

அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யாத உலக நாடுகள் அனைத்தும் ஒன்று பட்டு ஒரு குரலில் பேசி மனிதப் பண்பாட்டைக் காப் பாற்ற வேண்டிய காலம் வந்திருக்கிறது. இந்த உன்னதமான பணியை ஏற்று உலகுக்கு வாழ்வளிக்கக் கூடிய தலைவர் நமது பிரதமர் ஜவாஹர்லால் நேரு அவர்கள்தான்!

ஆசிய நாடுகள் எல்லாம் பாரதத்தையும் நமது பிரதமர் நேருவையுமே எல்லா விஷயங் களிலும் எதிர் நோக்கி யிருக்கின்றன.

ஆசியாவில் நேருஜியைப்போல் பெரு மதிப் புக்குப் பாத்திரமான தலைவர் வேறு யாரு மில்லை. அதேபோல் மத்தியகேந்திரத்திலும் நமக்கு நல்ல செல்வாக்கு இருக்கிறது. எகிப்து விஷயத்தில் நாம் கடைப்பிடித்த தார்மிகக் கொள்கை முஸ்லிம் நாடுகளிடையே பெரும் செல்வாக்கு தேடித் தந்திருக்கிறது.

சமீபத்தில் பிரிட்டனில் நடைபெற்ற காமன் வெல்த் மகாநாட்டுக்குச் சென்ற நேருஜி வழியில் பல ஐரோப்பிய நாடுகளுக்கும் விஜயம் செய்தார். அங்கெல்லாம் அந்த அந்த நாட்டு மக்கள் அளித்த அமோக வரவேற்பும் குதூ கலமும் அந்நாட்டு மக்கள் நேருஜியிடம் எவ் வளவு மதிப்பும் மரியாதையும் வைத்திருக் கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டின.

ருஷ்யாவிலும், கம்யூனிஸ்ட் சார்புள்ள நாடு களிலும் நமது பிரதமருக்குள்ள செல்வாக்கு இவ்வளவு என்று சொல்லத் தேவையில்லை!

இப்படி ஆசியாவிலிருந்து அமெரிக்காவரை மிகுந்த செல்வாக்கு பெற்ற தலைவர் இன்று ஒருவர் உண்டென்றால் அவர் நமது பிரதமர் தான். நமது பிரதமர் பெற்றுள்ளதைப் போன்ற செல்வாக்கும் புகழும் உலகில் வேறு எந்தத் தலைவரும் பெறமுடியாது! அந்த அரும் செல்வத்தை, உலகம் நேருஜிக்கு அளிக்கும் செல்வாக்கை, அவர் அணு—ஹைட்ரஜன் குண்டு பீதியிலிருந்து உலகை விடுவிக்க உப யோகிக்க வேண்டும். வல்லரசுகளைத் தவிர மற்ற எல்லா நாடுகளையும் இணைத்து, ஒரே குரலில் அணு சோதனைகளை நிறுத்தும்படி வற்புறுத்த வேண்டும்!

தீராத உணவுப் பிரச்னை


முதலாவது உலக மகாயுத்தம் நடந்த போது லண்டனில் உள்ள மிகப் பிரபல பத்தி ரிகை ஒன்று, ஜெர்மன் போர்முனையில் பிரிட்டிஷார் அடைந்த "வெற்றிகளை"ப் பற்றிய செய்திகளைப் பெருமையுடன் பிர சுரித்து வந்தது. ஒவ்வொரு நாளும் பிரிட் டிஷ் துருப்புகள் எத்தனை எத்தனை மைல்கள் முன்னேறின என்றும் குறிப்பிட்டு வந்தது. ஒரு எமகாதகப் பேர்வழி இந்தப் புள்ளி விவரங்களை யெல்லாம் சேகரித்துக் கணக்கு எடுத்து வைத்துக்கொண்டு, அந்தப் பத்தி ரிகையின் கூற்றை அம்பலப்படுத்தி விட்டார். "...பத்திரிகை கொடுத்துள்ள புள்ளி விவரங் களின்படி பார்த்தால், பிரிட்டிஷ் துருப்புகள் இதுவரையில் ஜெர்மனி முதலிய பல நாடு களையும் கடந்து ருஷ்யாவைக்கூட ஆக்கிர மித்துக் கொண்டிருக்க வேண்டுமே! ஆனால், உண்மை நிலை அதற்கு நேர்மாறாக இருக் கிறதே!" என்று அவர் அப்பட்டமாகக் கூறியதை எவராலும் மறுக்க முடியவில்லை.

இந்தியாவில் உணவு நிலைமை பற்றி நமது மந்திரிகளும் அதிகாரிகளும் சென்ற பல வருஷங்களாக வெளியிட்ட அறிக்கைகள், வாக்குறுதிகள், அறை கூவல்கள், எச்சரிக்கை கள், சமாதான வார்த்தைகள் இவற்றை யெல்லாம் கணக்கு எடுத்துப் பார்க்கும் போது, மேலே குறிப்பிட்ட சம்பவமே நமக்கு ஞாபகத்துக்கு வருகிறது.


இனி எக்காலத்திலும் இந்தியா உணவுக்காகப் பிற நாடுகளை எதிர்பார்க்கும்படி நேராது என்று நமது மந்திரிகள் உறுதி கூறினார்கள். இந்தியாவிலிருந்து உணவுப் பொருட்கள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் காலம் சீக்கிரத்தில் வரும் என்றும் நம்பிக்கை ஊட்டினார்கள்!

ஆனால், இன்றைய நிலை மந்திரிகளின் கூற்றுகள் எல்லாம் பொய்த்துப் போகும்படி செய்திருக்கிறது. உணவுப் பொருள்களுக்குத் தொலைவில் உள்ள அமெரிக்கா வல்லரசின் தயவை மாத்திரமல்ல, அடுத்துள்ள சிறிய

"பயப்படாதே! அது ஒன்றும் செய்யாது!"



அணுகுண்டு சோதனைகளினால் பரவும் விஷம் அவ்வளவு கடுமையானதல்ல என்கிறார் சர்ச்சில்



திட்டங்களினால் சர்க்கார் காரியாலயங்களில் பைல்களின் தொகைதான் அதிகரிக்கின்றன!

ஆண்டு விழா !



காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு லண்டனில் நடைபெற்றது !

நாடான பர்மாவின் தயவையும் நாடும்படியான நிலை ஏற்பட்டிருக்கிறது. உணவுப் பிரச்னையைத் தீர்க்கும் விஷயமாக மகாநாடுகளும் மண்டல சபைகளும் கூட்டும்படியான நிர்ப்பந்தமும் உண்டாகி யிருக்கிறது.

சென்ற வாரம் ஹைதராபாத்தில் தென் பிராந்திய உணவு மண்டல மகாசபை கூடி உணவுப் பிரச்னைகளை அலசி ஆராய்ந்துள்ளது. அதன் பலன் என்ன? ஆந்திரா, மைசூர், சென்னை, கேரளம் முதலிய ராஜ்யங்கள் அடங்கிய தென் பிராந்திய அரிசி உணவு மண்டலம் ஏற்பட்டதும் ஆந்திராவிலிருந்து ஏராளமான அரிசி கிடைக்கும் என்றும், அப்போது சென்னை ராஜ்யத்தில் அரிசி விலை குறைந்துவிடும் என்றும் மத்திய சர்க்கார் உதவி உணவு மந்திரி ஸ்ரீ எம். வி. கிருஷ்ணப்பா கூறுகிறார். தென் பிரதேச உணவு மந்திரிகள் மகாநாட்டில் கலந்து கொண்ட மத்திய சர்க்கார் உணவு மந்திரி ஸ்ரீ அஜித் பிரசாத் ஜெயின், உணவு நிலைமை முன்னேற்றம் அடைந்து வருவதாயும், வடக்கே கோதுமை மண்டலம் ஏற்பட்டிருப்பது போல் தெற்கே அரிசி மண்டலத்தை ஏற்படுத்த உத்தேசித்திருப்பதாயும் குறிப்பிட்டுள்ளார்.

ஆந்திர ராஜ்யத்திலும் ஒரிஸ்ஸாவிலும் ஏராளமாக அரிசி தேங்கியிருப்பதாக உணவு மந்திரி கூறுகிறார். அந்த ராஜ்யங்கள் தங்களிடமுள்ள உபரியான அரிசியை நியாயமான விலைக்குக் கொடுக்க இசைய வேண்டும். அப்படியே இசைந்தாலும் அவற்றைக் கொண்டு வருவதற்குப் போதிய ரயில் வண்டி சாதனங்கள் இல்லை என்பதை மந்திரியே ஒப்புக் கொண்டுள்ளார்.

அரிசி விலை எல்லை மீறிப் போனால், தாங்கள் ஏராளமாக அரிசியைத் தேக்கிவைத்து விநியோகம் செய்யத் திட்டமிட்டிருப்பதாகவும் உணவு மந்திரி கூறுகிறார். அதாவது அரிசி விலை இன்னும் எல்லை மீறி உயர்ந்து விடவில்லை என்பது அவரது கருத்து போலும்!

மக்களுக்குப் போதிய அரிசி கிடைக்க வழி உண்டா? அப்படியே போதிய அரிசி கிடைத்தாலும் நியாயமான விலைக்குக் கிடைக்குமா? தற்போதைய உணவுப் பிரச்னை என்று தீரும்?—இந்தக் கேள்விகளுக்கு மந்திரிகளே ஐயந்திரிபுக்கு இடமின்றிப் பதில் அளிக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

எனவே, தாற்காலிகமாகப் பொது மக்கள் உணவுப் பிரச்னை சம்பந்தப்பட்ட வரையில் மந்திரிகளின் ஆறுதல் வார்த்தைகளைக் கொண்டு திருப்தி அடையவேண்டிய பரிதாபமான நிலையில் இருந்து வருகிறார்கள்!

வம்புச் சாவடி

சென்னை மேல் சபையில் ஒரு ருசிகரமான நிகழ்ச்சி நிகழ்ந்தது. எதிர்க்கட்சித் தலைவர் ஆளும் கட்சியினரைப் பற்றிப் பின்வருமாறு குற்றம் சாட்டினார். எதிர்க் கட்சியினர் பேசிக் கொண்டிருக்கும்போது ஆளும் கட்சியினர் ஓயாமல் சிரித்த வண்ணம் இருக்கின்றனராம். இது தங்களை ரொம்பவும் அலட்சியப்படுத்துவதாக இருக்கிறது என்று கூறினார்.

நான் அந்த மாதிரி நினைக்கவில்லை. எதிர்க் கட்சியினர் பேச ஆரம்பித்தால், ஆளும் கட்சியினர் தங்களை என்னவெல்லாம் குற்றங் குறைகள் சொல்லித் திக்கு முக்காட வைக்கப் போகிறார்களோ என்ற கவலை மனத்தில் இருந்து கொண்டே யிருக்கிறது. இந்தக் கவலையையும் கஷ்டத்தையும் சமாளிக்க என்ன வழி என்று பார்த்தார். பொய்யாமொழிப் புலவராகிய திருவள்ளுவர் சொன்னதே சரி என்று உணர்ந்து நடந்து கொள்ளுகிறார். "இடுக்கண் வருங்கால் நகுக!" என்று கூறியவர் திருவள்ளுவரே அல்லவா? திருவள்ளுவர் சொல்லித் தந்திருக்கும் இந்த அரிய உபாயத்தை இதிலாவது நமது மந்திரி பின்பற்ற முடிந்ததே என்று எனக்கு அளவு கடந்த திருப்தி.

★

பெயரில் என்ன இருக்கிறது! ரோஜாவை வேறு எந்தப் பெயரிட்டுத்தான் அழையுங்களேன். அதன் மணத்தில் ஏதாகிலும் மாற்றம் ஏற்பட்டுவிடப் போகிறதா என்ன? ஒன்றுமில்லை.

இவ்வாறு ஷேக்ஸ்பியர் என்ற கவிஞன் கூறினான். இதில் ஓரளவு உண்மை யிருக்கத்தான் செய்கிறது!

ரோஜாவுக்கு மணம் இருக்கிறது. ஆனால் மணமோ குணமோ இல்லாத புஷ்பங்கள் எத்தனையோ இருக்கின்றன! அவற்றின் மதிப்பெல்லாம் பெயரில்தான் இருக்கிறது!

சென்னை முதலிய நகரங்களில் உள்ள பெரிய மனிதர்களைப் பாருங்கள். அவர்கள் தோட்டக் கலையில் தங்களுக்கு அளவு கடந்த ஆர்வம் என்று சொல்லிக் கொள்வார்கள். அவர்கள் தோட்டத்தில் என்ன என்ன புஷ்பச் செடிகள் வைத்திருக்கிறார்கள் என்று கேளுங்கள். அவர்கள் தடபுடலான ஓசையுள்ள நீள நீளப் பெயர்கள் சொல்வார்கள். அந்தப் பெயர்களைக் கேட்கும் போதே அவைகளைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் பிறந்துவிடும். போய்ப் பார்த்தால் வாசனையில்லாத காட்டுப் புஷ்பங்களாக இருக்கும்!

நமது பழைய சென்னை ராஜதானியைச் சேர்ந்த தொழிலாளர் தலைவர் ஸ்ரீ வி. வி. கிரி அவர்களை நேயர்களுக்கு நினைவிருக்கலாம். அவரை உத்தரப் பிரதேசத்துக்குக் கவர்னராக நியமித்திருக்கிறார்கள். இவருக்கு முன்பு உத்தரப் பிரதேசத்தில் கவர்னராக இருந்த திரு கே. எம். முன்ஷி, கவர்னர் என்ற சொல்லை "ராஜ்யபால்" என்று ஹிந்தியில் மொழிபெயர்த்து வழங்கிவரச் செய்தார். இப்பொழுது கவர்னராக வந்துள்ள திரு வி. வி. கிரி உத்தரப் பிரதேசத்துக்குப் போய்ச் சேர்ந்தவுடன் செய்த முதல் காரியம் என்ன தெரியுமா? ராஜ்ய பாலாவது ராஜ்யமோராவது? எல்லாம் பழைய பெயரிட்டே கவர்னர் என்று அழையுங்கள் என்றார்.

அத்துடன் விட்டாலும் பரவாயில்லை. "கவர்னர் என்றால் சும்மா நாற்காலியில் உட்கார்ந்திருப்பது என்று நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள்? என்றால் அப்படியெல்லாம் சும்மா இருக்க முடியாது!" என்று சொல்லியிருக்கிறார். இது மந்திரி சபையிலும் உத்தரப் பிரதேச அரசியல் வட்டாரங்களிலும் பெரும் சர்ச்சையைக் கிளப்பிவிட்டிருக்கிறது!

★

உத்தரப்பிரதேச விஷயம் இப்படி என்றால் மத்தியப் பிரதேச விஷயம் என்ன தெரியுமா?

ஏதோ ஒரு பலவீனமான நிமிஷத்தில் காங்கிரஸ் மேலிடத்தார் தேர்தலில் தோற்றுப் போனவர்களைக் கவர்னராகக்கூட நியமிப்பதாக இல்லை என்று சொல்லி வைத்தார்கள். அது இப்பொழுது எவ்வளவு பெரிய வம்பை விலைக்கு வாங்கி வைத்திருக்கிறது தெரியுமா!

ஸ்ரீமான் படாஸ்கரை ஞாபகமிருக்கும் என்று நினைக்கிறேன். அவர் முன்பு மத்திய சபையில் ஒரு மந்திரியாக இருந்தவர். நமது எல்லைப் பிரச்னையைத் தீர்க்கும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இவர் சென்ற தேர்தலில் தோற்றுப் போனார். அதனால் அவருக்கு மத்திய மந்திரி சபையில் இடமில்லாமற் போய்விட்டது! அதனால் என்ன, கவர்னர் பதவி கொடுத்தால் போகிறது என்று மத்திய பிரதேச கவர்னராக நியமித்தார்கள்.

காங்கிரஸ் மேலிடத்தார் சென்ற தேர்தலுக்கு முன் சொல்லிக் கொண்டிருந்த விஷயத்தை முற்றிலும் மறந்தாலும், மக்கள் மறப்பதாக இல்லை. ஸ்ரீ படாஸ்கரைப் பார்த்ததும் "தேர்தலில் தோற்றவரே திரும்பிப் போங்கள்!" என்று போபால் மக்கள் கிளர்ச்சி செய்கின்றனர்.

யாரோ சொன்னார்கள், பொது மக்களுக்கு ஞாபக சக்தி மிகக் குறைவு என்று. இது எவ்வளவு தவறு என்பதைப் போபால் மக்கள் நிரூபித்து வருகிறார்கள்.

★

சமீபத்தில் புதுதில்லி செகரடேரியட்டில் வேலை பார்க்கும் ஒரு நண்பர் சென்னைக்கு வந்திருந்தார். 'என்ன ஸார் வேலை ரொம்ப கடினமோ?' என்று கேட்டேன்.

"வேலையாவது மண்ணாங்கட்டியாவது. ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரம் வேலை யிருந்தால் அதிகம்" என்று ஒரே போடாகப் போட்டார் அவர்.

நம்முடைய சுதந்திர சர்க்கார் வேலைகளைத் துரிதமாக முடித்துவிட வேண்டும் என்ற மிக

நல்ல எண்ணத்துடன் ஒருவர் செய்ய வேண்டிய வேலைக்கு நாலு பேர்களை அமர்த்திக் கொள்கிறார்கள்! வேலையில்லாத் திண்டாட்டத்தையும் அதே சமயத்தில் ஓரளவுக்கு நீக்குகிறார்கள். மந்திரிமார்கள் மற்றும் உயர்தர உத்தியோகஸ்தர்கள் ஆகியவர்களின் நெருங்கிய நண்பர்களுக்கும் பந்துக்களுக்கும் அதே சமயத்தில் வேலை கிடைக்கிறது. அடாடா! நம்முடைய பாரத சர்க்காரின் தயாள குணத்தை என்னவென்று சொல்வது! இதே நல்லெண்ணத்துடன்தான் அவசரம் அவசரமாக ஐ. ஏ. எஸ். பரீட்சையையும் நடத்தினார்கள்!

தண்டச் செலவு செய்வதில் பாரத சர்க்காரின் இலாக்காக்கள் பலவும் ஒன்றோடொன்று போட்டி யிட்டாலும் பாதுகாப்பு இலாக்காதான் அமோகமானவெற்றிபெற்றுத் தன்னுடைய கௌரவத்தைப் பாதுகாத்துக் கொள்கிறது. சண்டை போட முடியாத விமானங்களையும் உபயோகப்படாத டாங்கிகளையும் தோட்டாக்களையும், ஒன்றுக்கு இரண்டாக விலைகொடுத்து வாங்குவதில் பாதுகாப்பு இலாகாவுக்கு வேறு எந்த இலாகாவும் போட்டியிட முடியாது என்பது சர்வ நிச்சயம்! கடைசியாக நம் பாரத சர்க்கார் மிகுந்த சிரத்தையுடன் அமைத்து வரும் கமிட்டிகளைப் பற்றிச் சிலவார்த்தைகள் கூறத்தான் வேண்டும். அடாடா! எத்தனை கமிட்டிகள், எத்தனை கமிட்டிகள்!

நாட்டின் பொருளாதார நிலையை ஆராய ஒரு கமிட்டி, ஐந்து வருடத் திட்டத்துக்குக் கமிட்டி, உணவுப் பொருள்களின் விலை உயர்வை ஆராயக் கமிட்டி, பாங்கி சிப்பந்திகளுக்காக ஒரு கமிட்டி, பத்திரிகையாளருக்கு ஒரு கமிட்டி, ருஷ்யாவுக்கு ஒரு கமிட்டி, அமெரிக்காவுக்கு ஒரு கமிட்டி, சுண்டைக்குகாய்க் ஒரு கமிட்டி, புடலங்காய்க்கு ஒரு கமிட்டி. இன்னும் எத்தனைஎத்தனையோ கமிட்டிகள். இந்தக் கமிட்டிகளுக்காகக் கோடிக் கணக்கான ரூபாய்கள் செலவாகின்றன இப்போது. தண்டச் செலவைக் குறைப்பது எப்படி என்பதற்கு ஏராளமான கமிட்டிகளை அமர்த்தியிருக்கிறார்களாம். இந்தக்கமிட்டிகள் எல்லாமாகச் சேர்ந்து கொண்டு உருப்படியான காரியம் ஒன்றைச் செய்தேதீருவார்கள். கட்டாயம் தண்டச் செலவு செய்வார்கள்!

★

சென்ற வாரம் சென்னை சட்டசபையில் கேள்வி நேரத்தின் போது திரு ஏ. வி. தாமஸ் ஒரு பெரிய அணுகுண்டைத் தூக்கி டமால் என்று அங்கத்தினர்களின் தலையில் போட்டார்!

மதுவிலக்கு அமுலில் இருந்த போதிலும் ஏராளமான சாராயம் சட்ட பூர்வமாக விற்பனையாகிக் கொண்டிருக்கும் ரகசியத்தை அம்பலமாக்கினார். இது எப்படி நடைபெறுகிறது?

சாராயம் கலந்த மருந்துகள் ஏராளமாக விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. இந்த மருந்துகளில் பெரும்பான்மை யானவைகளில் மருத்துவப் பொருள்களை விடச் சாராயமே இதிகமாக இருக்கிறது. 70 சத விகிதம், 80 சத விகிதம், 90 சத விகிதம் என்று சாராயம் கலக்கப்பட்ட மருந்துகள் ஏராளமாக விற்பனையாகின்றன. திரு ஏ. வி. தாமஸ் போட்ட அணுகுண்டு இது. அவர் அதோடு நின்று விடவில்லை. ஒரு ஹைட்ரஜன் குண்டையும் தூக்கி அங்கத்தினர்கள் மண்டையில் படார் என்று போட்டார். இந்தச் சாராயம் கலக்கப்பட்ட மருந்துகள் சென்னையில் சட்டசபை கூடும் போதுதான் ஏராளமாக விற்பனையாகின்றன என்று கூறினார் திரு தாமஸ்.

இந்த ஹைட்ரஜன் குண்டின் ஆவேசத்தைத் தாங்க முடியாமல் திரு சட்டநாத கரையாளர் துடித்தார். பின்னர் எப்படியோ சமாளித்துக் கொண்டு கம்பீரமாக எழுந்து நின்று, "திரு தாமஸ் மகத்தானதவறு செய்து விட்டார், அங்கத்தினர்களை அவமானப் படுத்தி விட்டார்" என்று எதிர்த் தாக்குதல் செய்தார்.

★

ஒரு நல்ல விஷயத்தைப்பற்றி அதிகமாகப் பேசினால் கெட்டுவிடுவது உண்டு. நிச்சயம் அதைப் பற்றிப் பேசாமலிருந்தாலே ஒரு சின்னஞ்சிறு காரியத்தினால் நல்ல பயன் கிடைத்துவிடும். பம்பாய் நகர சபையில் பெரும்பாலான அங்கத்தினர்கள் சம்யுக்த மகாராஷ்டிரத்தைச் சேர்ந்தவர்கள்; அவர்கள் பம்பாய் மகாராஷ்டிர மாகாண மாக்க வேண்டும் என்றும், ஒரு மொழி ராஜ்ய மாக்க வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தை ஆதரித்துப்பேசிய ஒரு அங்கத்தினர் தெலுங்கு மொழியில் பேசினாராம். இது ஒன்றே போதுமே பம்பாய் பன்மொழி ராஜ்யமாகத் தான் இருக்க வேண்டும் என்று சொல்லுவதற்கு! ஆனால் ஹொசூரைக் கேட்கும் ஆந்திரர்கள் இனி பம்பாயையும் கேட்கலாம் என்று தோன்றுகிறது!

ஜூன் மாதச் சிறுகதைப் போட்டியில் நூறு ரூபாய் பரிசு பெற்ற

"தமையன் அளித்த காணிக்கை"

என்னும் கதை ஜூலை 21-ந் தேதி கல்கி இதழில் பிரசுரமாகிறது.

பரிசு பெற்றவர்: **திருமதி மும்தாஸ், 'ஜமீலா'**

24, நாலாவது மெயின் ரோட், ராஜா அண்ணாமலைபுரம், சென்னை-28

ஆரோக்கியத்தை விரும்புவோர் எப்பொழுதும் லைப்பாய் சோப் உபயோகித்தே நீராடுவர்

விளையாட்டுக்கள் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதவை — ஆனால் விளையாடும்போதாகட்டும், வேலை செய்யும்போதாகட்டும் நாம் அழுக்காகி விடுவது சகஜம். நம் ஆரோக்கியத்திற்கு நிரந்தரமாக ஆபத்து விளைவிக்கும் நோய்க் கிருமிகள் அழுக்கில் இருக்கின்றன. அழுக்கிலுள்ள கிருமிகளைக் கழுவிக்களைந்து உங்களைக் காப்பது லைப்பாய் சோப்.

லைப்பாய் சோப் தேய்த்து ஸ்நானம் செய்வதால் ஓர் புதுமலர்ச்சியை உங்களால் உணரமுடியும்; சோர்வு நீங்கும். தினந்தோறும் லைப்பாய் சோப் உபயோகித்து நீராடுங்கள்—அழுக்கிலுள்ள கிருமிகளிடமிருந்து உங்கள் ஆரோக்கியத்தைக் காத்துக் கொள்ளுங்கள்.



L. 265-50 TM

தமிழ் பல்கலைக் கழகம்

கொழும்பு, ஜூலை 6வ.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தற்காலிகத் தலைவரான ஸ்ரீ கே. ராஜலிங்கம் இவ் வாரம் விடுத்துள்ள ஒரு முக்கியமான அறிக்கையில் பாஷைப் பிரச்னை சம்பந்தமாக அரசாங்கம் எவ்விதம் நேரடிப் பேச்சு நடத்த ஆரம்பித்திருக்கிறதோ, அதேபோல இலங்கை இந்தியர்களின் பிரச்னைகளைப் பற்றியும் அவர்களுடைய பிரதிநிதிகளோடு நேரடியான பேச்சுக்களை ஆரம்பித்துச் சுமுகமான முடிவு காண முயற்சி செய்ய வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறார்.

இலங்கைப் பிரஜாவுரிமை கோரி மனுக் கொடுத்த சுமார் எட்டரை லட்சம் பேர்களில் பெரும்பாலோருடைய மனுக்களைப் பிரஜா பதிவு இலாகா ஏதோ ஒரு விதமாகப் பட்டுவாடாச் செய்து தனது வேலையை அநேகமாக முடித்துக் கொண்டு விட்டது. இந்த இலாகாவுக்கு நடப்பு நிதி வருடத்தில் ரூ. 26 லட்சம் செலவிடப் பட்ஜட்டில் பணம் ஒதுக்கியிருந்தார்கள். அடுத்த நிதி வருடத்துக்கு ரூ. 3 லட்சம் மட்டுமே ஒதுக்கியிருப்பது இந்த இலாகா மூடப்பட இருப்பதைச் சுட்டிக் காட்டுகிறது. இவ் வருட முடிவில் பிரஜா பதிவு இலாகா மூடப்படும்பொழுது, பிரஜாவுரிமை கோரிய எட்டரை லட்சம் இந்தியர்களிலே அரை லட்சம் பேர்களுக்கு மட்டுமே உரிமை கிடைத்திருக்கும்; பாக்கி எட்டு லட்சம் பேர்கள் நாடற்றவர்களாக்கப்பட்டிருப்பார்களென்று மதிப்பிடப்படுகிறது.

இந்த எட்டு லட்சம் நாடற்றவர்களின் தலைவிதியை நிர்ணயிக்க அரசாங்கம் என்ன செய்யப் போகிறது என்பதுதான் முக்கியமான கேள்வி. இவர்கள், என்ன நேரிட்ட பொழுதிலும் இலங்கையை விட்டு வெளியேறப் போவதில்லை யாதலால் இவர்களுடைய பிரச்னை இலங்கையின் பிரச்னையே தவிர, இந்தியாவின் பிரச்னையல்ல. ஆகையால்தான் நேருஜியுடன் பேசுவதாகச் சொல்லிக் காலம் கடத்தாமல் சுயநலமின்றி முன்னிட்டாவது இலங்கை அரசாங்கம் விரைவில் ஒரு தீர்வு காண வேண்டுமென ஸ்ரீ ராஜலிங்கம் வலியுறுத்தியிருக்கிறார்.


இமிகிரேஷன் கண்ட்ரோலர் ஸ்ரீ எச். இ. தென்னக்கூன் தமது சென்ற 1956ம் வருடத்திய நிர்வாக அறிக்கையை இப்பொழுது வெளியிட்டிருக்கிறார். இமிகிரேஷன் இலாகா 1949ம் வருடம் ஆரம்பித்தபொழுது பெரும்பாலான இந்தியர்களைக் கட்டுப்பாடு சட்டத்துக்கு உட்படுத்துவதிலேயே கவனம் செலுத்தி வந்ததென்றும் இப்பொழுது அந்த இந்தியர்களை இலங்கையை விட்டு வெளியேற்றத் தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றனவென்றும் ஸ்ரீ தென்னக்கூன் தமது அறிக்கையில் கூறுகிறார். அவர் அறிக்கையின்படி சென்ற வருடத்தில் மட்டும் 16,000 இந்தியர்கள் இலங்கையிலிருந்து நிர்ப்பந்தமாக வெளியேற்றப் பட்டிருக்கிறார்கள். இவர்களைத் தவிர மேலும் 20,000 இந்தியர்கள் வலுவில் தாங்களாக இலங்கையை விட்டுப் போயிருக்கிறார்கள். இவர்களைத் தவிர 1955ம் ஆண்டில் மேலும் சுமார் 30,000 இந்தியர்கள் இலங்கைக்கு ஒரு பெரிய 'கும்பிடு' போட்டு விட்டு வெளியேறியிருக்கிறார்கள். இலங்கைப் பிரஜாவுரிமை கேட்காமல் இந்தியா பாஸ்போர்ட்டுடன் இந்தியப் பிரஜைகளாக இலங்கையில் இருப்பதாக மதிப்பிடப்பட்ட சுமார் ஒரு லட்சம் பேர்களில் ஏறக்குறைய 62,000 பேர்கள் ஏற்கனவே இந்தியாவுக்குத் திரும்பி விட்டனர். இவர்களுடைய புனர் வாழ்வுக்கு இந்திய அரசாங்கமோ அல்லது சென்னை ராஜ்ய அரசாங்கமோ திட்டமிட்டு ஏதும் உதவி செய்யாதது இலங்கையில் எஞ்சியிருக்கும் இந்தியப் பிரஜைகளுக்கு மிகுந்த கவலையை அளித்து வருகிறது.

* * *

தமிழ் மக்களுக்காக ஒரு தனிப் பல்கலைக் கழகத்தை ஸ்தாபிக்கத் தீவிரமாகப் பாடுபட்டு வரும் இயக்கத்தின் ஆதரவில் கொழும்பு அலக்ஸாண்ட்ரா பிளேஸிலுள்ள ஒரு பிரும்மாண்டமான கட்டடத்தில் நாவலர் கழகம் இவ்வாரம் திறந்து வைக்கப்பட்டது. லண்டன் பரீட்சைகளுக்கு இலங்கைத் தமிழ் மாணவர்களைத் தயார் செய்வதற்காக நிறுவப்பட்டிருக்கும் இந்தக் கழகத்துக்கு ஸர் கந்தையா வைத்தியநாதன் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவ் வாரம் இந்தக் கழகத்துக்கு மாணவர்களைப் பதிவு செய்து கொள்ளும் வேலை ஆரம்பமாயிற்று. இலங்கைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த தமிழர்களான பல பிரபல பேராசிரியர்கள் நாவலர் கழகத்துக்கு இலவசமாகச் சேவை செய்ய முன் வந்திருக்கிறார்கள்.

தமிழ் பல்கலைக் கழக இயக்கத்தின் பொதுக் கூட்டமொன்று இவ்வாரம் கொழும்பில் நடைபெற்றபொழுது தமிழ் பேசும் மாணவர்களுக்குப் பிரத்தியேகமாக ஒரு தமிழ் பல்கலைக் கழகத்தை நிறுவ வேண்டுமென்று பிரதம மந்திரியிடம் மறுபடியும் வற்புறுத்துவதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்த இயக்கத்துக்கு முன்னாள் சட்டசபைத் தலைவரான ஸர் வைத்திலிங்கம் துரைஸ்வாமி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். தமிழ்ப் பல்கலைக் கழகத்தை ஆரம்பிக்கும் பொழுது அதற்கு யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய தமிழ்ப் பகுதிகளிலெல்லாம் கிளைகளை ஏற்படுத்த வேண்டு மென்றும் இது சம்பந்தமாக விரைவில் பிரதம மந்திரியிடம் தூது போய்ப் பேசுவதென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த இயக்கத்தினர் நாடு முழுவதும் தீவிரமாகப் பிரசாரம் செய்து நிதியும் திரட்டி வருகிறார்கள்.

—ரஜனி



முரசு

எல்லோருக்கும் தெரிந்த பாரதியார் பாடல் :

ஒன்றென்று கொட்டு முரசே—அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே !
நன்றென்று கொட்டு முரசே !—இந்த
நானில மாந்தருக் கெல்லாம்.'

முரசுக்கு அன்பைப் பற்றியோ, ஒற்றுமையைப் பற்றியோ, நானில மாந்தர்க்கு வரப்போகும் நன்மையைப் பற்றியோ என்ன தெரியும்? யாராவது தட்டினால் 'டம டம' 'டுமு டுமு' என்று ஒலிக்கும், அவ்வளவுதான். பேசுவது, உண்மையில், பாரதியார் உள்ளம். அது முரசின் குரலாக நின்று பேசுகிறது. இந்த நிலை, இலக்கிய உலகில், சாதாரணமாகக் காணப்படும் ஒன்று. அந்த உலகில், தவளை வேதம் ஓதும், தாமரை தத்துவம் பயிலும், தண்ணீர் நாட்டியப் பாடல் பரிமாறும், முரசோ அன்பும், ஒற்றுமையும் ஓங்க முழங்கும். இதை எண்ணித்தானோ என்னவோ, ஆங்கில மகாகவி ஷேக்ஸ்பியர்,

ஓடுகின்ற ஓடையிலே
உலவாத பெருநூல்கள். ஊமைக்கல்லில்
தேடரிய தத்துவங்கள்
தேர்ந்த பொருள் அனைத்திலுமே.
தேவிட்டா நன்மை

என்று பேசினார்.

பேசுவது பொருள் அன்று, பொருளின் மூலமாகக் கவிஞனுடைய உள்ளமே. ஆகவே, ஒரே பொருள் வெவ்வேறு கவிஞருடைய குரலாக அமையும்போது, வெவ்வேறு விதமாகப் பேசும். பாருங்களேன், பாரதியாருடைய முரசு 'வெற்றி எட்டுத் திக்கும் எட்ட'க் கொட்டுகிறது; அன்பென்று முழங்குகிறது; 'மக்கள் அத்தனை பேரும் நிகர் என்று பேசுகிறது; 'சூதுப் பிரிவுகள் போனால்', 'துன்பங்கள் யாவுமே போகும்' என்று கூறுகிறது.

ஆனால், அதே முரசு, வேறொரு கவிஞன் பார்க்கும்போது, போர் முரசாகக் காட்சி தருகிறது. 'வாருங்கள், மக்களே, திரண்டு வாருங்கள். பகைவர்கள் வந்து விட்டார்கள். சுதந்திரம் பறி போய் விடும். உங்கள் முன்னோர்கள் தேடி வைத்த உரிமைச் செல்வமெல்லாம் அழிந்து விடும். அழிவதற்குள், போரிலே, நீங்களே அழிந்து போனாலும் குற்றமில்லை. வாருங்கள், வந்து போரிலே குதியுங்கள். இது உங்கள் கடமை' என்று, நாளைக்குத் தாழ்வு வருமோ என்ற பயத்தை நாடெங்கும் கூவி அழைக்கிறது போர் முரசு. இதைக் கேட்டு, மக்கள் மருள்கிறார்கள். திரள் திரளாக, போர்க்கோலம் பூண்டு, தரை அதிர நடந்து, முரசைச் சுற்றி அணி வகுத்து நிற்கிறார்கள். இதைக் காண்கிறான் கவிஞன் :

கோடிகோடிப் படைவீரர் குழுமினர் :
கொக்கரித்துத் தரை குலுங்க நடந்தனர்;

நாடுமுற்றிலும் கலங்கப் பயத்தினை
நாட்டி முழங்கிய முரசினைச் சூழ்ந்தனர் :

அதிர்ந்தது முரசு :
'சுதந்திர மக்களே!
முந்தையோர் தந்த
சொந்தமாம் உரிமை

அழியுமுன் போரிலே
அழிவதே கடன்' என
அதிர்ந்தது முரசு.

முரசின் அழைப்பைக் காதிலே வாங்கிய உழவன்—மண்ணின் இதயத்தோடு ஒட்டித் தன் வாழ்வைத் துடிக்க விட்டு, மண்ணைப் பொன்னாக்கும் பாட்டாளி ஒருவன்-எண்ணுகிறான் : ' உரிமையைப் பாதுகாக்க வேண்டியதுதான். எதற்கு ? வாழ்வதற்கு. ஆமாம், இந்தப் போரில்



செத்து மடிவதுதான் வாழ்க்கையின் பெருமையோ? அப்படி நான் மடிந்து விட்டால், இதோ கண்முன்னே தங்கத்தைப் போல் மின்னும் இக் கதிர்கள் முற்றும்போது, அவற்றை அறுவடை செய்து, தானியப் பொன்மணிகளைச் சேர்ப்பது யாரோ?'

முரசு இதை எப்படியோ தெரிந்து கொண்டு நகைக்கிறது. 'அறுவடையா? நல்ல வேடிக்கை! போர்க்களத்திலே அறுவடைக்குப் பஞ்சமா? வா, சாவின் தளராத கை, அங்கே பிரும்மாண்டமான அறுவடை செய்வதைக் காணலாம், வா' என்று கை கொட்டிச் சிரிக்கிறது முரசு.

'என்னையே கேட்கிறேன். இடியும் இவ்வாழ்க்
கையின்
ஏற்றமும் போரில்நான் இடிந்து மடிதலோ?
பொன்வயல் தனிலிதோ முற்றும் கதிர்களைப்
போற்றிப் பின் அறுவடை செய்வதும்
யாவரோ?

முரசம் ஒலித்தது:
'விரைந்திடு, விரைந்திடு!
அறுவடை இதைவிட
நிறைந்தது செருவில்
சாவின் கையிலே
மேவிடும் காண்' எனச்
சாற்றிடும் முரசு.

முரசொலியைக் கேட்ட இன்னொருவன்—அவன் தத்துவக் கண்ணோடு எதையும் பார்க்கிறவன் - அவன் நினைக்கிறான்: 'ஆமாம், இந்தப் போரிலே வெற்றி கிடைப்பதாகவே வைத்துக் கொள்வோம். அப்போது தான் என்ன? என்ன நன்மை கிட்டிவிடப் போகிறது? வெற்றியின் காரணமாக, மற்றவர்கள்மேல் வேண்டுமானால் ஆதிக்கம் செலுத்தலாம். அவர்கள் பயந்து நடுங்கும்படியாக ஆட்சி புரியலாம். அதனால் நமக்கு நன்மை உண்டா? இல்லை. நாம் மற்றவர்களுக்குச் செய்யும் கொடுமை, முடிவில் ஒன்று பத்தாகப் பெருகி நம்மையே அழித்து விடும். இது நிச்சயம். போராவது, வெற்றியாவது, கொள்ளிக்கட்டையால் தலையைச் சொறிந்து கொண்ட கதையாகத்தான் முடியும்.

'வா' என்று அழைக்கிறது முரசு. 'முதலில் வெற்றியைப் பெறு, பெற்ற பின் அல்லவா, நன்மை தீமை ஐந்தொகைக் கணக்கைப் புள்ளி விவரத்தோடு தயாரிப்பதில் ஈடுபட முடியும்? வா, போரில் இறங்கு, வெற்றி சூடு. சூடியபின் மற்றதைப் பற்றி எண்ணலாம்' என்று சந்தர்ப்பவாதம் அருள்கிறது முரசு.

உற்றிடும் போரிலே வெற்றியை ஊன்றிடில்
பெற்றிடும் நன்மைதான் யாதெனப்
பார்க்கலாம்.
வெற்றியில் மற்றவர் வெருவிடச் சூழ்ந்திடில்
வேதனை ஆயிரம் நம்மையே சூழலாம்.

'வா' என்றழைத்து
தாவிடும் முரசு
வெற்றியை முற்றும்
பெற்ற பின் அன்றே
புள்ளிக் கணக்கெலாம்
கொள்வது? வா' எனப்
புகன்றது முரசு.

'வெற்றி அவ்வளவு நிச்சயமா உனக்கு? வெற்றி கிடைத்தால் மிச்சம் என்ன என்று கணக்குப் பார்க்கிறாயே!' என்று முரசு தனக்குள் சிரித்துக் கொள்கி




றதோ? போர் என்றால், வெற்றி கிட்டுவதன் முன் எத்தனை பேர் சாக வேண்டும்? உற்றார், உறவினர், சகோதரர் இவர்கள் யாவரும் கண் முன்னே அடிபட்டு விழுவதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? நெஞ்சம் இடிந்து போகாதா? நமக்கு உயிருக்கு உயிரானவர் எல்லோரையும் போரின் கொள்ளி வாயிலே தள்ளி விட்டு, எப்படி உயிர் வாழ முடியும்? இப்படிக் கிடைக்கும் வெற்றியும் ஒரு வெற்றியா?

இப்படி எண்ணுகிறான் வேறொருவன், குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் கலங்கிய அர்ஜுனனைப்போல. முரசு அவனைப் பார்த்துச் சொல்கிறது: 'உற்றார் உறவினரோடு ஒன்றாக நீயும் மடிவது, கோழையாய் உயிர் வாழ்வதை விட மேல் அல்லவா? வா.'

கொட்டிப் பீரங்கிகள் வெட்டும் முழக்கினில்
குண்டுகள் வீசிச் சுழலும் களத்தினில்
இட்டமானவர் சோதரர் வீழ்வதை
இருந்து காணில் என் நெஞ்சம் இடியுமோ?

இரைந்தது முரசு:
'விரைந்திடு விரைந்திடு.
சாவிலே நமருடன்
சேருதல் நன்னினும்
கோழையாய் வாழுதல்
பிழையே காண்' எனக்
கொட்டிடும் முரசு.

இப்படி, போருக்குத் திரண்டு எழுந்த மக்கள் மனத்திலோ எத்தனையோ தாபங்கள், கவலைகள், ஐயப்பாடுகள். இருந்தாலும், போரினால் நன்மை ஏதாவது வரும் என்று நம்பவும் நம்பினர். போரை விட்டு விலக முடியாமல் தவித்தனர்.

இந்தத் தருணத்தில் ஒரு குரல் எழுந்தது. 'மனித குலம் முழுவதும் என்னுடைய மக்கள் அல்லவா? எல்லோரையும் வாழ்விப்பதல்லவா மனிதனுடைய உரிமை? அதைவிடச் சிறந்த சுதந்திரம் ஏது, உரிமை ஏது? எதற்காகப் போர்? என் அருகிலே வாருங்கள்' என்று அந்தக் குரல் கனிவுடன் அழைத்தது.

இந்தக் குரலை மக்கள் கேட்டார்களோ இல்லையோ, முரண்கள் எல்லாம் அடங்கின. அவற்றின் குரலாக இதுவரை நிமிர்ந்த போர் முரசு அவிந்தது.

'இதோ வந்தோம்' என்று முரசை விடுத்து இறைவனை நாடி வணங்கினர் மக்கள்:

இப்படிப் பல பல எண்ணினர், பேசினர்
எப்படியோ நன்மை வருமென நம்பினர்.
தப்ப வழியிலாது ஏங்கித் தவித்தனர்
தம்மை ஈடேற்ற வான் குரலொன்று
அழைத்தது:

அருமை மக்களே,
வருவீர் என்பால்!'
முரசம் அவிந்தது;
முரண்கள் அடங்கின.

'வந்தோம், இறைவா,
வந்தோம்' எனவே
வணங்கினர் மக்கள் *

அந்தக் காலம் என்று வருமோ?

---

* Bret Harte: The Drum. பிரெட் ஹார்ட்டி என்ற அமெரிக்கக் கவிஞர் இயற்றிய 'முரசு' என்ற பாடல்.

மாதர்குல திலகங்கள்



நமது ஜனநாயக ஆட்சி முறையில் 'சம உரிமை' என்ற தராசில் போட்டு நீதி வழங்குவதாகக் கூறப்படுகிறது. ஆனால், பாரத மக்களில் சரிபாதித் தொகையினராக விளங்கும் மாதர்கள் நலனைக் கருதும் விஷயத்தில் நீதி வழங்கும் தராசை அரசாங்கம் சரியாக உபயோகிப்பதாகக் கூறுவதற்கில்லை. சென்னை நகரில் போலித் தராசு படிக்கற்களை உபயோகித்து, வீடுகளில் ஆண் பிள்ளைகள் இல்லாத சமயத்தில் ஸ்திரீகளை ஏமாற்றும் விற்பனைக்காரர்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கலாம். அம்மாதிரிதான் இந்த ஜனநாயகத் துறையிலும், அரசியல்வாதிகள் மாதர் சமுதாய நலனைப் புறக்கணிக்கிறார்களோ என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. உதாரணமாக, பஸ்களில் நாலைந்து இடங்களை ஸ்திரீகளுக்கென்று ஒதுக்கி வருகிறார்கள். ரயில் வண்டியில் ஒரே ஒரு பெட்டியையே ஸ்திரீகளுக்கென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். உத்தியோகத் துறையிலும், மந்திரி சபைகள் அமைப்பு விஷயங்களிலும், சட்டசபைக்கு அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையிலும் இதே பட்சபாதம்தான். இம்மாதிரி பாரபட்ச நிலைமை கல்வித் துறையையும் விட்டுவிடவில்லை. கல்வித் துறையில், பெண்களுக்குச் சரியான நீதி வழங்க வேண்டும் என்று நீண்ட காலமாக வற்புறுத்தி வரப்படுகிறது. இப்படி வற்புறுத்தி வரும் சென்னை ராஜ்ய, மாதர்குலக் கல்வியாளர்களில் பேராசிரியை ஸ்ரீமதி மோனா ஹென்ஸ்மன் அவர்களைக் குறிப்பிடலாம்.

ஸ்ரீமதி மோனா அவர்கள் சிறந்த கல்வியாளர் மட்டுமல்லாது சிறந்த சட்டசபையாளர், பேச்சாளர், சமூகப் பணியாளர் முதலிய பெருமைகளுக்கும் உரியவர். 1937-ம் ஆண்டு முதல் ஐந்து வருஷ காலம் சென்னை மேல் சட்டசபை அங்கத்தினராக விளங்கிப் பணியாற்றியவர். தலைவர் ராஜாஜி ராஜ்ய மந்திரிப் பொறுப்பு ஏற்ற அந்தநாளில், சட்டசபைகளில் நடக்கும் விவாதங்களும் கேள்வி பதில்களும் எவ்வளவு விறுவிறுப்பாக விளங்கி வந்தன என்பதை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். அப்போது ஸ்ரீமதி மோனா ஹென்ஸ்மன் அவர்கள் சிறந்த கேள்வியாளர்களில் ஒருவராக விளங்கி வந்தார். கேள்விகளுக்குச் சரியான பதில்கள் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் அவர் சில சட்டசபை அங்கத்தினர்போல வாய்மூடி மௌனியாக இருப்பதில்லை. தமது பாராட்டுதலையும் நன்றியையும் வெளியிடுவது வழக்கம். இவையெல்லாம் உண்மையாகவே சமூகத்துக்குத் தொண்டாற்ற முன்வந்திருக்கும் ஒரு சட்டசபையாளருக்குரிய சிறந்த அம்சங்கள். ஸ்ரீமதி மோனா ஹென்ஸ்மன் அத்தகைய சிறப்புக்கள் கொண்ட சிறந்த சட்டசபையாளராகவும் பணியாற்றிவந்தார். சரியான கேள்விகளுக்குச் சரியான பதில்களைப் பெறுவதில் ஸ்ரீமதி மோனாஹென்ஸ்மன் அவர்களுக்குள்ள சிறப்புக்கு மற்றொரு உதாரணம் கூறவேண்டுமானால், சென்னை ஆந்திர சர்வகலாசாலைகளின் பரீட்சாதிகாரிகளில் ஒருவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதைக் குறிப்பிட வேண்டும். சரித்திரம், ஆங்கிலம், பிரஞ்சு இப்பகுதிகளின் பரீட்சாதிகாரியாக ஸ்ரீமதி மோனா ஹென்ஸ்மன் மேற்படி சர்வகலாசாலைகளினால் நியமிக்கப்பட்டதைத்தான் குறிப்பிடுகிறோம். ஸ்ரீமதி மோனா ஹென்ஸ்மன் பிரஞ்சு மொழிப் பயிற்சியிலும் பட்டத்தேர்வு பெற்றவர். சென்னையில் கௌரவ மாஜிஸ்திரேட்டாகவும், இளங் குற்றவாளிகள் நீதிமன்றத் தலைவராகவும் பதவி வகித்தவர். அவர் பதவி வகித்த காலங்களில் அந்தப் பதவிக்கு மதிப்பும் மரியாதையும் மேலும் உயரும் முறையில் உண்மையிலிருந்து பிறழாமல் நடந்து கொண்டதைக் குறிப்பிட வேண்டும்.

சென்னை சர்வகலாசாலை 'செனெட்' அங்கத்தினராக விளங்கியவர். ராஜ்யத்தில் அவர் சம்பந்தப்படாத கல்வி அபிவிருத்தித் திட்டங்களோ, விசாரணைக் கமிட்டிகளோ இல்லை என்று கூறும்படி, கல்வித் துறையில் பணியாற்றி வருகிறார்கள். வெளி நாட்டுப் பிரயாண அநுபவம் மிக்கவர். அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், சுவீடன், ரஷ்யா, சீனா, பர்மா முதலிய நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்து அந்நாடுகளில் மாதர்குல நலனும், கல்வி அபிவிருத்தியும் எவ்வாறெல்லாம் வளர்ந்து வருகின்றன என்பனவற்றை ஆராய்ந்துவந்தவர். ஸ்ரீமதி மோனா அவர்கள் தாம் பெற்ற இந்த அனுபவத்தைத் தமிழ்நாட்டு மாதர்குலம் பலனடையும் வகையில் தொண்டாற்றி வருகிறார். சென்னை மாதர் சமூகத்தின் சிறந்த பணியாளர் அவர்; இந்திய மாதர் சமுதாயத்தின்சிறந்த தொண்டருமாவார். தன்னடக்கமும், மரியாதைப் பண்பாடும் நேர்மையும் வாய்ந்த அவரது சேவை மாதர் குலத்துக்கு நீடித்துக் கிடைத்து வரவேண்டும் என்று வாழ்த்துகிறோம்.



சுமார் ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் தாதுசேனன் என்னும் மன்னன் இலங்கைத் தீவை ஆண்டு வந்தான். அவனுக்குப் பட்டத்து ராணியின் மூலம் மொக்கல்லானன் என்ற குமாரனும், ஒரு குமாரத்தியும் பிறந்தனர். ஆசைநாயகியின் மூலம் காசியப்பன் பிறந்தான். புதல்வியைத் தம் தங்கை மகனுக்குத் திருமணம் செய்வித்து அவனைத் தம்முடைய படைக்குத் தலைவனாக்கினான் மன்னன்.

படைத் தலைவனுடைய இல்வாழ்க்கை அவ்வளவு சுவையாக இல்லை. படைத் தலைவன் மனைவியைக் கொடுமைப்படுத்தினான். இதற்கு அவன் தாயும் உடந்தையாக இருந்தாள். மகள் கண்ணீர் விட்டுக் கலங்கி நிற்பதைக் கண்ட தாதுசேனன் துடிதுடித்துப் போனான். மகளைக் கொடுமைப் படுத்தியவள் தம் தங்கை என்பதை அறிந்ததும் அவன் கோபம் எல்லை மீறிச் சென்றது. மகள் பாசம் சகோதர பாசத்தை அமுக்கி விட்டது. படைத் தலைவனின் தாயாரை, மகளின் மாமியாரை, தன் சொந்த சகோதரியை உயிரோடு வைத்துக் கொளுத்திவிட்டான்.

தன் தாயைக் கொன்ற மன்னன் மீது படைத்தலைவனுக்குக் கடும் கோபம் ஏற்பட்டது. தாதுசேன மன்னன் செய்த இந்தக் கொடுமைக்குப் பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்று தீர்மானித்தான். மன்னனின் ஆசைநாயகியின் குமாரனான காசியப்பன் மனத்தைக் கலைத்தான். அவனுடன் சதியாலோசனை செய்து தாதுசேனனைச் சிறைப்படுத்தச் செய்தான். காசியப்பன் படைத் தலைவன் வார்த்தையில் மயங்கி விட்டான். தன் தந்தையைச் சிறையில் அடைத்தான். அடுத்தகணம் காசியப்பன் தானே அரசன் என்று சொல்லிச் சிங்காதனம் ஏறினான். அரசக்குடையவனான மொக்கல்லானன் தன் உயிருக்கும் ஆபத்து வருவதை உணர்ந்தான். உயிர் பிழைத்தால் போதும் என்று தமிழ் நாட்டுக்கு ஓடிப் போனான். சில நாளைக்கெல்லாம் தாதுசேன மன்னன் உண்ண உணவின்றி, குடிக்கத் தண்ணீர் இன்றிச் சிறையிலேயே செத்து மடிந்தான். தந்தையைக் கொன்றதற்குத் தான் தான் காரணம் என்பதை உணர்ந்த காசியப்பனுக்குப் பிரம்மஹத்தி பிடித்தது. தன் சகோதரன் மொக்கல்லானன் என்றைக்காவது திரும்பி வந்து தன்னைக் கொன்று பழி வாங்கப் போகிறான் என்ற பீதி உண்டாயிற்று. அதனால் சிகிரி குன்றின்மேல் பலமான கோட்டை கொத்தளங்களைக் கட்டினான். அதற்கும் மேலே அரண்மனை கட்டிக் கொண்டு தானும் தன்னுடைய பிரம்மஹத்தியுமாக வாழ்ந்து வந்தான்.

பதினெட்டு ஆண்டுகள் ஓடி மறைந்தன. இதற்குள் தமிழ் நாட்டுக்கு வந்திருந்த மொக்கல்லானன் தமிழ் மன்னர்களின் உதவியைப் பெற்றுத் தக்க படை பலத்துடன் இலங்கைக்கு வந்தான். வஞ்சகத்தால் தன் தந்தையைக் கொன்ற காசியப்பனைக் கொன்று அரசைக் கைப்பற்றத் தீர்மானித்தான். சிகிரி கோட்டையை முற்றுகை யிட்டான். காசியப்பன் கட்டிய பலமான கோட்டை

ஆசைக்

அவனுக்குப் பயன்பட்டதா? அதுதான் இல்லை. 'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு' என்று சும்மாவா சொன்னார்கள்? கோட்டைக்குள் இருந்து சகோதரனைத் தாக்குவதை விடக் கோட்டைக்கு வெளியில் வந்து மொக்கல்லானனையும் அவன் சேனையையும் தாக்கித் தோற்கடிப்பது என்று காசியப்பன் தீர்மானித்தான். அப்படியே சிகிரி கோட்டையிலிருந்து வெளிக்கிளம்பி வந்து படைக்குத் தலைமை தாங்கிப் போர்முனைக்குச் சென்றான்.


போர்க்களத்தில் என்ன நடந்தது? காசியப்பன் ஏறி வந்த யானை வழியில் ஒரு இடத்தில் இருந்த சேற்றுக் குட்டையில் இறங்க ஆரம்பித்தது. யானை எங்கேயாவது சேற்றில் அகப்பட்டுக் கொள்ளுமோ என்று பயந்த காசியப்பன் அது சேற்றுக் குட்டையில் இறங்காமல் திருப்பி வேறு வழியாக ஓட்டினான். இதைப் பார்த்ததும் அவனைச் சுற்றி யிருந்த வீரர்கள், "மன்னர் திரும்பி விட்டார்" என்று கத்தினார்கள். இதைக் கேட்ட எல்லா வீரர்களும் போர்முனையிலிருந்து திரும்பி ஓடத் தொடங்கி விட்டனர். மொக்கல்லானனுக்குச் சுலபமாக வெற்றி கிடைத்து விட்டது. காசியப்பன் வேறு வழியின்றித் தற்கொலை செய்து கொண்டு மாண்டான்.

தமிழ் நாட்டிலிருந்து வந்த மொக்கல்லானன் அதே சிகிரி கோட்டையிலிருந்து மிகச் சிறப்பாக அரசாண்டான். அவனுடைய



தர்ம ஆட்சியில் மக்கள் நல்வாழ்வு வாழ்ந்தார்கள் என்று இலங்கைச் சரித்திர வரலாறுகள் கூறுகின்றன.

ஈழ நாட்டுக்குப் பிரயாணமாவதற்கு முன்னமேயே நான் இந்தக் கதையைத் தெரிந்து கொண்டிருந்தேன். அதன் பிறகு சிக்கிரி கோட்டையின்மீது ஏறிப் பார்க்காமல் இருக்க யாருக்காவது தோன்றுமா? நாங்களும் சிக்கிரி மலை மீது ஏறினோம். மலை என்றால் மிகப் பெரிய மலை என்று கூறிவிட முடியாது. சுமார் அறுநூறு அடி உயரம் இருக்கும். மலையில் கொஞ்சதூரம் ஏறியவுடன் மலையின் அமைப்பு மாறுகிறது. யாரும் ஏற முடியாத படி செங்குத்தாக நிற்கிறது. அதனால்



கடலின் அமுதம்

பகீரதன்

மலையைச் சுற்றிக்கொண்டு பாதை வளைந்து மேலே செல்லுகிறது. ஓர் இடத்தில் மலையின் மீது ஏறுவதற்கு வசதியாகப் படிக்கட்டு இருக்கிறது. அந்தப் படிகளின் மீது ஏறிச் சென்றால் படிமேலே மேலே போய்க் கொண்டிருக்கிறது. ஒரு படி இரண்டு படி என்று ஐம்பது அறுபது படிகள் ஏறிய பிறகு மலையில் ஒரு சிறு குகை இருக்கிறது. அதன் அடித்தளத்தைச் சமமாகச் செய்திருக்கிறார்கள். மேல் பகுதி குடைபோலக் கவிந்திருக்கிறது. இந்தக் குகை நீண்டு கொண்டே போகிறது. இதன் ஓரத்தில் சுவர் எழுப்பித் தாழ்வாரம் போல அமைத்திருக்கிறார்கள். இந்தத் தாழ்வாரத்தின் நீளம் சுமார் ஐந்நூறு அடி இருக்கலாம். இந்தக் குகையிலிருந்து சுமார் நாற்பதடி உயரத்தில் இன்னொரு குகை இருக்கிறது. இதற்குப் போவதற்கு இப்பொழுது இரும்புப் படிகள் அமைத்திருக்கிறார்கள். இந்த இரும்புப் படியில் ஏறிச் செல்லுவதுதான் சற்றுச் சிரமமாக இருக்கிறது. காரணம் செங்குத்தாக இருப்பதால்தான். செங்குத்தாக என்றால் ஏதோ உபசாரத்துக்காகச் சொல்லுவதாக நேயர்கள் எண்ணிவிட வேண்டாம். அசல் செங்குத்தாகச் சிறிதும் சாய்வில்லாமல் பொருத்தப்பட்டிருக்கிறது.

''இந்த இரும்பு ஏணியை ஏன் இவ்வளவு சிரமப்பட்டு வைத்திருக்கிறார்கள்?''

''இதன்மேல் ஏறிப்போனால் அதன் உச்சியில் ஒரு சின்னக் குகை இருக்கிறது. அதில்தான் உலகம் வியக்கும் வண்ண ஓவியங்கள் இருக்கின்றன. சித்திர உலகச்சிறப்பின் சிகரமாக ஆசைக்கடலின் அமுதமாக இருபத்திரண்டு உயிர் ஓவியங்கள் அழகு ராணிகளும் சேடிகளுமாக இருக்கின்றனர்.''

அப்படியானால் அதைப் பார்த்து விட்டுத்தான் செல்ல வேண்டும் என்று தீர்மானித்தோம். அந்த இரும்பு ஏணியின்மீது ஏற ஆரம்பித்தோம். பாதி தூரம் சென்றதும் தலையைச் சுற்றவே ஆரம்பித்து விட்டது. கீழே இறங்கிவிடலாமா என்றுகூடத் தோன்றியது. ஆனாலும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் மிகுந்த உற்சாகத்துடன் ஏணியில் ஏறுவதுபோல ஏறிக்கொண்டே இருந்தோம். நீண்ட நேரமாக ஏறிக்கொண்டிருந்தோம். ஆனால் ஏணிக்கு ஒரு முடிவு இருப்பதாகத் தெரியவில்லை. இதை யெல்லாம் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பதைவிட ஏணியில் ஏறிக்கொண்டே இருக்கலாம் என்று எண்ணி ஏறினோம். இந்தச் சமயத்தில் ஏணி முடிவடைந்தது. அங்கிருந்த வாசல் வழியாக உள்ளே பிரவேசித்தோம்.

அடுத்த கணம் உடம்பெல்லாம் மயிர்க்கூச்சம் எடுத்தது. இந்த உலகம் மறைந்து விட்டது. கந்தர்வ உலகத்துக்குள் புகுந்து விட்டது போலிருந்தது. வார்த்தைகளால் விவரிக்க முடியாத விந்தைக் காட்சி கண்ணெதிரில் தெரிந்தது. அதை ஆசைக்கடலின் அமுதம் என்று சொல்வதா? அற்புதத்தின் எல்லை என்று கூறுவதா? பெண்மை எனும் தெய்விகக் காட்சி என்று கூறுவதா? எப்படிச் சொல்லுவது என்றுதான் தெரியவில்லை. பெண்கள் பலர் அங்கு நின்றார்கள். பெருவகை பொங்கக் கண்ணைச் சிமிட்டாமல் பல காரியங்களில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்களில் ஒருத்தி மயக்கும் விழிகளால் நம்மைப் பார்க்கிறாள். சற்றே தலைகுனிந்து கையிலே மலர் ஏந்தி நம்மை வரவேற்கிறாள் இன்னொருத்தி. வண்ணமலர் தட்டேந்திப் பணிப்பெண் ஒருத்தி பின்னேவரக் கோலத் திருமேனியுடன் கொஞ்சும் மொழி பேசிக் கொண்டு தலைவி முன்னே செல்லுகிறாள். ஆகா, இந்தப் பெண் தெய்வங்களின் அழகை எந்த மொழியில் எழுதிக் காட்டுவேன்! கண்கள் இரண்டும் ஆளை விழுங்கும் அதிசயத்தைப் பற்றிக் கூற முடியுமா? இல்லை; அந்த மீன் விழிகளில் மிதந்த கவிதைகளைச் சொல்லிலே ஏற்றித் தான் கூறிவிட முடியுமா? தூய செம்பவளத்தை யொத்த கனி இதழ்களில் பாய்ந்த நிலவினை மறக்க முடியவில்லையே! மின்னல் கொடிபோல நின்ற பணிப் பெண்மணிகளின் மேனி அழகும், ஓங்கி முன் நிற்கும் மார்பின் பொலிவும், நீண்ட மூக்கும், அகன்ற விழிகளும் அழகு ததும்பும் அலங்காரங்களும் காவியத்தை ஓவியத்திலே காட்டுகின்றன.

கையிலே மலர்ந்த மலர் ஏந்தி ஒருத்தி வருகிறாள். அவள் அழகை எப்படி வருணிப்பது? அவள் விரல்களே மலரின் இதழ்களாகத் தோன்றுகின்றன. மலர்ந்த அந்த இதழ்கள் மலராத மலரையும் மலர வைப்பது போல் இருக்கிறது அவள் மலர் பிடித்திருக்கின்ற பாவம். மென் மலரை மென்மையாக மலர வைக்கும் அந்த விரல்களின் அழகிலே சொக்கிப் போகாமல் இருக்க முடியுமா? தலையில் அணிந்திருக்கும் அணிகளின் அழகும் அதன் அமைப்பும், கழுத்தணிகளில் காணும் கலை நயத்தின் சிறப்பும், கை வளைகளின் எழிலுமாகச் சேர்ந்து அவளை நம் கண் முன்னே ஒரு யௌவன மோகினியாக அல்லவா கொண்டு வந்து நிறுத்துகிறது? இந்தச் சித்திரத்தை அந்த ஓவியக் கலைஞன் எப்படித்தான் எழுதினானோ! எதைக் கொண்டு எழுதினானோ! வெறும் வர்ணங்களைக் கொண்டு மட்டும் எழுதிய சித்திரங்களாகவே அவை தோன்றவில்லை. பின் எப்படித் தோன்றுகின்றன? கவிதைக் கனியைப் பிழிந்து அதன் சாற்றினிலே, பண், கூத்து இவற்றின் சாரம் எல்லாவற்றையும் ஏற்றி இருக்கிறான் அந்த ஓவியக்கலைஞன். அவனுக்கு அத்துடன் திருப்தி ஏற்படவில்லை. அந்தக் காவிய வர்ணக் குழம்பிலே இன்னமுதத்தைக் கலந்து காதல் வெய்யிலிலே காயவைத்து எடுத்துக் கொண்டான். தன் ஆசைக் கடலை எல்லாம் இரட்டி அமுதம் போன்ற இந்தப் பெண்ணின் மேனியைப் படைத்திருக்கிறான். அந்த மோகினியின் மேனி பாரிஜாத மலரினுடைய அடித்தண்டின் நிறம். அவள் கூந்தல் பளபளப்பான கருநிறம். அவள் ஆடைகள் செந்தாமரை மலரின் நிறம். கையில் ஏந்தியிருக்கும் மலரோ வெள்ளை வெளேர் என்று இருக்கும் தும்பைப் பூவின் நிறம். எல்லாம் கண்ணுக்கு இனிய மனோகரமான நிறங்கள். இந்த அற்புத ஓவியத்தைத் தான் நமது ஓவியக் கலைஞர் மணியம் அப்படியே பெயர்த்து எழுதி இந்த வார 'அட்டைச் சித்திரமாக வழங்கியிருக்கிறார். சிக்கிரியா குகைக்குள்ளிருக்கும் வண்ண ஓவியங்களில் ஒன்றுதான் இது.

இந்தச் சித்திரங்களைச் சாமான்ய சித்திரங்களாகச் சொல்லிவிட முடியாது. ஒவ்வொன்றும் ஜீவ களை ததும்பும் சித்திரங்கள். ஒவ்வொன்றும் ஒரு காவியம். நூறு வருஷங்கள், இருநூறு வருஷங்கள் ஐந்நூறு வருஷங்கள், அல்ல; ஆயிரத்து ஐந்நூறு வருஷங்களுக்கு முன்னால் எழுதப்பட்டவை. ஆனாலும் அவற்றின் ஜீவ களை மாறவில்லை; வர்ணங்கள் மங்கவில்லை; நேற்று முந்தாநாள் எழுதியவை போலப் புத்தம் புது மணத்துடன் திறம் குன்றாமல் தோற்றமளிக்கின்றன.

இந்தச் சித்திரங்கள் எதன்மேல் எழுதப்பட்டிருக்கின்றன தெரியுமா? நல்ல வழுவழுப்பான சுவரிலா? இல்லை. சுமார் அறுபது அடி நீளமும் பதினைந்து அடி உயரமும் உள்ள சின்னஞ்சிறு குகை. அதுவும் சில இடங்களில் நாலு, ஐந்து அடி உயரம்தான் இருக்கின்றது. இப்படிப்பட்ட அமைப்புடன் கூடியது அந்த இயற்கைக் குகை. இந்தக் குகைச் சுவர்கள் எல்லாம் சித்திரங்கள் எழுதுவதற்கென்று செப்பனிடப்பட்டவை அல்ல. சுவர் முழுவதும் மேடும் பள்ளமுமாகத்தான் இருக்கிறது. இந்த மேடும் பள்ளமுமான பாறைச் சுவரிலேதான் அத்தனைய அற்புதச் சித்திரங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. அவைதான் ஆயிரத்து ஐந்நூறு வருஷங்களாக மழை வெய்யில் முதலிய இயற்கைக் கொடுமைகளுக்கெல்லாம் ஈடு கொடுத்து இன்றும் அழியாமல் இருக்கின்றன.

இந்தச் சித்திரங்களையும் அவற்றின் வர்ண விசித்திரங்களின் அழகையும் பார்த்துப் பார்த்து வியந்து கொண்டிருக்கும்போதே இன்னொரு வியப்பு உண்டாயிற்று. இந்த இடத்தில் வந்து அற்புத ஓவியங்களை எழுதிய அந்தச் சித்திரக் கலைஞன் எவ்வளவு பெரிய மேதையாக இருக்க வேண்டும்! அவனுடைய

தீர்க்க தரிசனத்தை எண்ணி எண்ணி அவனுக்கு வணக்கம் செலுத்த வேண்டியிருந்தது. அந்த மகா கலைஞன் மட்டும் இவ்வளவு உயரத்தில் இவ்வளவு இடையூறான இடத்தில் அமைந்துள்ள இந்தச் சிறு குகைக்குள் வந்து இப்படிப்பட்ட சித்திரங்களை எழுதி வைக்காமல் இருந்திருந்தால் ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்குப் பின்னால் நாம் இந்தச் சித்திரங்களை, அழகு ராணிகளைப் பார்த்து அனுபவித்திருக்க முடியுமா?

கீழே சம வெளியில் எங்காவது இவை போன்ற சித்திரங்கள் எழுதப்பட்டிருந்தால் இத்தனை காலத்தில் அது இருந்த இடத்தைக் கூடப் பெயர்த்து எடுத்துப் போயிருப்பார்களே ரஸிகர்கள். ரஸிகர்கள் ஆளுக்குக் கொஞ்சமாகப் பெயர்த்து எடுத்துப்போக முடியாமல் எங்கோ ஒரு குகையில் அல்லவா எழுதி வைத்திருக்கிறான் கலைஞன். அந்த மகாகலைஞனுக்கு நாம் எப்படி நன்றி தெரிவிக்க முடியும்? அவன் யாரோ? அவன் பெயர் என்னவோ? ஆனாலும் இந்த அமர ஓவியங்கள் மூலமாக அந்த ஓவியனும் அமரனாக இருக்கின்றான்.

இந்த அற்புதச் சித்திரங்களைப் பார்த்துக் கொண்டு இந்தக் குகைக்குள்ளேயே இருந்து விடலாம் என்றுதான் எண்ணத் தோன்றியது. நேரம் செல்லச் செல்ல உடன் வந்த நண்பர்கள் தொந்தரவு கொடுக்க ஆரம்பித்தார்கள். அவர்கள் தொந்தரவு பொறுக்க மாட்டாமல் அந்த அமர ஓவியங்களை ஆசைக் கடலின் அமுதங்களைவிட்டுப் பிரிய மனமில்லாமல் பிரிந்து வரவேண்டியதாகி விட்டது.

குகையிலிருந்து இறங்கிக் கீழே வந்தோம். முதலிலே பார்த்த நீண்ட குகையின் தாழ்வாரத்தின் வழியாகச் சென்றோம். அதன் முடிவில் மலையின்மேல் போவதற்கான படிகள் இருக்கின்றன. அவற்றின்மீது ஏறிச் சென்றால் மலையின் முன் வாசலை அடையலாம். அங்கிருந்து மலைமீது செங்குத்தாக ஏற வேண்டும். இந்த இடத்தில் மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஏதாவது அங்கு இங்கு இருக்கும் கற்களை எடுத்து வீசி எறிந்தால் ஆபத்துத்தான். தூரத்தில் பெரிய தேன் கூடுகள் தொங்குகின்றன. பெரிய என்றால் பத்தடி பன்னிரண்டு அடி சுற்றளவுள்ள தேன் கூடுகள். அதைச் சுற்றிலும் மிகப்பெரிய தேன் வண்டுகள் மொய்த்துக் கொண்டிருக்கின்றன. அவைகள் வந்து கொட்ட ஆரம்பித்தால் ஆள் அரோகராதான்! அந்தத் தேன் வண்டுகள் எதிர்பாராத வகையில் கலைந்து வந்து விட்டால் அவைகளிடமிருந்து காப்பாற்றிக் கொள்ள இரும்பு வலை அறைகள் இப்பொழுது கட்டப்பட்டிருக்கின்றன. இந்த வலை அறையை அமைத்த மகா பிமனதக்கு வணக்கம் செலுத்தி விட்டு மேலே கிளம்பினோம்.

என்ன விசித்திரமான சூழ்நிலை! ஒரு புறம் உயிருக்கு இன்பமளிக்கும் அமர ஓவியங்கள். அதே இடத்தில் மற்றொருபுறம் உயிரைக் குடிக்கும் பயங்கரத் தேன் வண்டுகள்!

இந்த மலைப்பாதையின் திருப்பத்தில் மிகப் பெரிய சிங்க பாதங்கள் இரண்டு இருக்கின்றன. இந்தப் பாதங்களைப் பார்த்து அந்தப் பாதங்களுக்கான சிங்கத்தைக் கற்பனை செய்து பார்க்க வேண்டும். சிங்கத்தின் நகங்கள் மட்டும் சுமார் நாலு அடி என்றால் சிங்கம் எவ்வளவு பெரிதாக இருந்திருக்க வேண்டும் என்று எண்ணிப் பாருங்கள். ஆமாம்! அந்த மலையையே சிங்கம் போல அமைத்திருக்க வேண்டும். அதற்குள் ஒரு சிறு ஊர் இருந்திருக்க வேண்டும். காசியப்பன் சிங்க உருவத்தில்தான் தன்னுடைய கோட்டையை அமைத்திருக்க வேண்டும்! அப்படி சிங்க உருவத்தில் கோட்டை அமைந்ததால்தான் இதற்குச் சிம்மகிரி என்று பெயர் வந்ததாம். சிம்மகிரிதான் நாளடைவில் சிக்கிரியாக மாறி விட்டிருக்கிறது.

இந்தச் சிங்க வாசல் வழியாக ஏறி மலை உச்சிக்குப் போக வேண்டும். இந்தப் படிகளில் ஏறுவதும் அவ்வளவு சுலபமான காரியமல்ல. சற்றுச் சிரமமான காரியம்தான். இந்தப் படிகளில் தட்டுத் தடுமாறி ஏறிக் கொண்டு மலை உச்சியை அடைந்து விட்டோம். ஆகா! அங்கு கண்ட அற்புதக் காட்சியை என்னவென்று சொல்லுவேன். எப்பேர்ப்பட்ட மாளிகைகள்! அழகழகான பல அரண்மனைகள்! அந்தப்புர மாளிகைகள்! அந்தப்புரத்து ராஜகுமாரிகளும், ராஜகுமாரர்களும் நீந்தும் பளிங்குக் கல் தடாகங்கள்! அலங்காரமான பள்ளி அறைகள்! நடன மண்டபங்கள்! மன்னரும் மந்திரிமார்களும் அமர்ந்து ஆலோசனை புரியும் கூடங்கள்! விருந்தினர் விடுதிகள்! இன்னும் எத்தனை எத்தனையோ கட்டடங்கள்!

இந்தக் கட்டடங்களெல்லாம் இன்று சிக்கிரி மலைமீது இருப்பதாக நேயர்கள் எண்ணி விடவேண்டாம்! சிக்கிரி மலைச் சிகரத்தில் சிதைந்து கிடக்கும் கற் குவியல்களைப் பார்த்த போது ஒரு காலத்தில் இங்கு இவ்வளவு அழகான பல கட்டடங்கள் இருந்திருக்க வேண்டும் என்று கற்பனை செய்ய முடிகிறது. நம் கற்பனைக் கண் முன்னால் அந்தக் கட்டடங்கள் கம்பீரமாகக் காட்சி தருகின்றன.

இந்த இடத்தில் அந்தக் காலத்து பொறியியல் கலையின் சிறப்பைக் கண்டு பிரமிக்க வேண்டியிருக்கிறது.

அங்கு ஒரு சிறு வாவி இருக்கிறது. அதற்கு எங்கிருந்தோ தண்ணீர் வருகிறது. குறிப்பிட்ட அளவுக்கு மேல் தண்ணீர் வந்தால், தானே வடிந்து போகும்படியான மதகும் அமைத்திருக்கிறார்கள். இந்த மதகைப் பார்த்த போது ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே நம் நாட்டில் பொறியியற்கலை எவ்வளவு ஓங்கி வளர்ந்திருக்கிறது என்பது புலனாகிறது. இந்தக் கலைகளெல்லாம் வெறும் மண்ணாசை காரணமாக அழிந்து மனிதர்களின் உயர்ந்த நாகரிகத்தையே சிதைத்து விட்ட கொடுமைக்குச் சின்னமாக அல்லவா திகழ்கின்றன? அவற்றின் சோகக் கதையைச் சொல்லுகிறது சிக்கிரிக்கோட்டை.

காசியப்பன் கட்டிய மலைக்கோட்டை இது என்று சொல்லுகிறார்கள். மலையின் சிகரத்திலே இவ்வளவு அற்புதமான கலைத் திறமையுடன் கோட்டையைக் கட்டியவன் தந்தையைக் கொன்ற மாபாவியான காசியப்பனாக இருக்க முடியாது. தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்து மீண்டும் வந்து காசியப்பனை முறியடித்த மொக்கல்லனாகத்தான் இருக்க வேண்டும். அவன் தான் தமிழ் நாட்டிலிருந்து ஓவியக் கலைஞர்களையும், கட்டடக் கலைஞர்களையும் கொண்டு வந்து இந்தக் கோட்டை

கலைக் கட்டியிருக்க வேண்டும்; சித்திரங்களை எழுதியிருக்க வேண்டும் என்கிறார்கள் வேறு சிலர். இன்னும் சிலர் குகைக்குள் இருக்கும் சித்திரங்களை மன்னரின் வேண்டுகோளுக்காக மட்டும் எந்த ஓவியக் கலைஞனும் எழுதியிருக்க முடியாது. யாரோ ஒரு ஓவியக் கலைஞர் தம்முடைய மனத் திருப்திக்காக, கலைக்காகவே படைத்த கலைத் தெய்வமாகத்தான் இருக்க வேண்டும் என்று கூறுகிறார்கள்.

இந்த ஆராய்ச்சிகளில் எது உண்மை, எது உண்மைக்குப் புறம்பானது என்பது யாரும் அறுதி இட்டுக் கூற முடியாது. ஆனாலும் அங்குள்ள சித்திரங்கள் கட்டடங்கள் அதன் அமைப்பு எல்லாவற்றையும் பார்க்கும்போது தமிழ் நாட்டிலிருந்து சென்றவர்கள்தான் அதை அமைத்திருக்க வேண்டும் என்று உறுதியாகக் கூறிவிடலாம். காரணம் அவைபோன்ற சித்திரங்களும்கட்டடங்களும் இன்றையதினம் சோழநாட்டில் ஏராளமாக இருக்கின்றன. தஞ்சை பெரிய கோவில் உள் பிரகாரச் சுவரில் சிக்கிரியா பாணியை ஒட்டிய சித்திரங்கள் வரையப்பட்டிருக்கின்றன இன்னும் சித்தன்ன வாசலில் இருக்கின்றன. திருப்பரங்குன்றத்தில் இருந்ததாகச் சங்க நூலான பரிபாடல் கூறுகிறது. இதையே நமது கவியரசர் சுப்பிரமணிய பாரதியார் அற்புதமாகக் கூறியிருக்கிறார்.

சிங்களம் புட்பகம் சாவக—மாகிய
தீவு பலவினும் சென்றேறி—அங்கு
தங்கள் புலிக்கொடி மீன்கொடியும் நின்று
சால்புறக் கண்டவர் தாய் நாடு

என்று செந்தமிழ் நாட்டின் சிறப்பைப் பற்றிக் கூறுகிறார் கவியரசர் பாரதியார். அதாவது தமிழன் இலங்கைத் தீவுக்குச் சென்றான். புலிக் கொடியை நாட்டிவிட்டு வந்தான். அவன் திரும்பியவுடன் அந்தக் கொடியை அங்குள்ளவர்கள் அகற்றி விட்டார்கள் என்று இடையாது. யாராலும் அகற்ற முடியாமல் "நின்று சால்புறக் கண்டவர்" என்று கூறுகிறார். அவர் கூறியது எவ்வளவு உண்மை என்பதைச் சிக்கிரியா சித்திரங்களையும், சிக்கிரியா சிதைந்த கோட்டை கொத்தளங்களையும் பார்த்தவுடன் புரிந்து கொள்ள முடிந்தது. இந்தக் கலைகளில் எல்லாம் தமிழ்க் கொடி ஓங்கி நின்று பட்டொளி வீசிப் பறக்கிறது.

*** *** ***

ஈழ நாட்டின் பழம்பெரும் நகரங்களில் ஒன்றான பொலன்னருவைக்கு நேயர்களை அழைத்துச் செல்லப் போகிறேன். இங்கே ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகப் பராக்கிரம பாகு என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவன் காலத்தில் பௌத்த மதமும், சைவ சமயமும், சிங்களவர் நாகரிகமும், தமிழர் நாகரிகமும் ஒன்றுக்கு ஒன்று விரோதமின்றி ஓங்கி வளர்ந்தன. இதற்குச் சாட்சியாக இங்குள்ள கட்டடங்களே இருக்கின்றன. இந்த நகரைச் சிங்கள அரசர்கள் மட்டும் ஆளவில்லை, தமிழ் அரசர்களும் ஆண்டு வந்தார்கள் என்பதற்கு இன்னும் பல சரித்திர ஆதாரங்களும் இங்கே இருக்கின்றன. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளின் தொடர்பான சரித்திர வரலாற்றைக் கூறும் அமரத்துவம் பொருந்திய பொன்னகரமான பொலன்னருவைப் பட்டணத்தைப் பார்க்க நாளைய தினம் செல்லலாம். (தொடரும்)

வட்ட மேஜை

சபையில் நடந்ததென்ன ?

"கல்கி" 30-6-57 இதழில் வெளியான இலங்கைக் கடிதத்தைப் பார்த்துப் பெரிதும் வருத்தமுற்றேன்.

இலங்கைப் பாராளு மன்றத்திலே சிம்மாசனப் பிரசங்கத்தின்மீது முக்கியமான விவாதம் நடக்கும்பொழுது முதலிரண்டு நாட்கள் நான் சபைக்குச் செல்லாமலிருந்தது உண்மைதான். யாழ்ப்பாணம் பெரிய கோர்ட்டில் நடந்த வழக்கொன்றில் வக்கீல் தொழில் முறையல்லாத வகையில் நான் சம்பந்தப் பட்டிருந்தபடியால் அங்கே செல்வது எனது கடமையா யிருந்தது. எனினும் நடக்கவிருக்கும் விவாதத்தில் நான் கலந்துகொள்ள விரும்புவதாக யாழ்ப்பாணத்திலிருந்து, சபாநாயகருக்கும், இரண்டு மணி நேரம் பேச விரும்புவதாக எதிர்க்கட்சித் தலைவருக்கும் தந்தி கொடுத்துவிட்டுத்தான் மூன்றும் நாள் அங்கு சென்றேன். மூன்றும் நாள் காலையிலும் எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் எம். என். பெரேராவிடம் இது பற்றி டெலிபோனில் பேசியபொழுது, அவர் இருபது நிமிஷங்களுக்கே நான் பேச இடமுண்டு என்றார்.

பல ஆண்டுகள் பாராளுமன்ற அங்கத்தினராகவும் சிலகாலம் வர்த்தக மந்திரியாகவும் இருந்து இலங்கைவாழ் இந்தியர் பிரஜாவுரிமைச் சட்டப் பிரச்னையில் ராஜிநாமாச் செய்த எனக்குப் பாராளுமன்றச் சம்பிரதாயப்படி மந்திரிகளைவிட விவாதத்தின் முற்பகுதியில் பேச உரிமையுண்டு. அவ்வுரிமையை எனக்கு அளிப்பது சபாநாயகரின் கடமை. அதன்படி அவர் நடந்து கொள்வாரென எண்ணியே ஒவ்வொரு அங்கத்தினராகப் பேசி முடியவும் நான் பேச எழுந்தேன். விவாதம் நடந்து கொண்டிருக்கும்பொழுது, நான் பேச எப்பொழுது இடம் கிடைக்குமெனக் கேட்டேன். முப்பது நிமிஷங்களுக்கு மேல் பேசமாட்டேன் என்று உறுதி கூறினுலொழிய நான் பேசுவதற்கு இடம் கிடையாது என்றார் அவர். பாராளுமன்றத்தில் நான் பேசும் உரிமையோ அல்லது எவ்வளவு நேரம் பேசலாம் என வகுக்கும் உரிமையோ நிச்சயிக்க எதிர்க்கட்சித் தலைவருக்கோ, பிரதமருக்கோ, வேறு எவருக்கோ உரிமை கிடையாது.

விவாதம் நடந்து கொண்டிருக்கையில் பல முறை நான் பேச எழுந்தபொழுதெல்லாம் எனக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை.

மாலை மூன்று மணிக்கு, விவாதத்தின் இடைவேளையின்போதுதான் அன்று என்னைப் பேசாமல் செய்யப் பலர் சூழ்ச்சி செய்திருப்பது எனக்குத் தெரிந்தது.

நான் மீண்டும் சட்டத்தின்படி பேச விரும்புவதாகக் கேட்டேன். சபாநாயகர் மறுத்தது மட்டுமன்றி, என்னை முற்றுகப் பேசவிடப் போவதில்லை என்ற தமது முடிவையும் தெரிவித்தார். அத்தகைய முடிவுக்கு என் எதிர்ப்பைத் தெரிவிக்க எழுந்தபொழுது, சபாநாயகர் என்னைப் பெயர் சொல்லி அழைத்து ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முனைந்தார்.

சட்டப்படி இத்தகைய ஒரு நிலையில் ஒரு அங்கத்தினரை ஒரு வாரத்துக்குப் பாராளுமன்றத்திலிருந்து விலக்கி வைக்கலாம். எனினும் சட்டத்துக்கு முரணுக இரண்டு வார காலத்துக்குப் பாராளு மன்றத்திலிருந்து என்னை விலக்கி வைப்பதெனப் பிரதமர் கேட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சட்டமுரணுன நடவடிக்கையைச் சுட்டிக் காட்ட எழுந்தபொழுதுதான் என்னை அப்புறப் படுத்தும்படி சபாநாயகர் உத்தரவு பிறப்பித்தார். பாராளுமன்றத்தை விட்டு நீங்குமாறு எனக்குக் கூறப்பட்டது. இது முதல் தடவையல்ல. இதற்குமுன் இவ்வாறு என்னை இருமுறை வெளியேறும்படி சபாநாயகர் கூறியபொழுதெல்லாம் நான் அவருக்கு ஒரு சலாம் போட்டுவிட்டு வெளிவந்துள்ளேன். அவ்வாறு இம்முறையும் நடந்திருந்தால் எனது எதிர்ப்பு பலமற்றதாக இருந்திருக்கும். என்னைப் பலரும் தூற்றியிருப்பர். இந்நிலையில் சட்ட ஒழுங்கின்படி நான் செய்யக் கூடியது எனது ஆசனத்தை விட்டு அகல மறுப்பதுதான். நன்கு யோசித்தே நான் இந்த முடிவுக்கு வந்தேன். எனவே பலவந்தமாக என்னை அப்புறப்படுத்தினுலொழிய நான் வெளியேற மாட்டேன் எனத் திட்டமாகக் கூறினேன். அப்பொழுதே சத்தியாக்கிரக முறையில் நடந்து கொள்ளவும் நிச்சயித்தேன். என் ஆசனத்தில் நன்கு அமர்ந்து கொண்டேன். என்னை ஆசனத்துடன் தூக்கி வெளியே கொண்டு செல்கையில் ஆசனம் முறிந்தது.

பாராளு மன்றத்துக்குள் சட்டமுறைப் படியே நடந்தும், சபாநாயகர் சட்டத்தைப் புறக்கணித்து என்னை அப்புறப்படுத்தினுர். பின்னர் சாத்விகமான முறையில் பாராளுமன்றத்துக்கு முன்னுல் நான் அமர்ந்திருந்தேன்.

இந்நிலையில், காடையர்கள் என்மீது கல் பொழியவும் போலீசார் என்னைப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு சென்றனர். அங்கும் சாத்விக வழியிலேயே நான் இருந்தேன்.

சபாநாயகர் என்னை முற்றுகப் பேசவிடாத உத்தரவை நான் மீறியது உண்மை. சபாநாயகர் சட்டத்தைப் புறக்கணிக்கையில் என்னுல் அதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா ? பாராளு மன்றத்துக்கு உள்ளும் புறமும் நான் காந்திய வழியில் அமைதியாக-சத்தியத்தைக் கடைப்பிடித்தே நடந்து கொண்டேன். இது நடந்தவற்றிலிருந்து தெளிவாகும்.

கொழும்பு
30—6—57

சி. சுந்தரலிங்கம். எம். பி
வவுனியா

சர்க்கார் கவனிக்குமா ?

உயர்நிலைப் பள்ளிகளில் மூன்றுவது பாரம் முடிய வருஷம் 1200 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் உள்ள ஏழை மாணவர்களுக்குப் பள்ளிக்கூடச் சம்பளம் கட்ட வேண்டிய அவசியம் இல்லை என்ற விதி இருக்கிறது. அதற்கு வருமான சர்டிபிகேட்டில் ஸ்தல கிராம அதிகாரியின் கையொப்பமும் அந்தத் தாலுகா தாசில்தார் அவர்களின் கையொப்பமும் அவசியம் இருக்க வேண்டும் என்று வற்புறுத்தி வருகிருர்கள்.

இங்கிருந்து சங்கரன்கோவில் தாலூகா ஆபீஸ் இருபத்தோரு மைல்களுக்கு அப்பால் இருக்கிறது. ஒவ்வொருவரும் தாலூகா ஆபீசுக்குச் சென்று கையொப்பம் வாங்க வேண்டுமென்றால் அதிகச் செலவும் தொழில் நஷ்டமும் ஏற்படுகின்றன. அத்துடன் தாலூகா ஆபீசில் உள்ளவர்களுக்கு லஞ்சம் கொடுக்க வேண்டும். ஏதாவது காரணங்கள் காட்டிக் கையெழுத்துப் போட மறுக்கிறார்கள். இவ்வித காரணங்களால் தாமதம் ஏற்பட்டு மாணவர்களைப் பள்ளியில் சேர்க்கக் கால தாமதமாகிறது.

வருமானத்தின் உண்மையான நிலை அந்தந்தப் பஞ்சாயத்துக்களுக்குத்தான் தெரியுமாதலால் வருமான சர்டிபிகேட்டில் கி. மு. கையொப்பத்துடன் ஸ்தல பஞ்சாயத்துச் சபைத் தலைவர் சர்டிபிகேட் போதுமானது என்று உத்தரவு பிறப்பிக்க வேண்டும். அல்லது ஜில்லா போர்டு அங்கத்தினர், எம். எல். ஏ., இவர்கள் சர்டிபிகேட்டும் செல்லத்தக்கது என்றாவது உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

இளையரசனேந்தல்
3—7—57

கந்தசாமி

குடும்ப நிலை என்ன ஆவது?

முதல் ஐந்தாண்டு திட்டத்தில் "மாவட்ட ஆட்சி மன்றங்கள்" மூலமாகத் திட்டக் கமிஷன், "வேலையில்லா நிலைமையைப்" போக்கவும் கிராமப் பகுதிகளில் கல்வி வளர்ச்சி அடையவும் எஸ். எஸ். எல். ஸி. தேறியவர்களை ஆசிரியர்களாக நியமித்தது. இவர்கள் சுமார் மூன்று ஆண்டுகள் வேலை செய்தபின்பு சமீபத்தில் இவர்களை நீக்கிப் பதிலுக்குப் போதனாமுறை பயிற்சி பெற்ற ஆசிரியர்களை நியமிக்கவேண்டும் என்றும், நீக்கியவர்கள் இரண்டு ஆண்டு போதனாமுறைப் பயிற்சிபெற வேண்டும் என்றும் உத்தரவுகள் வந்துள்ளன.

மேற்படி ஆசிரியர்களைத் திடீரென்று இம்மாதிரி நீக்கிவிடின் இவர்களை நம்பியுள்ள ஏழைக் குடும்பங்களின் நிலை என்ன ஆவது? இலையைப் போட்ட பின்பு உணவில்லை என்பது போல் அல்லவா உள்ளது. போதிக்கும் திறமையைச் செய்முறைப் பயிற்சியின் மூலம் இம்மூவாண்டுகளில் பெறவில்லையா! இரண்டாண்டுப் பயிற்சியில் இதைவிட ஆசிரியர்கள் என்ன புதிய பயன் அடையப் போகிறார்கள்? என்பன போன்ற விஷயங்களை ஆராய்வோமேயானால், இரண்டாண்டுப் பயிற்சி அவசியமில்லை என்னும் விஷயம் "உள்ளங்கை நெல்லிக்கனி" போல் நன்கு விளங்கும்.

இந்த ஆசிரியர்கள் போதனாமுறைப் பயிற்சி பெற்றே ஆக வேண்டுமெனில் அவர்களுக்கு ஓராண்டு குறுகிய காலப்பயிற்சி கொடுத்து நிரந்தர ஆசிரியர்களாக்கி அவர்களது சேவைகளை மாணவர்களுக்குப் பயன்படுத்தியும், வேறு ஜில்லாக்களில் வேலை செய்யப் பிரயத்தனப் படுவோருக்கு மேற்படி சேவையின் காலத்தைச் சேர்த்துக் கொண்டு வயது வரம்பை நீடிக்கவும் அரசாங்கம் வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

அரும்பாக்கம்
9—6—1957

சி. எல். கிருஷ்ணமூர்த்தி

உன்னத ஸ்தானம்

இவ்வார இதழில் வெளியாகியுள்ள காந்தனின் பட விமரிசனம், விமரிசனக் கலையில் ஓர் உன்னத ஸ்தானத்தைப் பெற்று விட்டது என்று துணிந்து கூறலாம்.

பல் வலியினால் வீட்டில் அடைந்து கிடக்கும் எனக்கு அது மூட்டிய சிரிப்பு தாங்கொணா வலியை அளித்தும், அதன் பயனாக எதிரில் இருந்த கட்டி உடைந்து வீக்கம் குறைந்து கொண்டு வருகிறது! படத்தைத் தாக்கியிருக்கும் பல கோணங்கள் பலே ஜோராக இருக்கின்றன. நாட்டியத்தைச் சம்பந்தமில்லாமல் இணைத்திருப்பதைக் குறித்து அவர் நாயகனாட, நாயகி ஆட, மானாட, மழுவாட, போதாக்குறைக்குப் படம் பார்க்கச் சென்ற நாமும் "தூங்கி விழுந்தாட" என்று கூறியிருப்பதும், கதையில் சிறந்த அம்சம், "கபம்" என்று விமர்சனத்தை முடித்திருப்பதும் படத்துக்குப் பத்து நாள் காரியமும் முடிந்த சோபையைக் கொடுக்கிறது!

இவருடைய விமரிசனத்துக்காக வேண்டியாவது இத்தகைய மோசமான படங்கள் சில அவ்வப்போது வெளிவந்து கொண்டிருக்க இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

புது தில்லி
22-6-57

சுப்புடு




சோபிதமான சேலைக்கு
ஏற்றது
செயற்கை முறையில்
தயாரித்த
TRAYONS
டிரேயான்ஸ்
ரேயான் பட்டு நூல்களே!
ரேயான் டிரேடர்ஸ் பிரைவேட் லிமிடெட்
போன்: 2543 தந்தி: "CELYARN"
27, பவழக்காரத் தெரு, சென்னை-1.
கிளைகள்
போன்: 253. தந்தி: "CELYARN"
68/416, மெயின் ரோடு, செவ்வாய்ப்பேட்டை
சேலம்...
போன்: 598 தந்தி: "CELYARN"
44-A, தெற்கு மாசி வீதி, மதுரை.
அவிநாசி ரோடு, கோவை.



கால்கேட் குளோரோபில்
ஈறுகளை பலப்படுத்துகிறது
வைத்திய சோதனை நிரூபிக்கிறது!
கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை முறை தவறாமல் தேய்த்தால் குளோரோபிலின் நற்பலன்கள் உங்களுக்கு கிட்டுகின்றன. ஒவ்வொரு முறை கால்கேட் குளோரோபில் உபயோகிக்கும் போதும்,
● ஈறுகளைப் பலப்படுத்துகிறது!
● வாய்நாற்றத்தை அதி தீவிரமாக ஒழிக்கிறது!
● சொத்தையாக்கும் கிருமிகளை வாயினின்று ஒழிக்கிறது!
குழந்தைகள் அதன் அதி மதுரமான சுவையை விரும்புகின்றன!
COLGATE
CHLOROPHYLL TOOTH PASTE
வேறு எந்த பற்பசையிலும் இதைவிட மிகுந்த குளோரோபில் இல்லை!
இதோ!
பெரிய எகானமி
சைஸில் கிடைக்கிறது!
• நீரில் கரையும் குளோரோபிலின்ஸ் சேர்ந்தது.
CTPA/6/6


'அனஸின்'
மிகச்சிறந்தது, அதில் நான்கு
மருந்துகள் சேர்ந்துள்ளன
1. க்வினைன் சல்பேட் 2. காப்பின்
3. பினஸிடின் 4. ஆஸிடில்ஸாலிஸிலிக் ஆஸிட்
வலிகளுக்கு நிவாரணமளிப்பதில் புகழ் பெற்ற 'அனஸின்' விஞ்ஞான முறையில் சேர்க்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். இவைகள் நரம்புகளின் கேந்திர ஸ்தானங்களில் கூட்டாக வேலை செய்து, தலைவலி, ஜலதோஷம் ஜுரம், பல்வலி, மற்றும் தசைவலிகளுக்குத் துரிதமாயும் அபாயமின்றியும் நிச்சயமாயும் நிவாரணம் அளிக்கிறது. வலிகளுக்குத் துரித நிவாரணமளிப்பதில் அனஸினுக்கு இணையொன்றில்லை ... அனஸினைப் போல் தீங்கு விளைவிக்காத வில்லை வேறொன்றில்லை. ஆகவே ஞாபகமிருக்கட்டும் 'அனஸின்' ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். அது இருதயத்திற்குத் தீங்கு விளைவிக்கவோ அல்லது வயிற்றுக் கோளாறுகள் உண்டு பண்ணவோ செய்யாது. 'அனஸின்' லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கிறது. 'அனஸின்' விலை ஒவ்வொருவர் சக்திக்கும் ஏற்றது. ஒரு பாக்கெட்டின் விலை 12 நயா பைஸா மட்டுமே.
நான்கு
மருந்துகளின்
சேர்க்கையான
'அனஸின்'
வேண்டுமென்றே
கேளுங்கள்
WILL NOT UPSET THE STOMACH
DOES NOT HARM THE HEART
ANACIN
TABLETS
नये पैसे 10 1957
नये पैसे 2 1957
ஒரு பாக்கெட்டின் விலை 12 நயா பைஸா



கிறிஸ்துவத் துறவி லாரென்ஸ்

ராஜாஜி

10

பகவானை நாடும் பக்தன் வேறு எவ்வித மகிழ்ச்சியையும் தேட மாட்டான். தேடவேண்டியதுமில்லை. ஆண்டவன்பால் செலுத்தும் அன்பிலேயே பக்தன் பூரண ஆனந்தமடைகிறான். வேறு காரியங்களையும் சந்தோஷங்களையும் தேடும் சுதந்திரம் பக்தனுக்கு உண்டு. பக்தி மார்க்கத்தில் கட்டாயத்துக்கு இடமில்லை. சுதந்திரமாகவே வேறு அலுவல்களை பக்தன் விட்டுவிடுவான். பகவானுடைய சாந்நித்யத்தை சதா அடைந்து அந்த மகிழ்ச்சியே அவன் உள்ளத்தில் நிரம்பி நிற்கும்.

பக்தன் வாழ்க்கை-அலுவல்களைக் கவனிக்காமல் விட்டுவிட மாட்டான். நன்றாகவே கவனிப்பான். கவலையின்றி, வருத்தமின்றிச் செய்ய வேண்டியதையெல்லாம் செய்து கொண்டு போவான். ஆனால், அந்தராத்மாவில் பகவானை வைத்துக் கொண்டே எல்லாம் செய்வான். மறந்து போனபோது உடனே திரும்ப நினைவுக்குத் தந்து கொள்வான்.

நித்ய வைதிக கர்மங்களைக்கூட அவ்வளவாக மதிக்க மாட்டான். சாந்நித்தியத்தை அப்பியாசம் செய்கிறவனுக்கு ஜபமும் மந்திரமும் வேண்டியதேயில்லை. சாதனங்களின் பயனை அடைந்தவன் சாதனத்தை ஏன் கட்டிக் கொண்டு அலைய வேண்டும்?

பகவான் நம்மை அதிகம் கேட்கவில்லை. அவ்வப்போது அவனை நினைவுக்குத் தந்து கொண்டால் போதும். அவ்வப்போது அவனுக்கு வணக்கம் செலுத்தினால் போதும். கவலைகள் உண்டான போது அவன் அருளுக்காக இறைஞ்ச வேண்டும். அவ்வளவே. கஷ்டம் அனுபவிக்கும் போது, ''ஐயனே! இது உனக்காகப் பொறுக்கிறேன்!'' என்று சந்தோஷமாகப் பொறுத்தால் போதும். சுகம் நேர்ந்தால், எப்போதாவது சில சமயமேனும் அவனைத் தியானித்து அடைந்த சுகத்திற்கு நன்றி செலுத்தினால் போதும். சங்கடமடைந்த காலத்தில் அவனைக் கருத்தில் வைத்து. ''நீ இருக்கிறாய். எனக்கு என்ன கவலை?'' என்று எண்ணினால் போதும். உணவருந்தும் போதும் நண்பர்களுடன் கலந்து காலங் கழிக்கும் போதும் அவ்வப்போது அவனை நினைவுக்குத் தந்து கொண்டு, ''உத்தம தோழனே! நீ பக்கத்திலிருக்கிறாய்'' என்று எண்ணினால் போதும். கொஞ்சம் நினைத்தாலும் அவனுக்கு மிகத் திருப்தி.

நாட்டு வைத்தியம்

ஸ்ரீஹரி

23. நேயர்களுக்கு

'ஸ்ரீமான் ஸ்ரீஹரி அவர்களுக்கு, திரு ஸ்ரீஹரியவர்களுக்கு, அண்ணா ஸ்ரீஹரி அவர்களுக்கு, மாமா ஸ்ரீஹரி அவர்களுக்கு' என்று இப்படியெல்லாம் தாங்கள் எழுதும் கடிதங்களில் நேயர்கள் விளிக்கின்றனர். ஏன்? "மகா கனமும், மேன்மையும் பரோபகாரியுமாகிய.." என்று கோவை ஜில்லாவைச் சேர்ந்த ஒரு சகோதரர் (185) எழுதுகிறார்.

நல்லகாலம்! 'ஸ்ரீஹரி தாத்தா அவர்களுக்கு' என்று எழுதவில்லை!

"சிரஞ்சீவி ஸ்ரீஹரிக்கு" என்று யாராவது எழுத மாட்டார்களா? என்று எனக்கொரு ஆசையும் உண்டு. உண்மையில் அவ்விதம் எழுத உரிமையுள்ளவரும் ஏனோ அவ்வாறு எழுதுவதில்லை.

முதன் முதலில் இட்ட திட்டப்படி நேயர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிப்பதும் ஒருபொறுப்புத்தானே? கல்கி மூலம் பதில் கிடைக்கக் காலதாமதம் ஏற்படலாமென்று சில நண்பர்கள் நேரில் தமக்குப் பதிலை எழுதும்படி விரும்புவதும் இயல்புதான்.

இருநூறுக்கு அதிகமான கடிதங்கள் இவ்வாறு வந்துள்ளன. இவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டாமா? இனியும் இவ்விதக் கடிதங்கள் வரும் அல்லவா? அவற்றுக்கும் பதில் எழுத வேணுமே! முதலில் ஒன்றிரண்டு வாரங்களில் இந்த நண்பர்கள் கடிதங்களைக் கவனித்து விட்டுப் பிறகு தொடர்ந்து ஒரு வாரம் கடிதங்களுக்குப் பதில், ஒரு வாரம் தொடர்ந்து வைத்தியபரமான கட்டுரைகள் என்ற வகையில்தான் இனி செயலாற்றுவதாகத் திட்டம்.

நேயர்களின் கடிதங்களில் சிலவற்றுக்குத்தான் பதில் எழுதவேண்டி வரும். ஆயினும் எல்லோருக்கும் பொதுவாகச் சில விஷயங்களைத் தெரியப்படுத்த வேண்டிய நிலைமையும் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது.

கடிதம் எழுதும் நண்பர்கள் நேரிடையான பதிலை எதிர்பார்ப்பாராயின் கடிதத்தோடு தபால் தலைகள் வைத்து அனுப்ப வேண்டும். வெளி நாட்டிலிருந்து எழுதும் நேயர்கள் இதைச் செய்வதில்லை. இவர்கள் கடிதங்கள் மிகவும் கணிசமான எண்ணில் வருகின்றன. இந்தியத் தபால் தலைகள் கிடைக்காவிடில் இண்டர் நாஷனல் போஸ்டல் கூபன் என்பதை வாங்கி அனுப்பலாமே! மலேயாவிலிருந்து எழுதிய ஒரு நண்பர் இவ்விதக் கூப்பனை அனுப்பினார். அவருக்கு எழுதிய பதிலையும் அந்த கூப்பனையும் தபாலாபீஸுக்கு அனுப்பி வைத்தேன். கூப்பனைப் பெற்றுக் கொண்டு தேவையான தபால் தலையைக் கொடுத்தனர். மற்றுள்ளவரும் இதைச் செய்யலாமே! இது ஒன்று.

கடிதங்கள் கூடுமானவரையில் சுருக்கமாக இருந்தால் நல்லது. ஒரு சகோதரி (188) சிற்றெறும்பிலும் சிறிய எழுத்துக்களாக நான்கு பக்கங்கள் ஆறு நோயாளிகளைப்பற்றிய விஷயங்களை எழுதி ஆலோசனை கேட்டிருக்கிறார். பதில் ஆறு கட்டுரைகள் எழுதும் அளவுக்காகி விட்டது. இப்படிச் செய்யலாமா? இது ஆறு கடிதங்களாக வந்திருந்தால் என்ன செய்வாய் என்கிறீர்களா? அப்படித்தான் ஏதோ எண்ணிப் பதில் எழுதி வருகிறேன். மொத்தத்தில் சுருக்கமாக இருத்தல் அவசியம். பிறகு நேயர்கள் இஷ்டம். எனது கஷ்டம். காகிதத்துக்கு நஷ்டம்.

திருச்சி நண்பரொருவர் (180) கடிதத்தில் சிவப்பு மையால் ஆறு கேள்விகளைக் குறிப்பிட்டு (வேறு மையால் மற்றும் சிலகுறிகள்)இவைகளுக்கு உடனடியாகப் பதில் வேணுமென்று கேட்டிருக்கிறார். இவர் கடிதமும் மேற்சொன்ன கடிதத்தைப் போல் நீண்டது. இதிலிருந்து நண்பர்கள்அடையும் தனிப்பயன் என்ன?

முந்தின கடிதத்தின் எண்ணைக் குறிப்பிடாமலே, என் கடிதம் கிடைத்ததையும், அதைக் கண்டு அவர்கள் பட்ட சந்தோஷத்தையும் ஒரு பக்கம் எழுதிப் பிறகு 'ஒரு சந்தேகம்' என்று ஆரம்பிக்கின்றனர். இது யார் என்று பழைய கடிதங்களைப் புரட்டி அவரது முந்தின கடிதத்தைத் தேடி எடுத்து விஷயம் என்னவென்று தெரிந்து கொள்வது பெரிய விஷயமாகி விடுகிறது. கடிதத்தின் எண்ணைக் குறிப்பிடாவிட்டால் யார் யார் என்று தெரிந்து கொள்வது பெருங் கஷ்டமாகி விடுகிறது. இனியாவது இவ்விதக் கஷ்டம் ஏற்படாமல் நேயர்கள் கவனித்துக் கொள்ள வேண்டும்.

மற்றொரு விஷயம். நாட்டு வைத்தியக் கட்டுரைகளின் பிரதிகளை ஜாக்கிரதையாக வைத்திருக்க வேண்டும். இதைச்

செய்யாததால் சிரமம் நண்பருக்கு மட்டுமல்ல. எனக்கும் சேர்த்து ஏற்படுகிறது. ''பஞ்சகற்பம்'' என்று 14-4-57 'கல்கி'யில் விளக்கிய வகையில் தலை முழுகி வாருங்கள் என்று எழுதினேன். 'அக்கட்டுரை மட்டும் காணவில்லை. சிரமத்தைத் தயவுசெய்து பாராமல் அது என்னவென்று எழுதி விடுங்கள், அண்ணா!'' என்று எழுதினால் என்ன செய்வது? எழுதியதையே எழுதிக் கொண்டிருக்க முடியுமா? நேயர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் வகையில் நல்ல உபயோகமான விஷயங்கள் தெளிவுபடலாம். இது விஷயமாக வேறொருவர் கேட்க நேர்டுங்கால் இன்ன கேள்வியின் பதிலைப் பார்க்கவும் என்றுதான் எழுத முடியும். 'அப்பிரதி மட்டும் எப்படியோ காணாமற் போய் விட்டது' அல்லது, 'படித்து விட்டுத் தருவதாகவாங்கிச் சென்றவர் கொடுக்கவில்லை' என்று எழுதி, 'ஆகவே தயவு செய்து, சிரமத்தைப் பாராமல்..' என்றெல்லாம் எழுதினால் 'தயவுசெய்வது மிகவும் கஷ்டம். மன்னிக்கவும்' என்றுதான் எழுத வேண்டியிருக்கும். ஆகவே நாட்டு வைத்தியக் கட்டுரைப் பிரதிகளை மிக ஜாக்கிரதையாகச் சேர்த்துத் தொகுத்து வைத்திருத்தல் அவசியம்.

'கல்கியில் எழுதி வரும் விஷயங்களை எளிய நடையில் எழுதா விட்டால் எப்படி? உதாரணமாக 'மீசரமூற்ற' என்றால் என்ன பொருள்?' என்று இலங்கையிலிருந்து நண்பர் ஒருவர் கேட்டிருக்கிறார்.

ஒரு சாஸ்திர விஷயமாக எழுதும் கட்டுரையில் இப்படி ஒரு சொல் எப்பொழுதாவது வந்து விடுவதைத் தடுக்க முடியாது. இச்சொல்லுக்கு என்ன பொருள் என்று யாரையாவது கேட்டறியலாம். அல்லது அகராதியைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். இந்தச் சாக்கில் ஒரு புதிய சொல்லைக் கற்றது போலும் ஆகுமே! ஆயினும் நண்பரின் எச்சரிக்கையை ஏற்கிறேன். இனி மிகவும் எளிய முறையில் எழுத முயல்கிறேன்.

'மற்றும் இருவர் யாரெல்லாம் அமளிப்படும் 'புளு'வுக்கு ஏன் நீங்கள் ஒன்றும் எழுதவில்லை? சாதாரணப் பத்திரிகைகளிலெல்லாம் இது விஷயமாகப் பலர் பல விஷயங்களைத் தெரிவித்துள்ள போது வைத்தியப் பகுதியுள்ள பத்திரிகை-தமிழ்ப் பத்திரிகைகளில் முன்னணியில் இருப்பவற்றுள் ஒன்றான கல்கியில் எழுதாமலிருக்கலாமா?' என்கின்றனர்.

இதற்கு மன்னிப்புக் கேட்பதைத் தவிர வேறு வழியில்லை. இது விரைவில் அடங்கிப் போகும் என்ற குருட்டு நம்பிக்கை. அதனால்தான் தனி கட்டுரையாக எழுதவில்லை. நம்பிக்கையும் நல்ல வேளையாகப் பொய்யாகவில்லை. அப்படியும் சிலருக்கு எனது ஆலோசனைகளைத் தெரிவிக்கத்தான் செய்தேன்.

வீட்டில் காலை மாலை இரண்டு வேளையும் சாம்பிராணிப் புகையைக் காண்பித்து வரலாம். அல்லது இலுப்பைப் புண்ணாக்கைப் புகைத்து வரலாம். பூரா சர்க்கரையைத் தணலிலிட்டோ வேப்பம் பூவைத் தணலிலிட்டோ புகையை வீடு முழுவதும் பரவச் செய்து வரலாம். இதனால் காற்றிலுள்ள விஷக்கிருமிகள் அழியும், வியாதி வராது என்று பலருக்குத் தெரிவித்துள்ளேன். இவர்களெல்லோரும் அம்முறைகளைக் கையாண்டு நல்ல குணம் கண்டதைத் தெரிவித்திருக்கின்றனர்.

ஏன்? (193 ல்) ஒரு பெங்களூர் சகோதரி எழுதுவதைப் பாருங்கள்: '..இன்புளூயன்ஸா ஜுரம் எல்லோருக்கும் வரிசையாக வந்து விட்டது..... கொடுத்தோம். அதிலேயே எல்லோருக்கும் ஜுரம் நின்றது. டாக்டரைக் கூப்பிடாமல் தங்கள் மருந்திலேயே குணமாகி விட்டது...'' என்று பெருமையுடன் எழுதி, 'இதுவே போதுமா? இன்னும் ஏதாவது மருந்து வேண்டுமா?' என்று கேட்டிருக்கிறார்.

இப்படித் தனிப்பட்ட வகையில்தான் ஏதோ செய்ய முடிந்தது. எப்படியானாலும் ஜுரமென்னவோ தீர்ந்து விட்டது. முன்னெச்சரிக்கையாகக் காற்றைச் சுத்தமாக வைத்துக் கொள்ளத் தக்க உபாயத்தையும் (வருங்கால உபயோகத்துக்காகவாவது) தெரிவித்து விட்டேன். இதனால் ஜுரம் பரவுவதைத் தடுத்து விடலாம்.

ஜுரமே வந்து விட்டாலோ..! பெரியவர் சிறியவர் எல்லோருக்கும் கஸ்தூர்யாதி குடிகை என்ற மருந்தை ஜீரக கஷாயத்தில் கொடுக்கலாம். பெரியவர்களானால் மிளகு,முருங்கைப்பட்டை, கொள்ளு இவற்றைக் கால் பலம் வீதம் எடுத்து அம்மியிலிட்டு அரைத்து 16 அவுன்ஸ் ஜலத்திலிட்டு 4 அவுன்ஸாகக் காய்ச்சி எடுத்து வடிகட்டிய கஷாயத்தில் வேளைக்கு அரை அல்லது ஒரு அவுன்ஸ் வீதம் .தினம் 2-4 வேளை கொடுத்து வரலாம். நல்ல குணமுண்டு.

அடுத்த கட்டுரையில் இன்னும் ஒன்றிரண்டு கேள்விகளுக்குப் பதில் எழுதி விட்டுப் பிறகு, ''ஒரு முக்கியமான விஷயம்'' என்ற கட்டுரையுடன் இவ்விஷயத்தை முடிக்கிறேன். (தொடரும்)

மாலவல்லியின் தியாகம்



அத்தியாயம் 2

காதலும் கைவாளும்

தஞ்சை அமைச்சர் புலிப்பள்ளி கொண்டார் வந்திருக்கிறார் என்பதைப் பணியாள் மூலம் அறிந்ததும், ஆதித்தன் சிறிது ஆச்சரியமடைந்தான். அங்கிருந்த மற்றவர்களுக்கும் அது சிறிது ஆச்சரியத்தைத்தான் தந்தது. பாண்டிய மன்னரின் அமைச்சர் மதுரையிலிருந்து வந்திருப்பதும் அதையொட்டி, தஞ்சை முத்தரையரின் அமைச்சர் வந்திருப்பதும் ஏதோ ஒரு முக்கிய காரணம் பற்றித்தான் இருக்க வேண்டும் என்று மற்றவர்களுக்குத் தோன்றியது.

பொதுவாகப் பாண்டிய மன்னர் கொடும்பாளூர் இருக்கு வேளிர்களின் நட்பை விரும்புகிறார் என்பதும் அதே சமயத்தில் பல்லவ மன்னர் சிறிது மன வேற்றுமையும் குரோதமும் வைத்துள்ளார் என்பதும் யாவரும் அறிந்ததே. தஞ்சை மன்னர் முத்தரையரின் வார்த்தைகளைக் கேட்டுப் பல்லவ மன்னர் கொடும்பாளூரையே அழித்துவிட எண்ணமிடுகிறார் என்பதும் ஆதித்தனுக்குத் தெரியும். இந்நிலையில் தஞ்சை மன்னனின் அமைச்சர் புலிப்பள்ளி கொண்டார் ஏதோ வஞ்சக எண்ணத்தோடுதான் கொடும்பை நகருக்கு வந்திருக்க வேண்டுமென்று ஆதித்தன் எண்ணினான். முக்கியமாகக் கொடும்பாளூர் கோட்டையைப் பற்றிய ரகசியங்களையெல்லாம் எப்படியாவது அறிந்து கொண்டு போகலாமென்று வந்திருக்கலாமல்லவா?

ஆதித்தன் மற்றவர்களை அச் சோலையிலேயே விட்டு விட்டுத் தனியாக அரண்மனையை நோக்கி நடந்தான்.

பராந்தகன் கோட்டைக் காவலர்களை எச்சரிக்கை செய்வதற்காகச் சென்றான்.

தஞ்சை அமைச்சர் புலிப்பள்ளி கொண்டார் கொடும்பாளூர் வந்திருக்கிறார் என்பதைக் கேட்டதுமே அருந்திகை மனத்தில் சில நினைவுகள் எழுந்தன. புலிப்பள்ளி கொண்டார் தாழ்ந்த நிலையிலுள்ள சோழ வம்சத்தினரை அடியோடு ஒழித்து விடச் சூழ்ச்சி செய்திருக்கிறார் என்பதும் அதன் காரணமாக நந்திபுர நகரிலுள்ள இடங்காக்கப் பிறந்தார் தங்களுக்கு அனுகூலமாக இருக்கிறார் என்பதினால் அவருடைய ஒரே மகள் திருபுவனியைத் தம் மகன் கோளாந்தகனுக்கு விவாகம் செய்து வைத்து அவர்களையும் தங்களுக்கு விரோதியாக்க நினைக்கிறார் என்பதையும் அருந்திகை அறிந்திருந்தாள் அல்லவா?

அருந்திகை கொடும்பாளூர் வந்ததுமே தன் காதலனாகிய பராந்தகனிடம் நந்திபுர நகரிலுள்ள இடங்காக்கப் பிறந்தாரின் மகள் பல வருடங்களுக்குப் பின் அகப்பட்டதும் புத்தபிக்ஷுணி கோலத்தில் உள்ள அப்பெண்ணின் நிலைமையையும், தஞ்சை அமைச்சர் தம் மகனுக்கு அந்தப் பெண்ணை மணம் முடிக்க நிச்சயித்திருப்பதையும் சொல்லியிருந்தாள்.

அருந்திகை சொல்லியவையெல்லாம் பராந்தகனின் நினைவுக்கு வந்தன. கோட்டை பாதுகாப்பாளர்களை எச்சரிக்கை செய்யச் சென்ற அவன் வேறு வழியாகத் திரும்பி. அரண்மனையை

கி. ரா. கோபாலன்

நோக்கிச் செல்லும் தன் அண்ணனைச் சந்தித்தான்.

·கோட்டைப் பக்கம் சென்ற தன் சகோதரன் எதிர்பாராதவண்ணம் எதிரே வருவதைக் கண்ட ஆதித்தன் ஆச்சரியமுற்ற வண்ணம் அவனைப் பார்த்தான்.

''என்ன?''

'' தஞ்சை அமைச்சர் இங்கு வந்திருக்கும் காரணம் அவருடைய மகன் கோளாந்தகனுக்குக் கல்யாணமாம். அந்தச் சுபச் செய்தியைச் சொல்வதற்



காகத்தான் இருக்கும்'' என்றான் பராந்தகன்.

இதைக் கேட்டதும் ஆதித்தன் ஆச்சரியம் அடைந்தவனாய், ''அப்படியா? கோளாந்தகனுக்கு விவாகமா? யார் ஒரு பெண்ணை அப்படி அவனுக்குப் பலி கொடுக்கச் சித்தமாயிருக்கிறார்கள்?'' என்று கேட்டான்.

''நந்திபுர நகரத்து இடங்காக்கப் பிறந்தார் தம் ஒரே மகள் திருபுவனியை அவனுக்கு விவாகம் செய்து கொடுக்கச் சம்மதித்திருக்கிறாராம்'' என்றான் பராந்தகன் மிகவும்அடக்கமானகுரலில்.

''அப்படியா? கலியாணத்தின் மூலம் தங்களுக்கு ஆதரவு தேடப் பார்க்கிறார்கள் போலிருக்கிறது. நெடு நாட்களாகக் காணமல் போன தம் மகளை அவர் திரும்ப அடைந்து விட்டார் என்பதில் எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. அந்த அருமை மகளை இப்படிப் பலி கொடுக்க அந்த மனிதர் துணிந்ததுதான் பரிதாபம். இதைத் தடுப்பவர்கள் இல்லையா..?'' என்றான் ஆதித்தன்.

''இதெல்லாம் மாறுவேடத்தில் திரியும் . கலங்கமாலரையனின் சூழ்ச்சி. இடங்காக்கப் பிறந்தாரின் மகள் திருபுவனிக்கே கோளாந்தகனை விவாகம் செய்து கொள்ள விருப்பமில்லை என்று தெரிகிறது. புத்தபிக்ஷுணிக் கோலத்தில் தானிருக்கிறாளாம். அவளுக்குத் துறவறத்தில்தான் நாட்டம் அதிகமாக இருக்கிறதாம்..'' என்றான் பராந்தகன்.

''துறவுக் கோலத்தில் நாட்டம் கொண்ட ஒரு பெண்ணுக்கு மணம் முடிப்பதென்றால் கடினமல்லவா? அதுவும் அவள் பிக்ஷுணிக் கோலத்திலேயே இருக்கிறாள் என்கிறாய்'' என்றான் ஆதித்தன் சிரித்துக் கொண்டே.

''பிக்ஷுணிக் கோலத்திலேயே கல்யாணம் செய்தாலும் செய்து விடு

வார்கள், பாவிகள்!'' என்று கூறினன் பராந்தகன் அவர்களிடம்.


''கிராதகர்கள் அப்படியும் செய்தாலும் செய்வார்கள். ஒருவேளை கோளாந்தகனும் பிக்ஷுணிக்கேற்ற பிக்ஷுவாக மாறினலும் மாறி விடுவான். இப்பொழுதுதான் பௌத்த மதத் துறவியாகிவிடுவது வெகு எளிதாக இருக்கிறதே? ஏற்கனவே கலங்கமாலரையர் வேறு வழிகாட்டி இருக்கிருர்'' என்ருன் ஆதித்தன்.

''இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது. புத்தபிக்ஷுணிக் கோலத்தில் இருக்கும் இடங்காக்கப் பிறந்தாரின் புதல்வியை வேறு எங்கோ பார்த்த நினைவாக இருப்பதாக அருந்திகை சொல்லுகிருள். உண்மையாக அவள் இடங்காக்கப் பிறந்தாரின் மகளோ இல்லையோ என்று சந்தேகப்படுகிருள் அருந்திகை.''

''இருக்கட்டும். இதைப் பற்றி நாம் சிறிது கவனம் செலுத்த வேண்டியது தான். எப்படியோ நந்திபுர நகருக்குச் சமீபமாக இருக்கும் பழையாறை நகருக்குள்ள ஆதரவைக் குலைக்கத்தான் இந்த ஏற்பாடுகள் நடக்கிறதென்றுதெளிவாகி விட்டது. இதைப் பற்றி அப்புறம் யோசிப்போம். புலிப்பள்ளி கொண்டார் எனக்காக அரண்மனையில் காத்திருக்கிருர். போய்ப் பார்க்கிறேன். நீ கோட்டைக் காவலர்களைக் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்கும்படி சொல்லு. கோட்டையின் ரகசியங்களை அறிந்து கொள்ளப் புலிப்பள்ளியாரோடு வேறு வேவுகாரர்களும் வந்திருக்கலாம்'' என்று சொல்லிவிட்டு அரண்மனையை நோக்கி நடந்தான் ஆதித்தன்.

ஆதித்தனும் பராந்தகனும் அச்சோலையை விட்டு அகன்றதும் அருண்மொழியார் விஜயனைப் பார்த்து, ''வாருங்கள். நாம் இப்படி இந்தச் சோலையில் உலாவலாம்'' என்ருர்.

அருந்திகையும் அனுபமாவும் சிறிது வெட்கத்தோடு ஒருபுறமாக நின்றனர். இதைக் கண்ட அருண்மொழியார் சிரித்துக் கொண்டே, ''என்னைக்



கண்டு வெட்கப்பட வேண்டாம். நான் கிழவன். நீங்கள் என்னுடைய பேத்திகள் போல" என்றார். எல்லோரும் கலகலவென்று நகைத்தனர்.

* * *

அருந்திகையும் அனுபமாவும் ஒருவிதமாகச் சுதாரித்துக் கொண்டு அருண்மொழியாரின் வார்த்தைக் கிணங்கச் சிறிது நேரம் தோட்டத்தில் சுற்றி உல்லாசமாகக் கழிக்க நினைத்தனர்.

அவர்கள் சிறிது நேரம் சோலையைச் சுற்றிப் பார்த்து விட்டு அங்குள்ள உல்லாச மண்டபம் ஒன்றில் சென்று அமர்ந்தனர். "உங்களைப்போன்ற வயதுடையவர்களுக்கு என்னைப் போன்ற கிழவனோடு சோலையைச் சுற்றிப் பார்ப்பது அவ்வளவாக மனத்துக்கு இன்பத்தை உண்டாக்காது" என்றார் அருண்மொழியார். அவருடைய வார்த்தையைக் கேட்டு விஜயன் சிரித்தான். அருந்திகையும் அனுபமாவும் சிறிது நாணத்தோடு தலை குனிந்து கொண்டனர்.


இந்தச் சந்தர்ப்பத்தில் கோட்டையைப் பார்த்து வருவதற்காகச் சென்ற பராந்தகன் திரும்பி வந்தான். அவனைக் கண்டதும் அருண்மொழியார் "வாருங்கள். இவர்களோடு சிறிது நேரம் சோலையைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தேன். கொடும்பாளூர் கோட்டையைப் போலச் சோலையும் பிரமிக்க வைக்கக் கூடியதாகத்தான் இருக்கிறது. சோலை காதலை நினைவுக்குக் கொண்டு வருகிறது. கோட்டை வீரத்தை நினைவுக்குக் கொண்டு வருகிறது. ஆம்! இந்தக் கொடும்பைமா நகரில் காதலும் வீரமும் கலந்து களிநடம் இடுவதைப் பார்க்கிறேன். நான் வயோதிகன். இருப்பினும் உங்களைப் போன்ற அன்யோன்யமுள்ள இளங் காதலர்களைப் பார்ப்பதை விட ஆனந்தம் வேறு எதிலும் இல்லை. ஆண்மையும் வீரமும் கொண்ட விஜயனுக்கு ஏற்ற அழகும் துடிப்பும் கொண்டவள் அனுபமா. அதே போல அழகும் புத்தியும் நிறைந்த அருந்திகைப் பிராட்டிக்கு ஏற்ற கணவர் நீங்கள்தான். இந்த இணைப்புக்கு ஈடான இணைப்பே காண்பது அரிது. என் வார்த்தை கண்திருஷ்டி தோஷமாகி விடுமோ என்று கூடப் பயப்படுகிறேன்.." என்றார்.




பராந்தகன் சிரித்துக் கொண்டே, "உங்கள் கண்திருஷ்டி தோஷமாகி விடாது. பெரியோராகிய உங்கள் ஆசிர்வாதம் எங்களை வாழ்விக்கும்" என்று கூறினான்.

"நான் ஒரு முக்கியமான விஷயத்தைக் கேள்விப்பட்டுத்தான் இங்கு வந்தேன். ஒற்றர்கள் மூலம் நந்திபுர நகரம் இடங்காக்கப் பிறந்தாரின் மகளைத் தஞ்சை அமைச்சர் புலிப்பள்ளியாரின் மகன் கோளாந்தகனுக்குக் கல்யாணம் செய்து கொடுக்கப் போவதாக அறிந்தேன். இதில் ஏதோ ஒரு சூழ்ச்சி இருக்கிறது. இதனால் பழையாறை நகருக்கு ஆபத்து ஏற்படலாம். சாம்ராஜ்ய ஆசை கொண்ட பல்லவ மன்னரும் அவருக்குத் தூண்டுதலாகவும் துணையாகவும் நிற்கும் தஞ்சை முத்தரையரும் செய்யும் சூழ்ச்சிகளுக்கு இடமளித்துக் கொண்டே போனால் இன்று ஒளி மழுங்கிய வைரம்போல் காணப்படும் சோழ வம்சம் நிர்மூலமாக்கப்பட்டு விடும் என்பதில் சந்தேகமில்லை. நெடுங் காலமாகச் சோழ வம்சத்தாரிடம் அபிமானம் வைத்துள்ள இடங்காக்கப் பிறந்தாரின் மனத்தைக் கலைத்துப் பகைமையை வளர்த்து விட்டால் பல காரியங்களை எளிதாக முடித்துக் கொள்ளலாம் என்றுதான் அவர்கள் திட்டமிட்டிருக்க வேண்டும். முக்கியமாக எதிர்காலத்தில் பெருவீரனாகத் திகழ்ந்து தன் குலப் பெருமையை உலகில் நிலைநாட்ட நினைக்கும் விஜயன் மீதுதான் அவர்களுக்குக் கண் என்பதை மறந்துவிடக் கூடாது. பாண்டிய மன்னர், ஒரு காலத்தில் தன் சாம்ராஜ்யத்தைவிட உயர்ந்த நிலையில் இருந்த சோழ சாம்ராஜ்யத்தின் மீதும் அவ்வம்சத்தைச் சேர்ந்தவர்கள் மீதும் அளவற்ற அனுதாபம் கொண்டவராக இருக்கிறார். இதற்காக எவ்வித உதவியும் செய்யத் தயாராக இருக்கிறார்" என்று சொல்லிப் பராந்தகனின் முகத்தைப் பார்த்தார்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு வந்த பராந்தகன் ஏளனமாகச் சிரித்துக் கொண்டான். "எல்லாவற்றையும் நாங்கள் தெரிந்து கொண்டுதான் இருக்கிறோம். ஒரு உண்மையை உங்களுக்கு விளக்க நினைக்கிறேன். இந்நாள்வரையில் எப்படி இருப்பினும் இந்தக் கொடும்பா


குறிப்பிட்ட இடத்திற்கு வெளிச்சம்!
நீங்கள் தட்டுத்தடுமாற வேண்டாம்! இராத்திரி வேளைகளில் அவசரத் தேவைகளுக்கு ரேடியோ டார்ச் லைட்டு லாம்பு பொருத்தப்பெற்ற ஒரு டார்ச்சு லைட்டைத் தயாராக வைத்திருங்கள். இந்த பல்புகள் ஒருபோதும் உங்களை கைவிடாது.
ரேடியோ
பிளாஷ்லைட் லாம்ப்ஸ்
அவைகள் அதிக பிரகாசமானவை...
நீடித்து நிற்பவை
RADIO
FLASHLIGHT LAMPS
ரேடியோ லாம்ப் ஒர்க்ஸ் லிட்., பம்பாய், கல்கத்தா, டில்லி,
கான்பூர், மதராஸ், இந்தூர்.


உங்கள் அழகை அதிகரிக்கிறது
பாதுகாக்கவும் செய்கிறது!
அற்புத நறுமணமூட்டப்பட்ட சார்மிஸ் ஸ்னோ உங்கள் சருமத்தை அழகுறச் செய்கிறது, பாதுகாக்கிறது. எல்லா பருவ காலங்களிலும் சருமத்தை மிருதுவாகவும், வெல்வெட் போல வழவழப்பாகவும் வைக்கிறது. பவுடருக்கு ஆதாரமானது. எண்ணைப் பசையில்லாதது. சார்மிஸ் ஸ்னோ சொற சொறப்பும், வரிகளும், கோடுகளும், புண்களும் ஏற்படாமல் சிறந்த முறையில் தடுக்கிறது. பூச்சிக்கடிகள், வெடிப்புகளினின்றும் பாதுகாக்கிறது.
Charmis SNOW
COLGATE
PROTECTS AND BEAUTIFIES THE SKIN
ஒரு கால்கேட் உயர்தர சரக்கு
சார்மிஸ் ஸ்னோ
CS6/3
சார்மிஸ் பலகாரிய க்ரீமையும் டால்கம் பவுடரையும் பரீட்சித்திருக்கிறீர்களா?



குன்றுதோறாடும் குமரப் பெருமான் எழுந்தருளியுள்ள பழனிமலையில் அன்று நாதசுர இன்னிசை ஒலித்தது. பீளமேடு பி. எஸ். ஜி. அறநிலைய ஸ்தாபகர் திரு வெங்கிடசாமி நாயுடு அவர்கள் பேத்தியும் குமரன் மில்ஸ் மானேஜிங் ஏஜெண்டு திரு ஜி. வி. ராமசாமி நாயுடு அவர்கள் புதல்வியுமான செல்வி ஸ்வரூபராணிக்கும் அனுப்பபட்டி மிராசுதார் எஸ். ஜி. லக்ஷ்மிநாராயணசாமி நாயுடு குமாரர் செல்வன் ஏ. எல். ரங்கநாதனுக்கும் ஜூன் 17ந் தேதி பழனி ஸ்ரீ பாலசுப்ரமணிய நிலையத்தில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. அன்று மாலை அனுப்பபட்டி மணமகன் இல்லத்தில் ராதா ஜெயலக்ஷ்மி சகோதரிகளின் இன்னிசையும்; மறுநாள் மாலை பீளமேடு மணமகள் இல்லத்தில் திருமதி டி. கே. பட்டம்மாளின் இசை விருந்தும் நடைபெற்றன. திருமணத்துக்கும், வரவேற்பு வைபவங்களுக்கும் ஏராளமான நண்பர்களும் உறவினர்களும் வந்திருந்து சிறப்பித்தனர்.

ளூரார்கள் எந்த சாம்ராஜ்யத்துக்கும் பூரண அடிமையாகித் தங்களுடைய அரசைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்று விரும்பியதில்லை. இந்தக் கொடும்பை நகரைச் சுற்றிலும் பெருங்கோட்டையை எழுப்பி வைத்திருக்கும் எங்கள் பிதா பூதி விக்கிரமகேசரியைப் பற்றித் தாங்கள் தெரிந்துகொள்ளாமல் இருந்திருக்க முடியாது. இன்றுள்ள நிலையில் ஒரு உண்மையைச் சொல்லுகிறேன். இப்படிப்பட்ட அதிசயிக்கத்தக்க கோட்டையை அவர் அழகுக்காகக் கட்டி வைக்கவில்லை. அவர் மனத்தில் எழுந்த கனவுகள் எத்தனை எத்தனையோ? அவர் இந்தக் கோட்டையைக் கட்ட ஆரம்பித்ததிலிருந்து பல்லவ மன்னருக்கும் என் தகப்பனாருக்கும் இருந்த அந்தரங்க நட்பில் சிறிது களங்கம் ஏற்பட்டது. அன்றிலிருந்து பல்லவ மன்னர் எங்களிடம் அந்தரங்க சுத்தியோடு நடந்து கொள்வதில்லை. அதோடு எங்கள் தகப்பனார் ரத்தக் கலப்பின் காரணமாகச் சோழ வம்சத்தினருக்குப் பரிவு காட்டுகிறார் என்பதை எண்ணிப் பல்லவ மன்னர் கிலி அடைகிறார். அவருக்கு ஏற்பட்ட கிலி அவரைச்சூழ்ந்துள்ள வஞ்சகர்களின் உபதேசத்தினால் இன்னும் அதிகமாகிப் பலவித தவறான காரியங்களில் அவரை இழுத்து விட்டிருக்கிறது. அதிலும் தஞ்சை முத்தரையர் எங்களிடம் நட்பு பாராட்டுவது போலிருந்து எங்களையே ஒழித்துவிடச் சமயம் பார்க்கிறார். அதிவிசித்திரமாகக் கட்டப்பட்டுள்ள இந்தக் கோட்டையின் சூக்ஷ்மங்களை அறிந்து கொள்ள மிகவும் பிரயாசைப் படுகிறார். இங்கே புலிப்பள்ளி கொண்டார் விஜயம் செய்திருப்பதும் அதற்காகவே தான் இருக்கும். முத்தரையரின் கையாட்களாக இருந்து வரும் கலங்கமாலரையனையும், புலிப்பள்ளி கொண்டாரையும் ஒழித்துக் கட்டிவிடுவது பெரிய காரியமில்லை. ஆனால் அது ஒரு சுத்த வீரனுக்குரிய செய்கையாகாது'' என்றான் பராந்தகன் படபடப்போடு.

அதைக்கேட்டதும் அருண்மொழியார், ''அது உண்மை: ஆனால் நான் ஒரு பேரரசரிடம் அமைச்சராக இருக்கிறேன் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். அரச தர்மங்கள் பலவற்றையும் கற்றுத் தெரிந்த பின்தான் ஒருவன் அமைச்சனாக முடியும் என்பதும் தங்களுக்குத் தெரியாததல்ல. சாம்ராஜ்ய ஆசையில் தர்மாதர்மங்களை மீறி எதிராளிகள் பல சூழ்ச்சிகள் செய்வதுமுண்டு. இத்தகைய சூழ்ச்சிகளுக்கு நாம் தர்ம நியாயங்களைப் பார்த்து இடமளித்துக் கொண்டே போனோமானால் இங்கு தர்மத்தைக் காட்டிக் காட்டியே தர்மத்தைக் கொன்றவர்களாகி விடுவோம். அரசர்களுக்கோ, அமைச்சர்களுக்கோ உரிய கொள்கை ஒன்றே ஒன்றுதான். தர்மத்தோடு போரிட வந்தவனிடம் தர்மத்தோடு போரிட்டுத் தர்மத்தைக் காப்பது அல்லது அதர்ம நோக்கத்தோடு காரியம் செய்கிறவர்களைத் தர்மத்தோடே முடியாவிட்டால் அதர்மத்தோடே அழித்துத் தர்மத்தை நிலை நாட்டுவதுதான். உங்களுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்கிறவர்களை இப்படியே விட்டு வைப்பது பிசகு என்பதை

உணர்ந்து தான் நான் இப்படிச் சொல்கிறேன்'' என்று கூறினார்.

''நான் அதை உணர்ந்தேன். ஆனால் இன்றுள்ள நிலையில் நாம் அவர்களை அழிக்கச் சிரமமே எடுத்துக் கொள்ள வேண்டாத நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. வறுமையும் பிணியும், மதப் பூசலும், அரசாங்க ஊழலும் நிறைந்து அல்லல்படும் சோழ நாட்டில் மக்களே அதை உணர்ந்திருக்கின்றனர். இன்னும் சோழ வம்சத்தினரிடம் பக்தியும் விசுவாசமும் கொண்ட அனேக வீரர்களும், படித்த பெரியோர்களும் பல காரியங்களைச் செய்து வருகின்றனர். இன்று எதிரிகளின் இத்தனை சூழ்ச்சிகளுக்கிடையேயும் சிறு நகராகிய பழையாறையிலுள்ள சோழ அரசு தலைவனற்ற நிலையிலும் பாதுகாக்கப்படுகிறதென்றால் மக்களின் பேராதரவுதான் என்று தெரிந்து கொள்ளுங்கள். இன்று இளம் வயதினராக இருக்கும் விஜயனும் அருந்திகையும் எவ்வித ஆபத்தும் தங்களுக்கு ஏற்படாமல் உயிர் வாழ்ந்து வருகிறார்களென்றால் பழையாறையைச் சுற்றிலும் கொடும்பாளூரைப் போல் கற்கோட்டை எழுப்பப் படாவிடினும் மக்கள் கற்கோட்டையாக நின்று காக்கின்றனர் என்றுதானே அர்த்தம்?'' என்றான் பராந்தகன்.

''அதையும் நான் உணர்ந்திருக்கிறேன். மக்கள் பலம்தான் மன்னர் பலம் என்பதை உணராதவனல்ல நான். இருப்பினும் சூறாவளி போல் அதர்மம் தலைவிரித்தாடித் தர்மத்தைச்சிதற அடித்திருப்பதையும் நாம் பார்த்திருக்கிறோம். மக்களின் ஆதரவு இருக்கிறதென்று மன்னன் பேசாமல் இருந்துவிட முடியுமா? எதிரிகள் மன்னனைப் பகையாளியாக நினைக்கும்போது அவர்கள் மக்கள் நிலையைப் பற்றி நினைப்பதே இல்லை. எந்த இடத்தில் தன் சாம்ராஜ்யத்தை நிலைநிறுத்த எண்ணிய மன்னனும் அந்த இடத்தில் வாழும் மக்களைத்தன் எதிரியாகக் கொள்ள விரும்பியதே இல்லை. அவனும் அந்நாட்டு மக்களுக்கு ஆதரவளிப்பவன் போல்தான் நடந்துகொள்வான். அதனால் தான் சொல்கிறேன். மக்களின் கவலை மாத்திரம் போதாது. மன்னரும் கவலை செலுத்த வேண்டுமென்று!'' என்றார் அருண்மொழியார்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு வந்த பராந்தகனுக்குப் பக்கத்தில் நின்ற அருந்திகை அருண்மொழியாரைப் பார்த்து, ''' ஏதோ விளையாட்டாகப் பேசிப் பொழுதைக் கழிக்கப் போவதாகச் சொன்ன நீங்கள் ஏதோ அரசாங்க விஷயங்களை யெல்லாம் பேசத் தொடங்கி விட்டீர்களே....?'' என்றாள் மெதுவான குரலில்.

பராந்தகன் சிரித்துக் கொண்டே, ''ஒரு அரசாங்கத்தில் அமைச்சராக இருப்பவர்கள் மன நிம்மதியையும் ஓய்வையும் விரும்பி எங்கேனும் சென்றாலும் அங்கேயும் இத்தகைய தொல்லைகளெல்லாம் பிடித்து விடுவது சகஜம் தான். அதிலும் இந்த அமைச்சர் பெருமான் மதுரைமா நகரிலிருந்து இவ்விடம் விஜயம் செய்தது நம்மை யெல்லாம் சரியாகத் தெரிந்து கொள்ள வேண்டு மென்பதற்காகத் தானே?'' என்றான்.

இவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருக்கும் தருணத்தை ஒரு வாய்ப்பாகக் கருதிய அனுபமாவும் விஜயனும் அவ்விடத்திலிருந்து தோட்டத்திலுள்ள மலர்ச் செடிகளைப் பார்ப்பவர்கள் போல் அப்படியும் இப்படியுமாகப் பார்த்துக் கொண்டே சற்றுத் தூரத்துக்கப்பால் நின்று அளாவளாவிக்கொண்டிருந்தனர்.

அவர்கள் சற்றுத் தூரத்துக்கு அப்பால் சென்று அளவளாவுவதைக் கண்ட அருண்மொழியார் பராந்தகனுக்கு அவர்



வள்ளலார் மாணவர் இல்லத்தைச் சேர்ந்த இராஜேஸ்வரி வேதாசலம் இறைபணி மன்றத்தில் எழுந்தருளப் பெற்ற அம்பலவாணர், சிவகாமி மாணிக்க வாசகரின் திருவுருவங்களையும், மேற்படி இல்லத்தில் திருக்குடமுழுக்கு விழாவில் சொற்பொழிவாற்றிய திருப்பெருந் திரு சோமசுந்தரத் தம்பிரான், திரு சச்சிதானந்தம் பிள்ளை, திரு சிவகுமாரன் ஆகியவர்களுடன் மாணவர் இல்லத்தின் தலைவர் திரு மாசிலாமணி முதலியார் அவர்களையும் காணலாம்.

களைச் சுட்டிக் காட்டி, ''பார்த்தீர்களா, நாம் இப்படி வேறு ஏதோ பேசிக் கொண்டிருப்பது அவர்களுக்கு எவ்வளவு அனுகூலமாய் இருக்கிறது என்று. நமக்குச் சிறிது தூரத்திலேயே அவர்கள் நின்றாலும் நம்மை யெல்லாம் விட்டு விலகி நெடுந்தூரத்துக்கப்பால் உள்ள உலகத்தில் சஞ்சரிப்பவர்கள் போல் இல்லையா? போகட்டும். இந்த விஜயனுக்கு அவனுடைய நலனைப் பற்றி நம் பேச்சில் கவலை இல்லாது போனது தான் ஆச்சரியமா யிருக்கிறது'' என்றார்.

''விஜயன் வெறும் பேச்சில் எல்லாம் அதிகக் கவலை செலுத்துவதில்லை. இவ் விஷயங்களிலெல்லாம் அவன் வாயால் பேசுவதில்லை. அவன் கைவாள்தான் பேசும்'' என்றாள் அருந்திகை.

''போகட்டும். அதுவும் நல்லதுதான். நீ சொல்வதிலிருந்து அவன் வாழ்க்கையில் காதலும் கத்தியும்தான் மிகவும் முக்கியமானதாக இருக்கும் போலிருக்கிறது'' என்றார் அருண்மொழியார்.

''நீங்கள் நினைப்பதும் தவறு. அவனுடைய வாழ்க்கையில் காதலைவிடக் கைவாள் தான் பிராதான்யமானது. அவன் அனுபமாவைக் காதலிப்பதற்கு முன் கை வாளைத்தான் காதலித்தான். அவன் அவளை விட்டுப் பிரிந்திருக்கும் நேரமும் உண்டு. ஆனால் கைவாளைப் பிரிந்து ஒரு கணமும் இருந்ததில்லை'' என்றான் பராந்தகன்.

''சரிதான். அப்படித்தான் இருக்க வேண்டும். வீர நெஞ்சம் படைத்த ஒரு வாலிபனுக்கு வாய்க்கும் காதலியும் அவன் குணத்தை ஒத்தவளாக இருக்க வேண்டும். அனுபமா அவ்விதத்தில் சிறந்தவளாகவே இருப்பாள் என்று நம்புகிறேன்'' என்றார்.


அந்தச் சமயத்தில் அரண்மனையிலிருந்து வந்த சேவகன் ஒருவன் பராந்தகனை வணங்கி அரசர் அவனை அழைப்பதாகச் சொன்னான்.

கொடும்பாளூர் அரண்மனையில் அந்தரங்க ஆலோசனை செய்யும் மண்டபத்தில் அரசன் ஆதித்தனும் தஞ்சை அமைச்சர் புலிப்பள்ளியாரும் அமர்ந்திருந்தனர். பராந்தகன் அங்கு வந்தபோது ஆதித்தன் ஆழ்ந்த யோசனையிலிருந்தான். புலிப்பள்ளியார் அவனிடமிருந்து ஏதோ பதிலை எதிர் பார்ப்பவர் போல் அவன் முகத்தையே துடிப்போடு பார்த்துக் கொண்டிருந்தார்.

பராந்தகன் அங்கு வந்ததைக் காலடி ஓசையிலிருந்து அறிந்து கொண்ட ஆதித்தன் தலை நிமிர்ந்து அவனைப் பார்த்து விட்டு, ''தஞ்சை அமைச்சர் நமக்கு முத்தரையரிடமிருந்து ஒரு செய்தி கொண்டு வந்திருக்கிறார். இது சம்பந்தமாக உன்னையும் கலந்தாலோசிக்க விரும்புகிறேன். நமது தங்கை அனுபமாவை அவருடைய குமாரன் இளந்திரையனுக்கு விவாகம் செய்து கொடுக்கும்படி கேட்கிறார். பல்லவ மன்னரும் முத்தரையர் நம் வம்சத்தாரோடு சம்பந்தம் செய்து கொள்வதை மிகவும் விரும்புகிறாராம். நம் அபிப்பிராயத்தை அறியவே தஞ்சை மன்னர் அமைச்சர் அவர்களை அனுப்பியுள்ளார். உன் அபிப்பிராயத்தைச் சொல்வதில் தடை ஏதுமில்லையே..?'' என்றான்.

ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்

பூமேனி பாப்பாக்களுக்கு புவியில் சிறந்த பவுடர்



இலவச புத்தகம்: ஜான்ஸனின் குழந்தை பராமரிப்பு புத்தகத்தின் இலவசப் பிரதிக்கு எழுதுங்கள். பெற்றோர்களுக்கு உபயோகமான அநேக விஷயங்கள் இதில் அடங்கியுள்ளன. இங்கிலீஷ் அல்லது தமிழ்ப் பிரதிகளில் எது வேண்டுமென்று குறிப்பிட்டு எழுதவும்.

ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன், பி.ஓ. பாக்ஸ் 1976, டிபார்ட்மெண்ட் 36-I பம்பாய்

நீரும் பேறும்

ஸ்ரீப்ரியா



அவசரம் அவசரமாக நதிக்கரையை நோக்கி விரைந்து கொண்டிருந்தோம் நாங்கள். இருள்பயங்கரமாகக் கவ்விக் கொள்ள ஆரம்பித்திருந்தது. முன்தின உற்சவ விமரிசையில் ‘ஜே ஜே’ என்றிருந்த ஜனக் கூட்டம் இப்போது தெய்வத்தை விட்டு வீட்டை நோக்கி ஓடும் வேகத்தில் கோதாவரிக் கரையை வளைத்துக் கொண்டிருந்தது. ‘சத சத’ வென்று தெருவெல்லாம் சகதி. இருபுறமும் கடைகளெல்லாம் முதல்நாள் நடந்த வியாபாரத்தில் அசந்துபோய், நீந்திக் கை சளைத்தவன் போல் சிறு விளக்கடியில் இருளுக்கு அதிகச் சலுகை கொடுத்து ஓய்ந்து கிடந்தது.

பத்ராஜல நாதர் கோயிலுக்குக் குளக் கரையிலிருந்து அரை மைல் ஏறி மேட்டில் நடந்து செல்ல வேண்டும். ராமதாசன் கட்டிய கோயில் இன்று புண்ணிய ஸ்தலமாகி விட்டது. கோயில் கட்டியவர் அக் கடனைத் தீர்க்கச் சிறையில் அடைபட்டாலும், இன்று தரிசனம் செய்யும் பக்தர்களோ கைமேல் பலன் அளிக்கும் தெய்வமாகத்தான் பட்டாபிஷேகக் கோலத்தில் ராமனைக் கண்டு களித்தனர்.

“மெதுவாக வா, சீதா! கூட்டத்தைப் பார்த்தால் மூன்று மணி நேரமாவது காக்க வேண்டும் போலிருக்கிறது! அவசரப்படுவானேன்?” என் வேகத்துக்குத் தடை கட்டினார் என் கணவர்.

“ஆமாம், இப்போதே நேரமாகிவிட்டது. இன்னும் எப்பொழுது போவது? அர்த்த ராத்திரியிலா? உங்களுக்கே எதிலும் முந்தத் தெரியாது...” அயர்வில்எழுந்த கோபம் அது. குரலுக்கு ‘அவர்’ பதிலளிக்காமல் இல்லை.

“ஊரை விட்டுக் கிளம்பி மூன்று நாளானவளுக்கு மூன்று மணி நேரம் தாங்காதா? வீட்டில் என்ன வைத்திருக்கிறது? பிள்ளையா குட்டியா கவலைப்பட....?”

எனக்குச் ‘சுருக்’கென்றது. ஆம்! பிள்ளைக் கலி தீரத்தானே நான் இடம் இடமாகச் சுற்றி வேண்டாத தெய்வமெல்லாம் வேண்டுகிறேன்! இதைக் குத்திக் காண்பிக்கும் இவருக்கு மட்டும் அந்தக் குறை யில்லையா?

திருக்கல்யாணத்தின்போது நடந்த சம்பவம் என் நினைவுக்கு வந்தது. மனத்தில் வேதனையும் ஆசையும் குமிழியிட உடலெல்லாம் இதயமாகிக் கசிந்துருகப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தேன். “ராமபிரானே! யாகம் செய்து உன் தந்தை நாலு பிள்ளைகளும் பெற்றார்; எனக்கு ஒரு மகனாவது கொடு. பிறவா வரம் கேட்கவில்லை; ஒரு உயிர் பிறக்கும் வரமே வேண்டுகிறேன்...”

“தனக்குப் பிறந்த குழந்தையைக் காட்டில் விட்டவன் உனக்குப் பிள்ளை வரம் தருவானா?” என் கணவர் சிரித்தார். “சீதா! டாக்டர்கள் கூடக் கை விரித்த பின் உன் ஆசை குறைய வில்லையே? கலிகாரம்கூட நமக்கு ஆகி வராதபோது இன்னும் எப்படி இந்த ஆசையெல்லாம் கொண்டு வருகிறாய்!” என்று அனுதாபத்துடன் தேற்றினார்.

அவருடைய சொல்லில் சோர்ந்த நான் நடை வேகத்தைத் தளர்த்தினேன். கரை யோரமாக ‘ஹோ ஹோ’ என்று ஒரே இரைச்சல். ஆனால் என் காதில் அது வெறும் சத்தமாக, ஜனக் கும்பலின் ஆரவாரமாகக் கேட்கவில்லை. உலகமே என் எதிரே திரண்டெழுந்து ‘நீ பாக்கியமற்றவள்...’ என்று ஆர்ப்பரிப்பது போல் இருந்தது. ‘கலிகாரம்’ என்ற சொல் என் நினைவைச் சுழற்றியது.

* * *


எனக்கு மணமாகிப் பதினைந்து ஆண்டுகளாகின்றன. எட்டு வருடங்களுக்கு முன் நடந்தது அது. எனக்குத் தூரத்து உறவினளான ஒரு அம்மாள் வந்திருந்தாள், என் விருந்தாளியாக. வளரும் குடும்பத்தின் கஷ்டங்களைக் கூறி, என்னிடம் மிகவும் வருந்தினாள். அப்போது கையில் எட்டு மாதத்துக் குழந்தை அந்த அம்மாளுக்கு. மறுபடியும் வயிற்றில் நாலு மாதம். என் மனம் இதைக் கண்டு அனுதாபப்படுவதற்குப் பதில் பொறாமையே கொண்டது. அந்த வேகத்தின் அடிப்படையில் எழுந்தது ஒரு ஆசை.

“இந்த இரண்டும் கெட்டான் குழந்தையை வளர்ப்பதுதான் சிரமம்.”—அந்த அம்மாள் அலுத்தபடியே மடியிலிருந்து குழந்தையைக் கீழே இறக்கினாள். தவழ்ந்து ஓடி, அது என் அருகே வந்து என் முகத்தை நோக்கியது. நான் வாரி அணைத்துக் கொண்டேன். என் மனத்தின் எதிரொலி கேட்டது அந்த அம்மாளின் பேச்சிலிருந்து.

“எனக்கு இப்படி வாரி அளிக்கும் கடவுள் நம்ம சீதாவின் வயிற்றில் ஒரு உயிரை வைக்கக் கூடாதா?”

என் ஆவல் கட்டு மீறியது. “அதனால் என்ன? இந்தக் குழந்தையைத்தான் என்னிடம் விடுங்களேன். உங்களுக்கும் சிரமம் குறையும்...” என் கணவரின் முகத்தை நோக்கியபடி மெல்லக் கூறினேன்.

என்ன ஆச்சரியம்! என் சொல் அரங்கேறியது. அந்த அம்மாள் சம்மதித்தாள். அடுத்த வாரம் நான் குழந்தையை நன்கு வளர்ப்பேன் என்பதை அதற்கு வாங்கிய பட்டுச் சட்டைகள், பால் புட்டிகள் மூலம்



ஊர்ஜிதம் செய்து கொண்டவளாக, அதன் பின்தான் ஊருக்குப் புறப்பட்டாள்.

மாதங்கள் உருண்டன. குழந்தை ரமாவுக்கு அன்று பிறந்த நாள். குழந்தையின் அழகில், மழலையில், 'தத்துப் பித்'தென்ற நடையில் மயங்கிக் கிடந்தேன் நான். பிறந்த தினத்தன்று மாலையில் குழந்தைக்கு உடம்பு இலேசாகச் சுட்டது. 'திருஷ்டி' என்றனர் சிலர். ஆனால் என் பாபதிருஷ்டியின் விளைவு தானோ என்னவோ? மூன்று நாட்களில் குழந்தை என்னைப் பிரிந்தாள். என் மனவேதனை ஒருபுறம் இருக்கப் பெற்றவளுக்கு என்ன பதில் சொல்வது என்ற கவலை வேறு பிடித்தது.

இத்துடன் என் வாழ்வில் குழந்தை அத்தியாயம் முடிந்து விட்டது. இனி நான் வெற்று மரம் மட்டுமல்ல; 'விஷ விருக்ஷம்'. என் நிழலில் ஒதுங்கிய குழந்தையைக் கருகிவிடச் செய்யும் ஆலகால விஷம் நான்! மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு தனி மரமாக வாழ்க்கை நடத்தினேன்...

அதன் பின் பல வருடங்கள் என் மனமும் இருண்டு போய்க் கிடந்தது.

* * *

நடந்தேன்... நடந்தேன்... வழி முடிந்தது. படித்துறை நிறைய வழியும் ஜனக் கும்பலில் ஒரே சலசலப்பு. இதை லட்சியம் செய்யாதது போல் அமைதியாக ஓடிக் கொண்டிருந்தாள் கோதாவரி. அதன் கரையில் இருபடகுகள். போக்குவரவு சாதனமற்ற நிலையில் அதில் ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு ஏற முயன்றனர் பொதுமக்கள்.

படித்தவர், பாமரர், ஆண், பெண் குழந்தை, என்ற வித்தியாசமற்ற போட்டி! அவரவர்களுக்கு அவரவர் அவசரம் இது தான் குறி! ஆண்டவன் சந்நிதியிலிருந்து வந்தவர்களாகத் தோன்றவில்லை. அவர்களைப் பார்த்தால், அதற்குரிய அமைதியும், பண்பும் அங்கு இல்லையே! அவசரம், அவசரம்! எதற்குத்தான் இந்த ஓட்டமும் போட்டியுமோ?

போலீசார் கும்பலை ஒழுங்குபடுத்த முயன்றனர். ராவண சேனையை முறியடித்த அந்த ராமனின் சைன்யமே வந்திருந்தால்கூட ஒழுங்குபடுத்த முடியாத அந்தப் பாமரக் கூட்டத்தில்கேவலம் நூறு போலீசார்கள் என்ன செய்துவிட முடியும்?

இடையேகுரல்கொடுத்தார் ஒரு பெரியவர். "நேரமாகிறது. அகாலமாவதற்குள் பெண்கள் அக்கரை சேரட்டும்...." இதை ஆட்சேபித்தனர் பலர். "பெண்களைத் தனித்து அனுப்புவதாவது..!" என்று தயங்கினர் சிலர்.

பெண்கள் கும்பல் 'திபு திபு' வென்று படகில் இறங்கிற்று. குழந்தைகளும் குட்டிகளும் அதற்கான மூட்டை முடிச்சுகளும். படகில் வந்து விழுந்தன.



படகோட்டி என்னை நோக்கிக் குரல் கொடுத்தான்.

நான் என் கணவர் முகத்தை நோக்கினேன். "சீதா! நீ முன்னால் போ. நீதானே அவசரப்பட்டாய், புர்கம்பாடியிலிருந்து 'ஸ்பெஷல் பஸ்ஸில் கொத்த கூடம் போ... அங்கே போய்ச் சித்தி வீட்டிலிரு. நான் வருகிறேன்" என்றார் என்னிடம்.

"உங்களை விட்டு விட்டு நான் மட்டுமா?" என்று நான் தயங்கியபோது வழக்கம்போல் என் தயக்கத்தைக் கண்டு கோபத்தால் அவர் நெற்றி நரம்பு புடைப்பதைக் கண்டேன்.

"சரி, நான் போகிறேன். நீங்கள் ஜாக்கிரதையாகச் சீக்கிரம் வாருங்கள். தண்ணீரிலே முதலை உண்டாம். கையை நீட்டாதீர்கள், வெளியிலே!" என்று எச்சரித்தேன்.

"அடடா, நீ போயேன் ஜாக்கிரதையாக! அது போதும்!"

நான் தயங்கியபடியே படகில் கால் வைத்தேன். புடவைக் கொசுவம் பக்கத்து மரப் பலகையின் ஆணியில் மாட்டி 'டர்'ரென்று கிழிந்ததுடன், தடுக்கி விழ இருந்த என்னைத் தாங்கிப் பிடித்து உள்ளே படகில் விட்டார் என் கணவர். என்மனம் ஏனோ துணுக்குற்றது.

படகுக்குள் ஒரே குழந்தைகளின் கூக்குரல். இருளின் ஆட்சி. படகுக்காரனின் அதிகாரம். அப்பப்பா! நல்ல உத்சவம்! நல்ல கூட்டம்!

ஆனால் எனக்கு உள்ளே அமர்ந்ததும் ஒரு காட்சி குதூகலம் அளித்தது. உள் நிறையக் குழந்தைகள். அதிலும் என் எதிரே ஒரு குழந்தை. தந்த விக்கிரகம்போல் மொழுமொழு வென்றிருந்தது. அதன் தாயை நோக்கினேன். வறுமை அங்கு தாராளமாகத் தன் முத்திரையைப் பதித்திருந்தது.

படகு புறப்படலாயிற்று. "சீதா! ஜாக்கிரதை" என்றார் என் கணவர்.

"ஐய! பத்து நிமிஷத்தில் போய்விடும். அதற்குள் நீங்கள் மட்டும் ஆயிரம் ஜாக்கிரதை சொல்லிதீர்களே!" நான் பரிகாசம் பொங்கஎன்கணவரிடம் பேசியதை அவர் ரசித்தாரோ இல்லையோ, என் அருகிலிருந்தவர்கள் ரசிக்கவில்லை!

படகோட்டி துடுப்பைக் கையிலெடுத்தான். பால் நிலவு நீர்ப் பரப்பில் படர்ந்திருந்தது. எதிர்ச் சருகில் புர்கம்பாடு கரை இருளினால் எட்டாக் கையில் இருப்பது போல் தென்பட்டது. சரியான அகன் களிமண் கரையும், கரைமேல் குடிசைகளும், அடர்ந்த மரங்களும் தூரக் காட்சியா யிருந்தன. எங்கள் படகு சற்றுப் பெரியது. அத்துடன் வேறொரு படகும் இணைந்திருந்தது. ஜனக்கூட்டத்தைச் சீக்கிரம் கலைக்க, அதிகப்படியான பிரயாணிகளை ஏற்றவே இந்த ஏற்பாடு. படகுகள் புறப்பட்டன. கரையின்மீது நின்ற உருவங்கள் நிழல்களாகத் தென்படலாயின.

"அம்மா, தின்டி!" எதிரேயிருந்த குழந்தைதான் ராகம் இழுக்க ஆரம்பித்திருந்தது. தாய் அதை முடிந்தவரை சமாதானப் படுத்தினாள். குழந்தை அடங்கவில்லை. "சும்மா சும்மாத் தின்பண்டம் தர இங்கே கொட்டியா வைச்சிருக்கு. அதுக்கு நீ ஒரு சீமான் வயத்திலே பிறக்கல்லே, கண்ணு!" தாய் குழந்தையை மார்புடன் அணைத்துக் கொண்டாள்.

குழந்தை அடங்கவில்லை; துள்ளியது. 'நல்ல தலைவேதனை' என்று எண்ணினேன் நான். படகின் கோடியில் வேறு ஏதோ சத்தம்: யாரோ ஒருவர் குழந்தைக்கு டிக்கட் வாங்க மறுக்கிறார் போலும்! வார்த்தை தடித்தது. ஒரே சலசலப்பு; ஜனங்கள் இங்கும் அங்கும் கத்தியபடி ஓடினர்.

இந்தக் கூச்சலில் குழந்தை இன்னும்வீறிட்டது. 'சத்தம் போட்டே தண்ணியிலே தூக்கிப் போட்டு விடுவேன்' — தாய் கோபத்தில் கத்தியபடி குழந்தையைக் கையில் எடுத்தாள்.

படகின் மறு கோடியில் "தண்ணீர் உள்ளே வருகிறது!" என்று





வேகமான கோடக் மழை காலத்தில் எடுப்பது எளிது!

மேகமூட்ட நாள்களில் வீட்டினுள்ளோ அல்லது வெளியிலோ அழகிய படங்கள் எடுக்க அதிவேகமான கோடக் 'டிரை-X' பிலிம் உபயோகியுங்கள். செயற்கை வெளிச்சம் தேவையில்லை. ஒரு சாதாரண பாக்ஸ் காமிராவானாலும்கூடப் போதும்!


அதிவேகமான கோடக் 'டிரை-X' பிலிம் உபயோகித்தால், பிளாஷ் இல்லாமல்கூட வீட்டினுள் மிகக் கவர்ச்சிகரமான படங்கள் எடுக்கலாம்! பகலில் வீட்டினுள் படங்கள் எடுக்க நீங்கள் எடுக்கப்போகும் ஆளை, அறையில் கதவு அல்லது ஜன்னலுக்கு எதிராக நேரடியாக வெளிச்சம் விழும் இடத்தில் இருக்கச் செய்யுங்கள். பிறகு காமிராவில் குறிபார்த்து படம் எடுங்கள்.

நல்ல படங்கள் எடுக்கப் போதாத மங்கலான வெளிச்சத்திலுங்கூட கோடக் 'டிரை-X' பிலிம் கொண்டு அற்புதமான படங்கள் எடுக்கலாம்! இன்றே கோடக் 'டிரை-X' பிலிம் வாங்குங்கள்!



புதிய கோடக் 'வெரிக்ரோம்' பான் பிலிம் எந்த காட்சியையும், எத்தகைய வெளிச்சத்திலும் தத்ரூபமாக பதிய வைக்கிறது! பைன் கிரெயின். அதிக வேகம் (வெஸ்டன் 80) உள்ளது. தரம்வாய்ந்த பான்க்ரோமாடிக் பிலிம் சுருளை இன்றே வாங்குங்கள்!

அதிவேகமான கோடக் 'டிரை-X' பிலிம் மங்கலான வெளிச்சத்திலுங்கூட படங்கள் எடுப்பதற்கேற்ற வேக முள்ளது (200 வெஸ்டன், 160 டங்ஸ்டன்). கிரெயின் சாதாரணமானது. ஒரே வர்ணத்தின் இரு சாயை பேதங்களைக்கூட அற்புதமாகக் காட்டும்; மற்றும் படம் தெளிவாக விழும்



K. 4476

கோடக் லிமிடெட்

நம்பகமான 'கோடக்' காமிரா மூலம் நீங்கள் எப்

'டிரை-X' பிலிம் கொண்டு

படங்கள்



அதிவேகமான கோடக் 'டிரை-X' பிலிம் கொண்டு, இருண்ட மேகமூட்டமான தினங்கூட மழை காலத்தில் இதுபோன்ற அற்புதமான படங்கள் எடுக்கலாம்.

(இங்கிலாந்தில் இணைக்கப்பெற்றது. கம்பெனி அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)
பம்பாய்–கல்கத்தா–டில்லி–மதராஸ்

பொழுதும் நேர்த்தியான படங்களை எடுக்கமுடியும்

★★★★★★★★★★:★★★★★★★★★

அருள் வாக்கு

தாயார் மருந்து சாப்பிட்டால் குழந்தைக்குத் தேக பரிசுத்தம் ஏற்படுகிறது. அதைப் போலவே தாயார் தகப்பனாருடைய சித்த விருத்தி எப்படி இருக்கிறதோ, அப்படியே உள்ளே இருக்கும் ஜீவனுக்கும் சாத்விக சுபாவமோ பாப அபிவிருத்தியோ உண்டாகும். மனம் சாந்தமாக இருந்து ஒரு சமாசாரம் எழுதி அதைப் படித்தால் நன்றாயிருக்கும். கோபமாக இருக்கும்பொழுது எழுதிப் படித்தால் அது நன்றாக இருப்பதில்லை. மனோபாவனையை அனுசரித்துக் குணங்கள் ஏற்படுகின்றன.

— ஸ்ரீ சங்கராச்சாரியார், காமகோடிபீடம்

★★★★★★★★★★:★★★★★★★★★

ஒரே கூக்குரல்; அதை யடுத்து என்ன நடந்தது என்று அறியும் முன் பலர் 'திபுதிபு' வென்று இந்தப் படகிலிருந்து அந்தப் படகுக்குத் தாவினர். ஒரு கணம் இரு படகுகளுமே அந்தரத்தில் ஆடின. மறு கணம் 'ஹோ'வென்ற அலறல்.

'படீ'ரென்று ஒரு சத்தம். அவ்வளவுதான்; என் தலை சுழன்றது. பேயறைவதுபோல் நீர் முகத்தில் வாரி அடித்தது. கரையிலிருந்து "ஐயோ, படகு கவிழ்ந்து விட்டதே!" என்ற கூக்குரல் தூரத்தொலியாகக் கேட்டது.

தண்ணீருக்குள் மேன் மேல் விழுந்த மனித பாரத்தால் அமுக்கப்பட்ட நான் பட்ட பாடு! என் கணவர் முகம் மனக்கண் முன் தோன்றி 'ஜாக்கிரதை' என்றது. ராமச்சந்திரமூர்த்தி சிரித்தார். என்ன கோரம்! 'தன்னைக் காண வந்த பக்தர்களையெல்லாம் இப்படித் தண்டிப்பதா தெய்வம்! சாகவா இவ்வாறு போட்டியிட்டுக் கொண்டுவந்தனர் இந்தப் பெண்கள்! ஐயோ! அத்தனைபேரும் பெண்கள்; அதிலும் என்னைப் போன்ற வெற்று மரங்கள் அல்ல, தாய்மார்கள்!'

திருச்சி ஜில்லாவில் ஓடும் நதியில் நீந்துவதும் தண்ணீருக்குள்ளேயே 'தம்' பிடித்துச் சற்றுத்தூரம் செல்வதுமாகப் பழகிவிட்ட எனக்குத் திடீரென உடலில் ஒரு பலம் தோன்றியது. ஒருகால் என் ஏனம் தாங்காது ஸ்ரீ ராமபிரான் எனக்குத் தந்த சக்தியோ?...

தண்ணீர்மட்டத்தில் வந்துதலையைத் தூக்கினேன். அப்பப்பா, என்ன காட்சி. உயிருக்கு மன்றாடும் நிலையில் சாகாமல் சாகும் உயிர்களின் துடிப்பு! ஓடும் வெள்ளத்தைத் தாக்குப் பிடிக்க ஒரு துரும்பு அகப்படாதா என்று தவிக்கும் ஆத்மாக்கள்!

கரை எந்தப்புறம் என்றே முதலில் புரியாது நான் திகைத்தேன். தூரத்தே ஒரு குரல் "சீதா!...சீதா!" என்று மிதந்து வந்தது. என்னை வேறொரு கவலை பிடித்தது. நீந்தத் தெரிந்த நான் தப்பிவிடலாம். ஆனால் என்னைத் தேடி ஆத்திரத்தில் நதியில் குதித்துவிட்டு, நீச்சலறியாத என் கணவர் மூழ்கிவிடக் கூடாதே. வட நாட்டில் குழாயடியிலேயே பழகி விட்டவர் வெள்ளத்தில் காலிட்டு விடக் கூடாதே என்று கலங்கியது என் மனம்.

திடீரென்று காலடியில் ஏதோ ஒரு உடல் தட்ட ஒரு சுழல் சுழன்று திரும்பினேன் நான். ஆ! அதோ தூரத்தே மங்கிய ஒளியில் கைகளில் விளக்குகளுடன் பலர் நடமாடும் துறை தான் பத்ராஜலம் என்று புரிந்து கொண்டு நீரை அடித்துக்கொண்டு முன்னேறலானேன்.

ஒரு நிமிஷம்தான்! திடீரென்று வெகு அருகில் ஒரு குரல்: "அம்மா.. அம்மா..."

தூரத்திலிருந்து இந்தக் குரலுக்குப் பதிலொன்றும் வந்தது. "நீ எங்கே இருக்கிறாய், கண்ணே!"

எனக்குப் புரிந்து விட்டது. பயமுறுத்துவதற்காகக் குழந்தையை நீரில் விடுவதாகத் தாய் தலைக்கு மீது தூக்கிய கணத்தில் படகு கவிழவே இருவருமே விழுந்தனர். ஆனால், நீரோட்டம் அவர்களைப் பிரித்து விட்டது.

கைகளை எட்டி வீசினேன். மறு நிமிஷம் குழந்தையின் சட்டை என் கைப்பிடியில் சிக்கியது. அருகில் பற்றி இழுத்தேன். குழந்தைபாய்ந்து என்னைக்கட்டிக்கொண்டது.

என் உடலில் ஒரு உஷ்ணம் பரவியது. ராமா! இதுவும் உன்விளையாட்டா? பெரியவர்களெல்லாம் கை ஓயக் காலைக் காலை உதறிக் கொண்டு தவிக்கும் வெள்ளத்தில் குழந்தை மட்டும் ஆலிலைக் கண்ணன் போல் மிதந்து வந்து என் கையில் வலியச் சிக்குவானேன்?

குழந்தை என்னைப் பற்றிக் கொண்டது.

தாயின் குரல் வந்த திசையில் முன்னேறலானேன். இல்லை; அவள் கரையை நோக்கி நான் செல்லும் வழியில் வாழ்வுக்கும் சாவுக்கும் இடையே மன்றாடிக் கொண்டிருந்தாள். அவள் அருகே சென்ற நான் தயங்கிய நேரத்தில் அவள் மலங்க விழித்தாள். அவள் வெள்ளத்தில் தவிக்க, நீந்தத் தெரிந்த நான் அருகில் இருக்க, என் கையில் அவள் தன் குழந்தையைக் கண்டாள்! அவள் என் உதவியினால் பிழைக்க விரும்பியிருக்கலாம். ஆனால் அவளது தாய் மனம் அதற்கு இசையவில்லை.

"மகராசி, நான் ஆயுசிருந்தா பிழைப்பேன். ஆனால் என் குழந்தையைக் காப்பாத்திடு.. அதற்கு அப்பனில்லே! (இதற்குள் ஒரு வாய் தண்ணீர்)...நீ பெத்ததுன்னு நினைச்சு அதைக் காப்பாத்து அம்மா.." மேலே என்ன சொல்ல நினைத்தாளோ மிதந்து வந்த பிணம் ஒன்று அவளைத் தண்ணீரில் குப்புறத் தள்ளியது. 'சடக்'கென்று அவளது கூப்பிய கரங்கள் நீருக்குமேல் தெரிந்தது. அந்த அன்னையின் திசையில் மானசீகமாக வணங்கிவிட்டுக் குழந்தையுடன் முன்னேறினேன்நான்.

என் மனத்தில் வைராக்கியம். ஒரு அன்னையின் ஆணையைக் காப்பாற்ற வேண்டும். அது மட்டுமா, ராமர் கைமேல் பலனாகத் தங்க விக்கிரகம்போன்ற (அனாதைக்) குழந்தையைத் தந்து விட்டார் என் செல்வமாக.

இதுவரை நான் சுலபமாகக் குழந்தையைச் சுவீகரித்து வளர்த்தேன். ஆனால் அது ஒட்டவில்லை. இப்போது இக்குழந்தையை ஓடும் வெள்ளத்திலிருந்து மீட்டு, சிரமப்பட்டு உயிரளித்து வளர்க்கப் போகிறேன். அதாவது நான் என் உயிரைப் பணயம் வைத்து இந்தப் பாரத்தைச் சுமந்து ஒரு கையால் நீந்திக் கரை சேர்ந்தால், ஒரு பெண் தன்னுயிரைப் பணயம் வைத்துவாதனை பலப்பட்டு ஒருகுழந்தையைப் பெறும் சிரமத்துக்கு ஈடாகும்.

தெரியுமா உங்களுக்கு?

மந்திரவாதி மாங்கொட்டை ஒன்றை மண்ணில் புதைத்துக் கூடையால் மூடி விடுகிறான். சிறிது நேரத்தில் அது முளை விட்டுச் செடியாகி வளர்ந்து காய்த்தும் விடுகிறது. அதைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு அற்புதமான காரியங்களை விஞ்ஞானிகள் செய்கிறார்கள். பூமியிலிருந்துகிடைக்கும் உலோகங்களைக் கொண்டு அவர்கள் செய்யும் மாயாஜால வேலைகளை வர்ணிக்கஇயலாது. உலோகங்களில் எத்தனை எத்தனை வகைகள் இருக்கின்றன! உள்ளங்கையில் வைத்துக் கொண்டால் உருகிவிடும் உலோகம் இருக்கிறது. ஆயிரக்கணக்கான டிகிரி உஷ்ணம் கொடுத்து உருக வைக்க வேண்டிய உலோகங்களும் இருக்கின்றன. சில உலோகங்கள் உருகும் போது பார்த்தால் ஐந்தே நிமிஷத்தில் கண் பார்வையை இழந்துவிட நேரும். எனவே, அதில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் தடித்த நீலக் கண்ணாடி அணியாமல் எதுவும் செய்ய முடியாது. க்ரோமியம், வைரம் போன்ற மிகக் கடினமான உலோகங்கள் இருக்கின்றன. தண்ணீரில் மிதக்கும் மிக இலேசான உலோகங்களும் இருக்கின்றன. உதாரணமாக சோடியம், பொடாஷியம் முதலியன மிக இலேசானவை. ஆனால் தங்கம், யுரேனியம் முதலியவை தண்ணீரைப் போல் இருபது மடங்கு கனமானவை. பார்வைக்கு இரும்பைப் போல் தோன்றும் ஸெரியம் என்ற உலோகம் நகத்தால் கீறினால் குபீரென்று பற்றிக் கொள்ளும் தன்மை வாய்ந்ததாக இருக்கிறது. அந்த உலோகத்துடன் சிறிதளவு இரும்பைக் கலந்து தான் சிகரெட் பற்றவைக்கும் கருவிகளும், விளையாட்டுப் பீரங்கிகளும் செய்கிறார்கள்.



இஷ்டப்படி இளகிக் கொடுக்கும் தன்மையில் தங்கத்துக்கு இணையான உலோகம் வேறு எதுவுமே இல்லை. ஒரு நெல் அளவு உள்ள தங்கத்தைக் கொண்டு எட்டு சதுர அங்குலத் தகடு செய்வதில் வெற்றி பெற்றிருக்கிறார்கள்! மின்சாரக் கம்பிகளுக்குத் தாமிரத்தைக் காட்டிலும் வெள்ளியே மிகவும் ஏற்றது. இருந்தாலும் சிக்கனத்துக்காகத் தாமிரத்தையே உபயோகிக்க வேண்டியிருக்கிறது. மின்சார பல்புக்குள் எரிகிறது அல்லவா? அதுதான் டங்ஸ்டன் என்ற அபூர்வ உலோகம். இதை உருக வைப்பது மிகவும் கஷ்டமான காரியம். ஈயத்தைப் போல் விஷத்தன்மை பொருந்திய உலோகங்களும் இருக்கின்றன. அதனுடன் ஒருவகை பாஷாணப் பொருளைச் சேர்த்தால் இளகும் தன்மை வாய்ந்த ஈயம் மிகவும் கெட்டியாகி விடுகிறது. டிடேனியம் உலோகச்சேர்க்கை விமானங்களின் எடையைக் குறைக்க உதவியாக இருக்கிறது. அந்த உலோகத்தினால் நிரந்தரமாக உபயோகப்படக்கூடிய க்ஷவர பிளேடுகளை உற்பத்தி செய்யலாம்.

ஒரு வழியாகக் கரை சேரும்போது நான் சோர்ந்தே போய் விட்டேன். அந்த இருளிலும் நான் குழந்தையுடன் தவித்துக்கொண்டு வருவதைக் கண்ட கான்ஸ்டேபிள் ஒருவன் ஓடி வந்து என் கையைப் பற்றி மேலே இழுத்துப் போட்டுக் குழந்தையையும் வாங்கிக் கொண்டான். அவ்வளவுதான்; என் கண்கள் இருண்டு விட்டன.

நான் விழித்தபோது, சூர்யோதயமாகி விட்டது. அருகே பார்த்தேன். குழந்தை ஞானம்மா அமைதியான நித்திரையில் இருந்ததைக் கண்டு என் மனத்தில் பெருமிதம் பொங்கியது. 'சீதா! நல்லபடி பிழைத்தாயே, அம்மா!' என்று என் கணவர் கூறியபோது ஏனோ நாணம் என்னைக் கப்பிக் கொண்டது. மறுநாள் பத்திரிகையில் "நீந்தத் தெரிந்த தாய் ஒருவர் மிகுந்த சிரமத்துடன் தன் குழந்தையையும் கடைசிவரையில் விடாது அணைத்து நீந்தி வந்தது தாய்ப்பாசத்தின் பெருமையைக்குறிக்கிறது" என்றுவெளியான செய்திக்கு மாற்று கூறாமல் ஊறிய என் மகளாகி விட்ட குழந்தையை இறுக அணைத்துக் கொண்டேன்.

"சீதா! இதுதான் உண்மையில் உன் குழந்தை. நீ கஷ்டப்பட்டுப் பெற்றது" என்றார் என் கணவர்.

தனி மரமாகத் தெய்வ தரிசனத்துக்குச் சென்ற என் நெஞ்சில் பசுமை துளிர்த்து மடி நிறைந்திருந்தது.



சொல்லேர் உழவர்கள்



சென்ற ஜூன் மாதம் முப்பதாம் தேதி திருச்சிராப்பள்ளிக்குப் போயிருந்தேன். அங்கே ஒரு அபூர்வமான விழாக் காட்சியைக் கண்டேன்.

தமிழகத்தின் சொல்லேர் உழவர்கள் திருச்சி தேவர் மன்றத்தில் கூடி யிருந்தார்கள். எதற்காக? தங்கள் சங்கத்துக்கு விழா நடத்துவதற்காகத்தான்.

''சொல்லேர் உழவர்களா? அப்படி ஒரு உழவர் இனம் தமிழகத்தில் இருக்கிறதா?''

''ஆமாம், இருக்கிறது. சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற எழுத்தாளர் மாநாட்டில் திரு. மா. பொ. சி. அவர்கள் எழுத்தாளர்களை இந்தக் கால முறைப்படி தொழிலாளர்கள் என்றார். ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே வள்ளுவரும் எழுத்தாளர்களைத் தொழிலாளர்கள் என்றே கூறியிருக்கிறார். அந்தக்கால முறைப்படி 'உழவர்' என்று சொல்லியிருக்கிறார். எப்படிப்பட்ட உழவர்கள்? 'சொல்லேர் உழவர்கள்:' இந்த அழகான சொற்றொடரை உபயோகப்படுத்தியிருக்கிறார் திருவள்ளுவர். அரசாங்கத்தின் தலைவரான மன்னரைப் பார்த்து 'நீ பலம் பொருந்திய வில்லாளர்களின் பகையைக் கொண்டாலும் பாதகமில்லை. ஆனால் சொல்லேர் உழவர்களை மட்டும் பகைத்துக் கொள்ளாதே!' என்று சொல்லி யிருக்கிறார்.

வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை.

அதாவது எழுத்தாளர்களின் பகையை எந்தச் சமயத்திலும் தேடிக் கொள்ளாதே என்று அழுத்தம் திருத்தமாகத் திருவள்ளுவர் அறிவுறுத்தி யிருக்கிறார்.''

''சொல்லேர் உழவர்கள் என்ன அவ்வளவு சக்தி படைத்தவர்களா?''

''அவர்களுக்கு இருக்கும் சக்தியை வேறு எந்தச் சக்தியுடனும் ஒப்பிட்டுக் கூறிவிட முடியாது. அவர்கள் மெல்லிய இசைகளை எழுப்பிக் கவிகளைப் பாடுவார்கள். நுணுக்கமான கனவுகளை எழுத்திலே வடிப்பார்கள். அதனால் ஏற்படும் பலன் என்ன தெரியுமா? இந்த உலகத்தின் அடித்தளத்தையே அசைத்து, சமுதாயத்தின் உருவத்தையே புது முறையில் மாற்றி அமைத்து விடுவர்.''

''ஆ! அப்படியா?''

''ஆமாம். எழுத்தாளர்கள் மட்டும் ஒற்றுமையுடன் ஒன்று திரண்டு விட்டார்களானால், தங்களுடைய எழுத்தின் சக்தி எத்தகையது என்பதை மட்டும் உணர்ந்து விட்டார்களானால், உணர்ந்து அதைக் காரியத்திலும் சிறந்த முறையில் உபயோகப்படுத்துவதற்கு ஆரம்பித்து விட்டார்களானால், அப்புறம் அவர்களால் சாதிக்க முடியாத காரியம் இந்த உலகத்தில் ஒன்றுமே இல்லை.''

சமூகத் துறையில், அரசியல் துறையில் பொருளாதாரத் துறையில் இப்படிப் பல துறைகளிலும் அதள பாதாளத்தில் வீழ்ந்து கிடக்கும் நம்முடைய தேசத்தை எழுத்தாளர்கள் தங்கள் எழுத்தின் சக்தியால் மகோன்னத நிலைக்குக் கொண்டு வர முடியும். இது ஒன்றும் கற்பனையல்ல. எழுத்தின் சக்தி செய்யும் இந்த மகத்தான அற்புதங்கள் அடிக்கடி நிகழ்ந்து வருபவைதான். உலக சரித்திர வரலாற்றைப் பார்த்தால் இந்த உண்மை நன்கு விளங்கும். எழுத்தாளர்களின் எழுத்

விழாத் தலைவர் பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை தலைமை உரை நிகழ்த்துகிறார். அவருக்குப் பின்னால் உட்கார்ந்திருப்பவர் விழாத் திறப்பாளர் திரு எ. ஜி. வெங்கடாச்சாரியார். கையில் பேனாவுடன் நிற்பவர் சங்கச் செயலாளர் திரு அகிலன். திரு பி. ரா. நாராயணசாமி ஐயர் வரவேற்புரை நிகழ்த்துகிறார். சபையில் கூடியிருந்த கூட்டத்தில் ஒரு பகுதி.

துக்கள் செய்து வரும் அபூர்வ சாதனைகளை நம் நாளிலேயே பார்த்தும் வருகிறோம்.

அடிமைப்பட்டுக் கிடந்த இந்த நாட்டுக்குச் சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்ததே காந்தி மகானுடைய எழுத்தின் சக்திதான். எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளாக இருந்த தீண்டாமைப் பேய், மதுவரக்கன் முதலிய கொடிய பைசாசங்களை ஒழித்துக் கட்டியதும் காந்தி மகானின் எழுத்துக்கள்தான்.

இதேபோல இன்றையத் தமிழ் எழுத்தாளர்களுடைய எழுத்தின் சக்தி நம்முடைய நீந் தமிழ் நாட்டில் ஓங்கி வளர்ந்து ஒரு புது மலர்ச்சியை உண்டாக்கி, பொன் யுகத்தை ஆரம்பித்து நிறுவ முடியும் என்பதில் நமக்குப் பரிபூரண நம்பிக்கை ஏற்படுகிறது.

"எழுத்தாளர்களின் சக்தி இருக்கட்டும், திருச்சியில் ஏதோ அபூர்வமான காட்சியைக் கண்டதாகக் கூறினீர்களே! அது என்ன?"

"தயவு செய்து மன்னிக்க வேண்டும். இதோ சொல்லி விடுகிறேன்."

*** *** ***


நமது தமிழ்நாட்டில் மிகச் சிறந்த முறையில் அமைக்கப்பட்டு நடைபெற்று வரும் எழுத்தாளர் சங்கங்களில் திருச்சி தமிழ் எழுத்தாளர் சங்கம் முதன்மையானது என்பது நேயர்களுக்குத் தெரிந்திருக்கலாம். மலைக்கோட்டையை உடைய அழகிய நகரம் திருச்சி என்பதும் சரித்திரத்தில் சுவையுள்ளவர்கள் அறிந்திருக்கலாம் இதுமட்டுமா? மகா வித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களை ஈன்றெடுத்ததன் மூலம் இலக்கிய உலகில் திருச்சிக்கு ஒரு தனி இடம் உண்டு. அதைப்போலவே மலைக்கோட்டை கோவிந்தசாமிப் பிள்ளையின் இசை ஞானம் சங்கீத உலகில் மிகப் பிரசித்தம். அப்பேர்ப்பட்ட திருச்சி நகரத்தில் நடைபெற்ற திருச்சி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் இரண்டாவது ஆண்டு விழாவுக்குத்தான் சென்ற ஜூன் மாதம் முப்பதாம் தேதி சென்றிருந்தேன்.

திருச்சி நகரில் உள்ள மிகச் சிறந்த எழுத்தாளர்கள் எல்லாம் இந்தச் சங்கத்தில் சேர்ந்திருக்கிறார்கள். அப்படிச் சேர்ந்திருப்பவர்களில் பலர் பல்வேறு துறைகளில் பிரபலமானவர்கள். மிகப் பெரிய தொழில் அதிபர்கள், பத்திராதிபர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள், மிராசுதார்கள் இன்னும் பல தொழில் துறைகளில் ஈடுபட்டிருப்பவர்கள் சங்கத்தின் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். ஆனாலும் இவர்கள் எல்லாரும் தமிழ்த்தாயின் மீது பக்தி கொண்டவர்கள். சொல்லேர் உழவர்கள். சொல்லேர் உழவர்களுக்குள் வித்தியாசம் ஏது? ஆகவே ஆண்டு விழாவின் சிறப்புக்கு எல்லா எழுத்தாளர்களும் எல்லா வேலைகளையும் உற்சாகமாகச் செய்தார்கள்.

மேற்படி ஆண்டு விழாவுக்குப் பூர்வாங்கமாக எழுத்தாளர்கள் பல குழுவினராகப் பிரிந்து கொண்டார்கள். சென்னையிலிருந்து திருக்குற்றாலம் வரை சென்றார்கள். அவர்கள் சென்ற விடமெல்லாம் "தமிழ்வாழ்க!"



பகீரதன்



'இன்றையத் தமிழ்' என்பதைப் பற்றித் திரு அழ. வள்ளியப்பா சொற் பொழிவாற்றுகிறார். எழுத்தாளர்களை அறிமுகம் செய்து வைக்கிறார் திரு கி. கோடியில் நிற்பவர்தான் திரு அ. வெ. ர. கிருஷ்ணசாமி செட்டியார். 'எழுத்தாளர்களுக்கு' என்ற தலைப்பில் அறிவுரை நிகழ்த்துகிறார் திருவாளர் கி. ஆ. பெ. விசுவநாதம்.

திருச்சிராப்பள்ளி தமிழ் வளர்த்த பழம் பெரும் நகரங்களில் பெயர் போனது. செந்தமிழ்நாட்டின் மிகச் சிறந்த இசைப் புலவர்கள், இலக்கியப் புலவர்கள் பலர் தோன்றிய நகரம் என்பதினாலும் திருச்சி பிரசித்தி அடைந்திருக்கிறது. "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றும் அறியேன்...." என்று கூறிய தாயுமான சுவாமிகளின் ஜன்ம ஸ்தலம் திருச்சி என்பதும், பிரசித்தி பெற்ற

'' தமிழ் வாழ்க !'' என்ற மந்திர கோஷத்தை எழுப்பினார்கள். திருக்குற்றாலத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் பேராசிரியர் திரு ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களைத் தேடிப் பிடித்தார்கள். ஆண்டு விழாவுக்குத் தலைமை தாங்க ஏற்பாடு செய்தார்கள். சென்னை நகரில் இருந்த தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு ஏ. ஜி. வெங்கடாச்சாரியாரை ஆண்டு விழாவைத் துவக்கி வைக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். ஆண்டு விழாவை மிகச் சிறப்பாக நடத்தினார்கள்.

திருச்சி தேவர் மன்றம் நிறைந்து வழியும்படி மக்கள் கூடியிருந்து நடைபெற்ற ஆண்டு விழாவையும், விழாவுக்கு வந்திருந்தவர்களுக்கு அளித்த விருந்தையும், அந்த விருந்தில் வைத்திருந்த உணவுப் பட்டியலையும் பார்த்த போது ஒரே பிரமிப்பாக இருந்தது. எழுத்தாளர்களா இப்படி ஒரு விழா நடத்தினார்கள் என்று வியக்கவேண்டியிருந்தது.

ஆனால் எழுத்தாளர்கள் இல்லாமல் வேறு யாராவது இம்மாதிரி விழா நடத்தியிருக்க முடியுமா ? ஒருகாலும் முடியாது. அப்படி நடத்தியிருந்தாலும் பல ஆயிரம் ரூபாய்கள் செலவழித்திருக்க வேண்டும். அப்படிச் செலவழித்தாலும் இவ்வளவு தூரம் சிறந்திருக்காது. ஆனால் சில நூறு ரூபாயில் எண்ணற்ற எழுத்தாளர்களின் இதயம் கலந்த உணர்ச்சியுடனும், அவர்களின் உற்சாகமான உழைப்புடனும் ஆண்டுவிழாவைக் கோலாகலமாக நடத்தி விட்டார்கள்.

ஆண்டு விழா நடைபெற்ற சிறப்பு இருக்கட்டும். ஆண்டு விழாவில் நிகழ்ந்த முக்கியமான காரியங்களைக் கவனிக்கலாம். நான் கவனித்த வரையில் மூன்று வகைப்பட்ட காரியங்களைப் பற்றி மிகச் சிறந்த முறையில் விவாதங்கள் நடைபெற்றன.

1. தமிழ் தழைப்பதற்கு உரிய முயற்சிகளோடு தமிழைத் தரம் குறையாமல் உயர்த்துவதற்குரிய முறைகளையும் தமிழ் எழுத்தாளர்கள் கடைப்பிடிக்க வேண்டும்.

2. எழுத்தாளர்களின் சொந்த நலனைப் பற்றிய விஷயங்கள், சன்மான உயர்வு, எழுத்துரிமை முதலியவைகள்.

3. சமுதாய முன்னேற்றத்துக்கு எழுத்தாளர்கள் ஆற்ற வேண்டிய தொண்டு.

*** *** ***

இந்த நாளில் ஒவ்வொரு மொழி எழுத்தாளர்களும் அவரவர்கள் மொழியின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டுவருகிறார்கள். தங்கள் மொழியில் இல்லாத உயர்ந்த இலக்கியங்கள் வேறு மொழியில் இருந்தால் அதைத் தங்கள் மொழியில் இயற்றுவதற்கு முயன்று அதில் வெற்றியும் பெற்று வருகிறார்கள்.

எனவே, தமிழ் எழுத்தாளர் சங்க விழாவில் தமிழ் தழைத்து உயர்வதற்குரிய ஆக்கவேலைகளைப் பற்றி முதன்மையாகக் கவனிக்கப்படுவதில் சிறிதும் வியப்புக்கு இடமில்லை.

'' தமிழ் உயர்ந்திராமல் இப்போது என்ன தாழ்ந்தா விட்டது ? தமிழ் உயர் தனிச் செம்மொழி யல்லவா ? கைலையங்கிரியில் வீற்றிருக்கும் எம்மான் அருளிய மொழி யல்லவா? குன்றம் கொண்ட முருகனுக்கு உகந்த மொழியல்லவா ? குறு முனிவர் வளர்த்த மொழியல்லவா? இவ்வாறு உயர்ந்த தமிழை மேலும் எப்படி உயர்த்துவது ? தமிழ் தாழ்ந்திருக்கிறது என்று எப்படிச் சொல்லலாம்?'' என்று தமிழ் அன்பர்கள் சண்டைக்கு வந்துவிட வேண்டாம்.

தமிழ் மொழிக்குப் பழைய பெருமை எவ்வளவோ இருக்கிறது. மற்ற எந்தப் புராதன மொழிக்கும் எள்ளளவும் குறையாத சிறப்பு தமிழ் மொழிக்கு உண்டு. ஆனாலும் அந்தப் பழம் பெருமை மட்டும் தமிழுக்குப் போதாது. தற்காலத்தில் உலகில் சிறந்து விளங்கும் ஆங்கிலம் முதலிய புது மொழிகளுக்குச் சமமான சிறப்பைத் தமிழ் மொழி அடைய வேண்டும். அடைந்தே தீர வேண்டும். இத்தகைய சிறப்பைத் தமிழ் மொழிக்கு அளிப்பதற்காகத்தான் தற்காலத் தமிழ்எழுத்தாளர்கள் பிரயத்தனம் செய்துவருகிறார்கள்.

தமிழ் நாட்டில் தமிழ்தான் ஆட்சி மொழி என்று ஆகிவிட்டது. இது வரை ஆங்கிலம் ஆக்கிரமித்திருந்த இடத்தில் தமிழை ஏற்றி வைத்து விட்டோம். தமிழ்த் தாயைத் தங்கச் சிம்மாசனத்தில் அமர்த்தியிருக்கிறோம். இது வரையில் மகிழ்ச்சியடைய வேண்டியதுதான். ஆனால் நடைமுறையில் எப்படி இருக்கிறது ? தமிழ் மொழி அரசாங்கப் பத்திரங்களில் இன்னும் ஏறவில்லை. சர்க்கார் காரியங்களுக்குள் இன்னும் புகுந்து வரவில்லை. தமிழ் மக்களுக்கான சர்க்கார் அறிக்கைகள் எல்லாம் நல்ல தமிழில் வெளியாகவில்லை.

திருச்சியில் வானொலி நிலையம் இருக்கிறது. ஆனால் இதற்குள் தமிழுக்கு உரிய இடம் கிடையாது. சென்னையில் வானொலி நிலையம் இருக்கிறது. இங்கும் அப்படித்தான். தமிழைத் தவிர மற்ற மொழிகளை எல்லாம் இந்த இரண்டு வானொலி நிலையங்களும் சிறப்பிக்கின்றன. தமிழுக்கு உரிய இடத்தைக் கொடுக்க மறுக்கின்றன. சென்னை வானொலி நிலையத்தில் மலையாள நிகழ்ச்சியோ, தெலுங்கு நிகழ்ச்சியோ நடைபெற்றால் அதைப் பற்றிய நிகழ்ச்சி முன்குறிப்பை, அந்தந்த மொழியில் தான் கூறுகிறார்கள். ஆனால் தமிழ் நிகழ்ச்சியில் மட்டும் பல சமயங்களில் தெலுங்கில் சொல்லுகிறார்கள். ஏன் தமிழ் தாழ்ந்த மொழியா ? அல்லது தமிழ் மக்கள் ஏமாந்த சோணகிரிகள் என்ற எண்ணமா ?

இதையெல்லாம் பற்றி நினைத்துப் பார்த்த போது திருச்சி எழுத்தாளர் சங்க ஆண்டு விழாத் தலைவர் திரு ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களுக்கு மனம் கொதித்தது ! அந்தக் கோபத்தில் அவர் இவ்வாறு நடக்கும் காரியங்களைப் பார்த்து ''இந்த மாதிரி நடக்கும் அநியாயக் காரியங்கள் வீழ்க !'' என்று கடுமையும் ஹாஸ்யமும் கலந்து கூறினார்.


மொழியின் அந்தஸ்து ஒருபுறமிருக்கட்டும். இப்பொழுது தமிழ் எழுத்தாளர்கள் சொந்த நலனை நினைத்துப் பார்க்கும் விஷயம் ஒன்றும் இருக்கிறது. அதாவது அவர்களுக்குக் கிடைக்கும் சன்மானத் தொகையைப் பற்றிய விஷயம்தான். வானொலி நிலையத்தார் பேச்சுக்களுக்கும், நாடகங்களுக்கும், சிறுகதைகளுக்கும் வழங்கும் சன்மானம் மிக

பூச்சிகள் உங்கள் வீட்டை

சூறையாட விடாதீர்கள்!



லின்டேன் கலந்த ப்ளிட் உபயோகித்து அவைகளின் படையெடுப்பை முறியடியுங்கள்!



பறப்பவையும், ஊர்ந்து செல்லுபவையுமாக, வியாதிகளைப் பரப்பும் பூச்சிகள் உங்கள் குடும்பத்தினரின் ஆரோக்கியத்தைக் குலைக்கின்றன. பூச்சிகளை அனைப்பொழுதும் நிச்சயமாகக் கொல்லும் சக்திவாய்ந்த லின்டேன் கலந்த ப்ளிட் உபயோகித்து அவைகளை ஒழியுங்கள்! முன்னைவிட தீவிர சக்திவாய்ந்த இந்த பூச்சி நாசினி அதிக துரிதமாக வேலை செய்கிறது. இதில் லின்டேனும் டி. டி. டி.யும் (D.D.T.) ஒருங்கே சேர்ந்துள்ளதால், இதன் பலன் அதிககாலம் நீடித்து நிற்கிறது. புகழ்பெற்ற சிவப்பு, வெள்ளை மற்றும் நீலநிறமுள்ள டின்னில் கிடைக்கும் லின்டேன் கலந்த ப்ளிட்டை வாங்குங்கள்.



ஸ்டாண்டர்ட்-வாக்குவம் ஆயில் கம்பெனி

(யு.எஸ்.ஏ.யில் இணைக்கப்பெற்றது: கம்பெனி அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)

V. 4509



திருமதி கமலம், திருமதி செல்லம் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடுகிறார்கள். 'தமிழ் வளரவில்லை' என்று வாதாடுகிறார் திரு திருலோகசீதாராம். துணைச் செயலாளர் திரு ஏ. என். ராகவன் விழாவுக்கு வந்திருந்த வாழ்த்துச் செய்திகளை வாசிக்கிறார்.

மிகக் குறைவு என்று சொல்லுவதைவிட எழுத்தாளர்களை அவமானப் படுத்துகிறார்கள் என்று தான் சொல்லவேண்டும். எழுத்தாளர்களுக்கு மத்திய சர்க்கார் ஆதிக்கத்தில் இருக்கும் வானொலி நிலையம் வழங்கும் சன்மானம் எழுத்தாளர்களுக்கு இழைத்து வரும் பெரிய அநீதியாகும் என்பதில் சந்தேகமில்லை. இந்த அநீதியை உடனே நீக்க வேண்டும்.

எழுத்தாளர்களுக்குப் பணம் வேண்டியதில்லை என்றுவது, பாரதியாரைப் போல் வறுமையில் ஆழ்ந்திருந்தால் தான் மேதை பிரகாசிக்கும் என்றுவது இந்த நாளில் யாரும் சொல்ல மாட்டார்கள். மேற்படி கொள்கை அபத்தமானது என்பதை இப்போது எல்லாரும் மனப்பூர்வமாக ஒத்துக் கொள்வார்கள். பாரதியாருக்கும் பணக் கஷ்டம் இல்லாமலிருந்திருந்தால் அவருடைய மேதை எவ்வளவோ பிரகாசித்திருக்கும்.

இந்தக் காலத்தில் ஒரு சில தமிழ் எழுத்தாளர்களின் வருவாய் உயர்ந்திருக்கிறது என்பது உண்மைதான். ஆனாலும் அது எல்லா எழுத்தாளர்களையும் திருப்தி செய்து விடுமா? எல்லா எழுத்தாளர்களின் வருவாயும் உயருவதற்கு வழி செய்ய வேண்டாமா? பாரதியார் காலத்துக்கும் இந்தக் காலத்துக்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. உண்மைதான். அப்பொழுது தமிழ்ப் புத்தகம் வாங்கிப் படிப்போர் அருமை. இப்பொழுது நல்ல விலைகொடுத்துப் பலர் தமிழ்ப் புத்தகம் வாங்கிப்படிக்கிறார்கள்.

மனிதர்களுக்குப் பணம் அவசியமானாலும் அவர்கள் பணத்தால் மட்டும் உயர்வதற் இல்லை. எழுத்தாளர்களும் கலைஞர்களும் பண வருவாயைக் கொண்டு மட்டும் திருப்தி யடையமாட்டார்கள். பணத்தைப்போலவே அறிஞர்கள், ரஸிகர்களுடைய பாராட்டுத லும் அவர்களுக்கு மிகவும் அவசியம்.

இந்த உயர்ந்த மனப்பான்மை தமிழ்மக்கள் மத்தியில் ஓங்கி வளர்வதற்கான நல்ல முயற்சிகளைச் செய்ய வேண்டும்.

எழுத்தாளர்களின் வருவாய் விஷயம் எப்படி இருந்தாலும் அவர்கள் காசுக்கு ஆசைப்பட்டுக் கண்டதை எழுதிச் சமூகத்தின் கட்டுக் கோப்பைக் குலைத்துவிடக் கூடாது.

எழுத்தாளர்களுக்கென்று ஒரு பண்பாடு உண்டு. அவர்கள் பரம்பரை மிக நீண்ட பரம்பரை. வள்ளுவனும், கம்பனும், இளங்கோவடிகளும், பாரதியும் வந்த பரம்பரையில் வந்தவர்கள். ஆகவே எழுத்தாளர்கள் தங்கள் பரம்பரையின் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டும். தமிழ் சமூகத்தின் உயர்வுக்காகவே தங்கள் எழுத்தின் சக்தியைப் பயன்படுத்துவது என்று உறுதி கொள்ள வேண்டும்.

அதற்காகச் சமூகத்தில் புரையோடிக் கிடக்கும் மூடப் பழக்க வழக்கங்களைத் தகர்க்காமல் இருந்து விடக் கூடாது. பழக்கம் காரணமாகப் படிந்து கிடக்கும் மௌடிகக் கொள்கைகளைத் தகர்த்தெறியத் தயங்கக் கூடாது. இவ்வாறு மௌடிகத்தைத் தொலைக்கும் போதுகூட நமது தமிழ்ப் பண்பை மறந்து விடாமல் இருக்க வேண்டும்.

தமிழ்ப் பண்பைக் குறித்து விழாத் தலைவர் பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டதைக் கேளுங்கள்: "எதைப் பற்றிச் சொன்னாலும் மரியாதை குறையக் கூடாது. 'ஒழி' என்று சொல்லக் கூடாது. 'ஒழிக' என்றுதான் கூற வேண்டும். ஒழிக என்றால் தயவுசெய்து ஒழிந்து போவீர்களாக என்று பொருள். இந்தப் பண்பை நமக்குக் கற்றுக் கொடுத்தவரும் திருவள்ளுவர்தான்." பேராசிரியர் சேதுப்பிள்ளை கூறியதை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வதில் தமிழ் நாட்டு எழுத்தாளர்களுக்குள் அபிப்பிராயபேதம் இருக்கக் காரணமில்லை.

மேலே கூறிய இந்த விஷயங்கள் எல்லாம் நான் சொல்லவில்லை. திருச்சி எழுத்தாளர் மகாநாட்டில் கலந்துகொண்ட பல எழுத்தாளர்கள் பல்வேறு கோணங்களில் சொன்னதைத்தான் இங்கு திருப்பிச் சொல்கிறேன்.

*** *** ***

திருச்சி எழுத்தாளர்கள் தங்கள் ஆண்டு விழாவைத் தமிழகத்தின் முக்கியமான திருவிழாவாகவே நடத்தினார்கள். மேடை அலங்காரம், வரவேற்புகள் எல்லாம் பிரமாதமாக இருந்தன. திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த எழுத்தாளர்கள் அனைவரும் வந்திருந்தார்கள். சென்னை பல்கலைக் கழகத் தலைவர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை தலைமை தாங்கிச் சிறப்பித்தார். சென்னை எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு ஏ. ஜி. வெங்கடாச்சாரியார் விழாவைத் துவக்கி வைத்தார். இன்றையத் தமிழைப்பற்றிச் சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கக் காரியதரிசி திரு

அழ. வள்ளியப்பா ஒரு அருமையான சொற்பொழிவாற்றினார். திரு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் ''எழுத்தாளர்களுக்கு'' ஒரு வேண்டுகோள் விட்டார்.

''தமிழ் எழுத்தாளர்கள் எல்லாரும் தமிழ் இலக்கியங்களைப் படிக்க வேண்டும். கூடவே இந்தியையும் பயில வேண்டும். ஆனால் இந்தி மொழிக்கு அடிமையாகி விடக் கூடாது. தம்முடைய தமிழ் இலக்கியச் சிறப்பை வட நாட்டில் உள்ள மக்களுக்கு மத்தியில் எடுத்துக் கூறுவதற்கு இந்தியைப் பயன்படுத்த வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார். திரு கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களின் வேண்டுகோளை எழுத்தாளர்கள் ஏற்றுக் கொண்டு வரவேற்றார்கள் என்பதை அப்பொழுது மன்றத்தில் எழுந்த கரகோஷமே சாட்சி கூறியது. ஆனாலும் இதைக் காரியத்தில் கடைப்பிடிப்பதற்கும் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் போன்றவர்கள் முன்வர வேண்டும்.

''தமிழ் வளர்ந்திருக்கிறதா?'' என்ற கேள்வியை வைத்து நடைபெற்ற பட்டிமன்றம் விழாவுக்கு விறுவிறுப்பை அளித்தது.

'தமிழ் வளரவில்லை' என்று திரு திருலோக சீதாராம் முதலிய ஐந்து எழுத்தாளர்கள் மறுக்க முடியாத காரண காரியங்களைக் கூறி வாதமிட்டனர். 'தமிழ் வளர்ந்திருக்கிறது' என்று திரு கமலபதி முதலிய ஐந்து எழுத்தாளர்கள் மிகச்சிறந்த முறையில் வாதமிட்டனர். வளரவில்லை என்ற வாதத்துக்குச் சரியான மறுமொழி கூறி அவர்கள் வாதத்தைத் தவிடுபொடியாக்கினர். கடைசியில் 'தமிழ் வளர்ந்து கொண்டே வருகிறது' என்று முடிவுக்கு வந்தனர். இந்தப் பட்டிமன்றம் நடைபெற்ற முறையையும் நடத்திய விதத்தையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும். விருப்பு வெறுப்பின்றி விஷயத்தில் நின்று வாதமிட்ட எழுத்தாளர்களை வாழ்த்துகிறோம்.

புதுமைத் தமிழிடமும், தமிழ் வளர்க்கும் எழுத்தாளர்களிடமும் திருச்சி நகரத்துத் தமிழ் மக்கள் கொண்டுள்ள நன்மதிப்பை விழா நடைபெற்றபோது நன்கு அறிந்து கொள்ள முடிந்தது. விஷயத்தின் தரம் அறிந்து படிக்கும் ரஸிகர்களையும், தரம் உயர்ந்த எழுத்துக்களையே எழுத்தாளர்கள் எழுத வேண்டும் என்ற ஆவலைத் தூண்ட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தையும் தான் திருச்சி தமிழ் எழுத்தாளர்கள் தங்கள் சங்கத்தின் இலட்சியமாகக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்களுடைய பண்பு நிறைந்த பேச்சிலும், அவர்கள் செய்த அருமையான காரியத்திலும் நன்றாகத் தெரிந்து கொள்ள முடிந்தது.

* இதற்குச் சான்று கூறுவது போலிருந்தது தமிழ் எழுத்தாளர் சங்கம் வெளியிட்டிருக்கும் இலக்கியச் சிறப்பு மலர். சென்ற 1956-ம் ஆண்டில் திருச்சி எழுத்தாளர் சங்கம் ஆற்றிய தொண்டுகளையும் அருமையான இலக்கியக் கட்டுரைகளையும், அற்புதமான சிறுகதைகளையும் கொண்டு திகழும் இந்த மலரை ஒரு தரம் படித்துப் பார்த்தால், நேயர்களே திருச்சி எழுத்தாளர்களின் உயர்ந்த பண்பாட்டை உணர்ந்து கொள்ளலாம்.

இவை எல்லாவற்றுக்கும் மேலே திருச்சி எழுத்தாளர் சங்கத்தின் அங்கத்தினர்களிடையே நிலவிய ஒற்றுமையையும், கட்டுப்பாட்டையும் உழைப்பையும் கண்டு வியந்து போனேன். திருச்சி எழுத்தாளர்களின் ரஸிகத்தன்மையைச் சாப்பாட்டின்போது நன்றாக அறிந்து கொள்ள முடிந்தது.

தமிழகத்தின் விருந்தோம்பல் பண்பாட்டுக்கு உகந்த முறையில் திருச்சி எழுத்தாளர்கள் சிறந்த விருந்தை அளித்தார்கள். இந்தக் காரியத்தைப் பொறுப்பேற்றுக் கொண்டு நடத்தியவர் திரு அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் என்று அறிந்தேன். 'ரெட்டியார்' என்றுதான் இவரை எழுத்தாளர் எல்லாரும் அன்போடு அழைக்கிறார்கள். இவர் காந்தி மகானிடம் அளவற்ற பக்தி கொண்டவர். அடுத்தபடியாகத் தமிழ் எழுத்தாளர்கள் மீது பக்தி கொண்டவர். காந்தி மகான் காட்டிய வழிகளில், தேசியப் போராட்டங்களில் ஈடுபட்டவர். கிராம சேவையையும் தமிழ் வளர்க்கும் தொண்டையும் உற்சாகமாகவும் மிகத் திறமையாகவும் செய்து கொண்டு வருபவர்.

திரு ரெட்டியாரும், அவருக்குத் துணையாகத் தொண்டாற்றிய சொல்லேர் உழவர்கள் திரு சுகி, திரு ஏ. எஸ். ராகவன், திரு திருலோக சீதாராம், திரு பி. ரா. நாராயணசாமி ஐயர் முதலியவர்களும் சேர்ந்து உழைத்துப் பாடுபட்டுத் திருச்சி எழுத்தாளர் சங்க விழாவைச்சிறப்பாக நடத்திவைத்தனர்.

இப்படி ஒரு எழுத்தாளர் சங்கமும், உற்சாகம் நிறைந்த அறிஞர் பெருங் கூட்டமும் தொண்டாற்றுவதற்குச் செயலாளராகப்பணியாற்றி வருபவர் திருவாளர் அகிலன்.

திரு அகிலன் தம்முடைய தோளிலே ஒரு சிவப்புத் துண்டைப் போட்டுக் கொண்டு அங்கும் இங்கும் பறந்து பறந்து ஆற்றிய பணியையும், மேடை மீது ஏறிச் சங்கத்தின் நோக்கத்தையும் அதன் அறிக்கையையும் படித்த பணிவையும், விவாதத்தின் போது காட்டிய கண்டிப்பையும், எழுத்தாளர்களை அறிமுகப்படுத்திய போது தம்முடைய உடன் பிறந்த சகோதரர்களை அழைத்து வருவது போல அவர்களை அழைத்து வந்துமேடை மீது நிறுத்திய அன்பையும், அகிலனுடைய பெயரைச்சொன்னால் அங்கிருந்த எழுத்தாளர்கள் முகங்கள் மலர்ந்ததையும் பார்த்தபோது இவரைச் செயலாளராகப் பெற்ற திருச்சி தமிழ் எழுத்தாளர் சங்கம் பாக்கியம் செய்த சங்கந்தான் என்று எண்ணத் தோன்றியது.

சுயநலம் அறவே அற்றவர்களும், எழுத்தாளர்களுக்கும் தமிழ்த் தாய்க்கும் தொண்டாற்றுவதில் உண்மையான மகிழ்ச்சி அடையும் அருமையான பலசொல்லேர் உழவர்களைப் பெற்றிருக்கும் திருச்சி எழுத்தாளர் சங்கம் தமிழ் நாட்டின் இதர எழுத்தாளர் சங்கங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. வாழ்க, சொல்லேர் உழவர்கள்!

* இலக்கியச் சிறப்பு மலர், விலை: 0·75 நயா பைசா, கிடைக்குமிடம்: தமிழ் எழுத்தாளர் சங்கம்; 5, பட்டாபிராம பிள்ளை தெரு, தென்னூர், திருச்சிராப்பள்ளி.



அன்புக்குரிய சுஜாதா,

உன் பிள்ளை பாபு முயல் குட்டிகளை வளர்க்க ஆசைப் படுவதாகவும் அதைக் கையில் வைத்துக் கொண்டு புகைப்படம் எடுத்துக் கொள்ளப் பிரியப் படுவதாகவும் எழுதி இருக்கிறாய். குழந்தையின் ஆசையை வேறு போக்கில் திருப்பிப் பார்.

நாய்களாவது காவல் என நினைக்கலாம். மிகவும் விசித்திரம்; ஒரு வீட்டில் குரங்கை வளர்க்கிறார்கள். அந்த வீட்டுக்காரர்கள் அது மனிதர்களைப் போலச் சில செயல்களைச் செய்வதாக ஆனந்தப் படுகிறார்கள். மனிதர்களே அதன் வர்க்கத்தில் வந்தவர்கள் தானே? இது அவர்களுக்குத் தெரியாமல் போனது நமக்கு வியப்பைத்தான் அளிக்கிறது.

ஒருநாள் அந்த வீட்டு அம்மாள் கழற்றி வைத்த முத்து மாலையைக் குரங்கு கடித்து உமிழ்ந்ததாகச் சொல்லி வருந்தினார்கள். ராமாயணத்தில் ராமபிரான் அனுமாருக்குப் பரிசாக ஒரு முத்து ஹாரத்தைக் கொடுத்ததாகவும், அனுமார் அதைக் கடித்துச் சுவைத்து அது ராம நாமம்போல் ருசிக்கவில்லை என அறிந்ததாகவும் சொல்வார்கள். அந்த நினைவுதான் அப்பொழுது வந்தது.

காவியங்களில் அன்னப் பட்சியைத் தூது அனுப்பினதாகப் படிக்கிறோம். பழைய காலத்தில் புறாக்கள் தபால் இலாகாவை நடத்தி இருக்கின்றன. கால்களில் விஷயங்களைக் கட்டி விட்டுச் சொல்லிக் கொடுத்து விட்டால் உரிய இடத்தில் அஞ்சல் செய்ததாக அறிகிறோம். ஆனால் இன்னும் சிலர் புறாக்களை ஆசையோடு வளர்த்து வருகிறார்கள். அவற்றின் லாப நஷ்டத்துக்கு மிகவும் வருந்துகிறார்கள்.

கிளிகள் பார்க்க அழகாய்த்தானிருக்கின்றன. ஆனால் அவை பெரிய தோட்டங்களிலும் காடுகளிலும் பறந்து திரிய வேண்டியவை. அவற்றைக் கூட்டில் அடைத்துப்பேசக் கற்றுக் கொடுப்பது சிலர் வழக்கமாக இருக்கிறது. ஹிந்தியில் சில வருஷங்களுக்கு முன் ஒரு கதை படித்தேன். தேச விடுதலைக்காகப் போராடும் ஒரு தலைவர் கிளியை வளர்க்கிறார். அடிமை நாட்டில் அடைந்து கிடக்கும் மக்கள் துன்பத்தைக் கண்டு கொதிக்கிறார். மேடைகளில் சொல்மாரி பொழிகிறார். பத்திரிகைகளில் எழுதித் தள்ளுகிறார். மனித சுதந்திரத்துக்காகப் போராடுகிறார்.

ஒரு நாள் அவருடைய சொற்பொழிவைக் கேட்ட அவருடைய பத்து வயதுப் பையன் வருகிறான். தந்தையின் பேச்சு குழந்தையின் மனத்தில் பதிந்து விடுகிறது. அன்று வீட்டுக்கு வந்ததும் பையன் வேகமாக ஓடிக் கூட்டில் அடைக்கப் பட்ட கிளியைத் திறந்து பறக்க விடுகிறான். தந்தையிடம் சந்தோஷமாகத் தன் செயலைச் சொல்லுகிறான். தகப்பனார் பிள்ளையைக் கோபித்துக் கொண்டு அடிக்க வருகிறார். "நீதானே அப்பா எல்லோருக்கும் சுதந்திரம் வேண்டும் எனப் பேசினாய், அதனால்தான் கிளிக்குச் சுதந்திரம் கொடுத்தேன்" என்றான். ஓங்கின கை அப்படியே நின்று விட்டது. மெக்காலே கல்வியைக் கற்ற பாரத மக்கள் மாதிரி அவை கூட்டில் அடைக்கப்பட்டால் பிறகு பறக்கக் கூடத் தெரியாமல் போய் விடுகின்றன.

சிலர் பிறருக்குப் பிரமாதமாக உபதேசங்களைச் செய்து அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று பேசுவார்கள். ஆனால் அவர்கள் வாழ்க்கையில் அவற்றைக் கடைப்பிடிப்பதில்லை. அவை ஊருக்கு உபதேசந்தான்.

ஒரு சாமியார் எலி உபத்திரவத்துக்காகப் பூனையை வளர்த்து அதன் தொந்தரவுக்காக நாயை வளர்த்து, கடைசியில் குடும்பஸ்தராகி விட்டதாகக் கதை சொல்வார்கள். நவீன காலத்தில் பூனை எலியுடன் சமாதானமாக வாழ விரும்புகிறது. ஒன்றினால் இன்னொன்று துன்பம் குறைவதில்லை!

காலையில் எழுந்திருக்கும்போதே பூனைகள் தான் முதலில் கண்ணில் படுகின்றன. முக்கியமான விசேஷங்களுக்குப் புறப்பட்டால் கத்திக் கொண்டு குறுக்கே வரும். பிறகு இளம்பும் சமயம் காருக்கடியில் படுத்துக் கொள்ளும். இதன் எண்ணமோ கேட்க வேண்டாம். இவைகளையும் சிலர் சந்தோஷத்துக்காக வளர்க்கிறார்கள். அதனால் வரும் துன்பத்துக்கு ஆளாகிறார்கள். இப்படியாகப் பிராணிகளை வளர்ப்பதில் அநேக வேண்டாத கவலைகளும் தொந்தரவும் நேரிடுகின்றன.

எனவே கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் கருவிலுள்ள சிசுவுக்கும் படி அளக்கும் கடவுளிடம் அவைகளின் பொறுப்பை ஒப்புவித்து விடுவோம். அவைகளைப் பாதுகாக்கும் பொறுப்பை நாம் ஏற்க வேண்டாமென்பது தான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

இப்படிக்கு,

பூமாதேவி

வெள்ளை முயல்



○✱○

துள்ளித் துள்ளி ஓடுகின்ற
வெள்ளை முயல் அம்மா - அதை
மெள்ள ஓடிப் பிடித்திடவே
மிகவும் ஆசை அம்மா.

பஞ்சு உடலைத் தொட்டுத் தடவிப்
பார்க்க ஆசை அம்மா - நான்
கொஞ்சிப் பேசிக் கூடி ஆடிக்
குதிக்க வேண்டும் அம்மா.

பளிங்குக் கண்ணைக் கூர்ந்து நானும்
பார்க்க ஆசை அம்மா - அது
ஒளிந்து கொள்ளப் புதரை நோக்கி
ஓடப் பார்க்குதம்மா.


புல்லைத் தினமும் பிடுங்கிப் பிடுங்கிப்
போடு வேனே அம்மா - அது
மெல்ல மெல்லக் கடித்துக் கடித்து
உள்ளே தள்ளும் அம்மா.

நெட்டைக் காது இரண்டும் மேலே
நிமிர்ந்து நிற்குதம்மா - நான்
தொட்டுப் பிடித்து இழுக்க மாட்டேன்.
சொல்லை நம்பு அம்மா !

அழ. வள்ளியப்பா



அரண்மனையிலே ஒரே குழப்பம். அரசகுமாரி 'ஆயிஷா'வைக் காணவில்லை. எங்கு தேடியும் பலன் இல்லை.



"இது ஏதோ சூனியக்காரர்களின் சூழ்ச்சியாகத்தான் இருக்கும்" என்று மன்னர் ஹாலிமார் உடனே மங்குவை அழைத்து வரும்படி உத்தரவிட்டார்.



சிறிது நேரத்தில் ஒன்றுமே தெரியாதவனைப் போல, "மகிமை பொருந்திய மன்னர் மன்னவா, என்னை அழைத்தீர்களாமே?" என்று கேட்டபடி மங்கு அங்கு தோன்றினான். அவனை எதிர்பார்த்துக் கொண்டிருந்த மன்னர்,



"ஆமாம், என் அருமை மகள் ஆயிஷாவைக் காணவில்லை. யாரோ மந்திர சக்தியினால் அவளை அபகரித்துச் சென்றிருக்கிறார்கள். உன் திறமையால் அவள் இருப்பிடத்தைக் கண்டுபிடித்துச் சொல்" என்றார் மன்னர்.



மங்கு சிரித்தான். பிறகு, "நான் நினைத்தபடிதான் நடந்திருக்கிறது. நேற்றிரவு மேற்குக் கோட்டை வாசல் வழியாக ஒரு அன்னியன் குதிரை மீதேறி வேகமாக உள்ளே வருவதைக் கண்டேன். அது ஹரிகும்பா தான்.



'ஹரிகும்பா' மந்திரவாதிகளின் தலைவன். அவன் தான் அரசகுமாரியைத் தூக்கிச் சென்றிருக்க வேண்டும். இருங்கள் பார்த்துச் சொல்லுகிறேன்" என்று சொல்லி பயங்கரமாகச் சில மந்திரங்களை உச்சரித்தான்.




அடுத்த விநாடி மங்குவின் இடது கையில் ஒரு வாயகன்ற பாத்திரம் தோன்றியது. அந்தத் தட்டில் வானவில்லின் வர்ண ஜாலங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து உருகியது போல ஒரு திரவம் ஜ்வலித்தது.



மங்கு அந்தத் திரவத்தின் மீது கையை வீசி மந்திரங்களைச் சொல்லவே அந்த வர்ண நீர் வேகமாகச் சுழன்று அதில் காட்சிகள் தெரியலாயின. அதை மன்னர் முன் நீட்டினான் மங்கு. அதில்.....



சிறைச் சாலையின் கம்பிகளுக்குப் பின்னால் கண்ணீருடன் கூடிய ஒரு பெண்ணுருவம் தெரிந்தது. அது வேறு யாருமில்லை அரசகுமாரி ஆயிஷாவேதான்! தன் மகளின் நிலையைக் கண்ட மன்னர்



"என் அருமை மகள் ஆயிஷாவைச் சிறையில் வைத்திருப்பவன் யார்?" என்று கத்திவிட்டார். மகளைக் கண்டதிலே ஒரு புறம் மகிழ்ச்சியானாலும் மறுபுறம் வேதனையினால் தவித்துப் போனார் மன்னர்.



மகளை மீட்டு வருபவர்களுக்கு எதைக் கேட்டாலும் கொடுப்பதாகச் சொன்னார் காலிப். மங்கு வேறு பக்கம் பார்த்தபடி குரூரமாகச் சிரித்துக் கொண்டான். தன் தந்திரம் பலித்ததிலே அவனுக்கு மகிழ்ச்சி.



"மந்திரவாதிகளின் அரசனான ஹூம்பாபியின் வேலைதான் இது. அவனை வெல்ல யாராலும் முடியாது. ஆனால் ஒரே ஒரு வழி இருக்கிறது" என்றான் மங்கு. "என்ன அதைச் சொல்" என்று தவித்தார் அரசர். (தொடரும்)

செய்து பாருங்கள்



ஒரே அளவுள்ள மூன்று வெள்ளை அட்டைகளை வெட்டி எடுத்துக் கொள்ளுங்கள். இரண்டு அட்டைகளின் மத்தியில் துவாரம் செய்து படத்தில் உள்ளதுபோல் ரப்பர்க் கயிற்றைத் துவாரங்களில் செலுத்தி முடி போட்டு விடுங்கள். முன் அட்டையில் காமிராவைப்போல் வரைந்து கொள்ளுங்கள். மூன்றாவது அட்டையில் ஒரு பையனின் படம் எழுதி அந்த அட்டையை 'எலாஸ்டிக்'கில் அமுக்கி மூன்று அட்டைகளையும் சமமாகப் பிடித்துக் கொண்டு, 'உங்களில் யாரையேனும் புகைப் படம் பிடிக்கிறேன்' என்று சொல்லிக் கையை மெள்ளத் தளர்த்துங்கள். பையன் படம் மேலே எழும்பி வரும். "இதுதான் உன் புகைப்படம்" என்று சொல்லி அவனை வேடிக்கை செய்யலாம்.






செலவு குறைய

சுந்தரம் (TVS) புதுப்பித்த டயர்

பஸ், லாரி சொந்தக்காரர்கள்
செலவை குறைக்க முயல்வது அவசியம்.
பல செலவுகளில், டயர்'செலவு மிக அதிக
மானது. டயர் தேய்ந்தால் புதிய டயர்
வாங்குவது சிக்கனமல்ல.
தேய்ந்து வழுக்கையான டயர்களை
சுந்தரம் (T V S) புதுப்பிக்கும்
முறையில் உருவாக்கி மீண்டும் உபயோ
கித்து சரிக்குச் சரி மிச்சம் காணலாம்.
பலகோடி மைல்கள் உபயோக
அனுபவத்தில் உருவானது

சுந்தரம் (TVS) புதுப்பிக்கும் முறை

**சிக்கனம் பெரிது
உழைப்பும் உயர்ந்தது.**



**சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ்
பிரைவேட் லிமிடெட்**
(டி. வி. எஸ். ஸ்தாபனம்)
புதுக்கோட்டை . சென்னை

TVSZ 95 TM



மாயப் பந்து

15. இரு சுண்டெலிகள்!

அன்று மாலை மால் கோஷும் கலாவும், "மாமா! நாங்கள் இருவரும் கொஞ்ச தூரம் நடந்து போய் இந்தப் பட்டணத்தைச் சுற்றிப் பார்த்து விட்டு வரலாம் என்றிருக்கிறோம். நீங்களும் வருகிறீர்களா?" என்று குல்மாவிடம் கேட்டார்கள்.

"நானும் வருவேன். ஆனால் இன்று தானே எனக்கு வேலை உயர்வு கிடைத்திருக்கிறது? ஒரு முக்கிய அலுவல் காரணமாக அரண்மனைக்குப் போய் வர வேண்டியிருக்கிறது. நீங்கள் இரண்டு பேரும் உடைகளை மாற்றிக் கொண்டு ஜாக்கிரதையாகப் போய் இருட்டுவதற்குள் திரும்பி வந்து விடுங்கள். வெளியே போகும்பொழுது மந்திரப் பந்தையோ, அல்லது மந்திர ஜமக்காளத்தையோ எடுத்துப் போக வேண்டாம். உள்ளே வைத்துப் பூட்டி விட்டுப் போங்கள். நான் வசிக்கும் பட்டணத்துக்கு வந்து நீங்கள் திரும்பிப் போகும் வரையில் உங்களுக்கு ஒருவிதமான கெடுதியும் சம்பவிக்காமல் இருக்க வேண்டுமே என்று கவலைப் பட்டுக் கொண்டிருக்கிறேன். ஆதலால் ஜாக்கிரதையாகப் போய்த் திரும்பி வந்து சேருங்கள்" என்றான் குல்மா.

மாமா சொல்லியபடி உடைகளை மாற்றிக் கொண்டு மந்திரப் பந்தையும் மந்திர ஜமக்காளம் முத்துமாலை முதலியவைகளையும் ஒரு அறையில் வைத்துப்பத்திரமாகப்பூட்டி விட்டுமால்கோஷும், கலாவும் வெளியே உல்லாசமாகப் புறப்பட்டார்கள்.

மால்கோஷும், கலாவும் சந்தோஷமாக உலாவிக் கொண்டு போய்க் கொண்டிருக்கையில் மாலைப்பொழுது நெருங்கும் நேரம் ஆயிற்று. அப்பொழுது அவர்கள் அந்தப் பட்டணத்தின் எல்லையை அடைந்திருந்தார்கள். வீட்டுக்குத் திரும்பலாம் என்று அவர்கள் நிச்சயித்திருக்கும் சமயத்தில் பட்டணத்தின் எல்லையில் இருந்த ஒரு பெரிய கட்டடம் அவர்கள் கண்களில் பட்டது. உடனே கலா "அதோ தெரிகிறதே. அது இந்தப் பட்டணத்திலே உள்ள மற்ற வீடுகளைக் காட்டிலும் பெரிதாகவும் மிகவும் அழகாகவும் காணப்




படுகிறது. அதன் அருகில் சென்று பார்க்கலாமா?" என்று கேட்டாள்.

"வா, சீக்கிரம்! போய்ப் பார்த்துவிட்டுத் திரும்பலாம்" என்றான் மால்கோஷ். இருவரும் அந்தக் கட்டடத்துக்கு அருகில் சென்றார்கள். இவர்கள் கதவின் அருகில் சென்றதும் அந்தக் கட்டடத்தில் பிரகாசமான விளக்குகள் எரிய ஆரம்பித்தன. 'என்ன அற்புதமான கட்டடம். மூன்று மாடிகள் வைத்துக் கட்டப்பட்ட கட்டடமாக அல்லவா இருக்கிறது' என்று கலா மால்கோஷிடம் சொல்லிக் கொண்டிருக்கும்பொழுது அழகான நடுத்தர வயதுள்ள மனிதன் ஒருவன் அவ்வீட்டிலிருந்து வெளியே வந்தான். அவனுடைய முகத்தில் மூக்குக் கண்ணாடியும் சிறிய மீசையும் இருந்தன. அவன் அணிந்திருந்த உடை சற்றேறக்குறைய ஆங்கிலேயர்கள் தரித்துக் கொள்ளுவது போல இருந்தது. வீட்டுக்குள்ளிருந்து வந்த அந்த மனிதன் மால்கோஷை நெருங்கி, "வாருங்கள், வாருங்கள்! நீங்கள் தானே மால்கோஷ்?" என்று கேட்டான்.

"என் பெயர் மால்கோஷ்தான். நான் இந்த ஊருக்குப் புதிது ஆயிற்றே. உங்களுக்கு எப்படி என் பெயர் தெரியும்?"

"இந்தப் பட்டணத்தில் உங்கள் பெயர் தெரியாதவர்கள் இன்று யார் இருப்பார்கள்? பத்திரிகையிலேயும், இன்று காலை உங்களுக்கு அரண்மனையில் நடந்த உபசாரங்களிலும் உங்கள் பெயர்தானே பிரதானமாக இருந்தது? காலையில் தங்களுக்கு அளித்த உபசார விருந்துக்கு வந்திருந்தவர்களில் நானும் ஒருவன். உங்களை அங்கேயே கண்டு பேச வேண்டுமென்பது எனது விருப்பம். ஆனால் முன்பின் தெரியாத ஒருவரிடம் எப்படி முதலில்



பேசுவது என்பதுதான் எனக்குக் கூச்சமாக இருந்தது. ஒருவராலும் முடியாது என்று கைவிடப்பட்ட ஒரு அசாத்தியமான காரியத்தைச் சாதித்துக் காண்பித்து விட்டீர்களே. ராஜகுமாரியைப் பத்திரமாகக் கொண்டு வந்ததும் அல்லாமல் அந்த மந்திரவாதியையும் அல்லவா சமுத்திரத்தில் மூழ்கச் செய்தீர்கள்! சரி. உள்ளே போய்ப் பேசலாம், வாருங்கள்.''

''உங்கள் அன்புக்கு மிகவும் நன்றி. எங்களுக்கு இப்பொழுது அவகாசமில்லை. நாங்கள் உடனே திரும்பி எங்கள் மாமா வீட்டுக்குப் போக வேண்டும். நாங்கள் வருவதற்குச் சற்றுத் தாமதமானால் அவர் கவலைப்படுவார்.''

''மால்கோஷ், நீங்கள் அப்படிச் சொல்லக் கூடாது. நீங்களும் உங்கள் தங்கையும் என்னுடைய வீட்டுக்கு வருவதே நான் செய்த பாக்கியம். நான் உங்களை ஐந்து நிமிஷங்களுக்கு மேல் தாமதப்படுத்தவில்லை. தயவுசெய்து வாருங்கள். உடனே போய் விடலாம்.''

புதிய மனிதன் சொல்லியதைத் தடுத்துப் பேசத் தயங்கித் தயங்கி உள்ளே சென்றான் மால்கோஷ். அவனைப் பின்தொடர்ந்தாள் கலா. புதிய மனிதன் மால்கோஷையும் கலாவையும் பூரிப்புடனும் புன்னகையுடனும் மூன்றாவது மாடிக்கு அழைத்துச் சென்றான்.

பார்ப்பதற்கு அந்த அறை சற்று வெளிச்சக் குறைவாகவே காணப்பட்டது. அந்த அறையிலே உள்ள பல அலமாரிகளில் கண்ணாடி ஜாடிகளும் பெரிய தகர டப்பாக்களும் இருந்தன. ஏதோ விலை உயர்ந்த மருந்துச் சாமான்கள் வைத்திருப்பது போல அவை தோற்றமளித்தன. அவைகளைப் பார்த்ததுமே மால்கோஷுக்கும், கலாவுக்கும் மனத்தில் ஏதோ சந்தேகம் ஏற்பட்டது. அதைப் பார்த்த புதிய மனிதன், ''ஏன் யோசிக்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

''அதோ அந்த மேஜைக்கருகில் உட்காருங்கள்'' என்று ஒரு அடி அகலமும், ஒரு அடி நீளமும் இருந்த சாதாரணமான சின்ன மேஜையைச் சுட்டிக் காண்பித்தான். அந்தச் சிறிய மேஜையின் ஒருபுறத்தில் சிறிய முக்காலியும், அதற்கு எதிர்ப் பக்கத்தில் சிறிய முக்காலியும் போடப்பட்டிருந்தன.

ஒரு முக்காலியில் மால்கோஷ் உட்கார்ந்தான். மற்றொரு முக்காலியில் கலா உட்கார்ந்தாள். உடனே மால்கோஷ், ''உங்கள் பெயர் என்ன? இந்த ஊரில் தங்களுக்கு என்ன வேலை?'' என்று கேட்டான்.

''என்னுடைய பெயர் ஜிக்காடி. ஜிக் என்றும் சொல்லுவார்கள். எனக்கு முக்கியமான தொழில் ஒன்றும் இடையாது. நான் ஒரு தனவந்தர் என்று வைத்துக் கொள்ளுங்களேன்.''

''கீழேயும் முதல் மாடியிலும் பல பெரிய அறைகள் இருக்கின்றனவே! ஏன் எங்களை இப்படித் தனிமையாக மேல்மாடியிலுள்ள சிறிய அறைக்கு அழைத்து வந்தீர்கள்?''

''காரணமில்லாமல் உங்களை அழைத்து வருவேனா? என் வீட்டில் எனது வீட்டுக்காரர்களும், உறவினர்களும் மிகவும் அதிகம். உங்களைப் போலப் பெரிய மனிதர்களை நான் இந்த அறைக்குத் தான் அழைத்து வருவேன்! இது எனது ரகசிய அறை. அநேகமாக நான் மாத்திரம் தான் தனிமையாக இங்கே இருப்பேன். அதனால் தான் பெரிய மேஜையோ அல்லது நாற்காலியோ இங்கு இல்லை'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது ஒரு வேலைக்காரன் இரண்டு கோப்பைகளில் சூடான தேநீரைக் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போனான். அந்தக் கோப்பைகளை எடுத்து 'ஜிக்' அவர்களுக்குக் கொடுத்தான்.

''நான் இப்பொழுதுதான் சாப்பிட்டேன். நீங்கள் சாப்பிடுங்கள்'' என்றான் ஜிக். மால்கோஷும், கலாவும் அந்த டீயைப் பருகப் பிரியப்படவில்லை. ஜிக் ஏதாவது சூழ்ச்சி செய்வதற்காகத் தங்களை அங்கு கொண்டு வந்திருக்கிறானோ என்ற பயம் அவர்கள் மனத்தில் குடி கொண்டது.

ஜிக் சாதாரண மனிதன் அல்ல. தோற்றத்துக்கு அவன் சாதாரண மனிதனைப் போல இருந்தாலும் அவனும் ஒரு பெரிய மந்திர வாதிதான். மால்கோஷ் ராஜகுமாரியை மீட்டு அந்த மந்திரவாதியைச் சமுத்திரத்திலே மூழ்க அடித்தானல்லவா? அந்த மந்திரவாதிக்கு ஜிக் நெருங்கிய நண்பன். ஜிக்கைக் கலந்து யோசிக்காமல் அந்த மந்திரவாதி ஒன்றும் செய்ததில்லை. அரசனுக்கு எதிராக மந்திரவாதியைச் சூழ்ச்சி செய்து ஏவிவிட்டதும் ராஜகுமாரியை எடுத்துக் கொண்டு போகச் செய்ததும் ஜிக் தான்.

மால்கோஷ் என்பவன் ராஜகுமாரியைத் திருப்பி அழைத்துக் கொண்டு வந்து விட்டான் என்று அறிந்ததும் சந்தோஷப்படாமல் கோபத்தினால் குதித்தான் ஜிக். தன் நெருங்கிய நண்பனை அவமானப் படுத்தி அவனது உயிர் நிலையைப் போல உள்ள கத்தியையும் பிடுங்கிக் கொண்டு சமுத்திரத்திலும் மூழ்க வைத்தான் என்பதைக் கேட்க அவன் மனம் கொதிக்காமல் எப்படி இருக்கும்? மால்கோஷை எப்படியாவது பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்று அவன் தீர்மானித்தான்.

அதனால் மால்கோனைப் பற்றியுள்ள விவரங்களைச் சேகரிக்க ஆரம்பித்தான். ஆனால் அவனது அதிர்ஷ்டவசமாக மால்கோன் அவன் வீட்டு வாசலில் வரும் பொழுது அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொள்ளாமல் இருப்பானா? உண்மையைச் சொன்னால் ஜிக் அப்பொழுது இருந்த வீட்டில் வேறு அயல் ஆசாமிகள் கிடையாது. ஒரு செவிட்டு வேலைக்காரன் ஒருவனைத்தான் அவனுடன் வேலைக்கு அமர்த்தியிருந்தான். தான் அந்த வீட்டில் பேசும் இரகசியங்கள் வெளியில் தெரியக் கூடாது என்பதற்கே அந்த வேலைக்காரனை அமர்த்தியிருந்தான்.

சந்தேகத்துடன் தேநீரைப் பருகாமல், பருகுவது போலத் தங்கள் வாய் அருகில் கொண்டு போவதும் திரும்ப மேஜைக்கு அருகில் கொண்டு வருவதுமாக இருந்த மால்கோனையும், கலாவையும் பார்த்து, "ஏன் குடிக்காமல் இருக்கிறீர்கள்? சர்க்கரை போதாதா?" என்று கேட்டான் ஜிக்.


அவன் அவ்வாறு கேட்டதும் ஜிக்கைத் திருப்திப் படுத்துவது போல, "ஆமாம், ஆமாம்" என்று தலையை இரண்டு பேர்களும் அசைத்தார்கள்.

"பார்த்தீர்களா? எனக்கு அப்பொழுதே இந்த வேலைக்காரனுடைய முட்டாள் தனத்தைப் பற்றித் தெரியும். நீங்கள் தேநீரைப் பருகாமல் இருந்தபொழுதே சர்க்கரையைச் சரியாகச் சேர்க்காமல் வேலைக்காரன் இருந்திருப்பான் என்பது எனக்குத் தெரியும். இதோ சர்க்கரை கொண்டு வந்து போடுகிறேன்" என்றான்.

"நீங்கள் சிரமப் படவேண்டாம். எங்களுக்கு நேரமாகி விட்டது. நாங்கள் சென்று வருகிறோம்" என்று மால்கோன் சொன்னான்.

உடனே ஜிக், "மிகவும் நன்றாக இருக்கிறது. என் வீட்டுக்கு வந்தவர்களை நான் சும்மா அனுப்புவது வழக்கமில்லை. சர்க்கரை கொண்டு வருவதற்கு நான் எங்கும் போக வேண்டாம். வந்த விருந்தினர்களுக்கு வேலைக்காரர்களினால் இப்படி ஏதாவது நடக்கும் என்று தான் இந்த அறையில் எல்லாம் தயாராக வைத்திருக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே அருகிலிருந்த ஒரு சீசாவைத் தன் கைக்குட்டையினால் மூடியபடியே எடுத்துத் திறந்தான். ஒரு சிறிய கரண்டி நிறைய ஒரு பவுடரை எடுத்தான். கண் இமை மூடித் திறப்பதற்குள் நெருங்கி வந்து அவன் மீதும் கலாவின் மீதும் அந்தப் பவுடரைத் தூவி விட்டான். அடுத்த நிமிஷத்தில் மால்கோனுக்கும், கலாவுக்கும் பதிலாக இரண்டு சுண்டெலிகள் அந்த முக்காலிகளில் உட்கார்ந்து கொண்டிருந்தன! (தொடரும்)





பக்தவத்சலம் – ரேவதி கலா

மணமகன் கூத்தாநல்லூர் பிரபல டாக்டர் கே. வேணுகோபால் நாயுடுவின் குமாரர் பக்தவத்சலம். மணமகள் சென்னை பிரபல வக்கீல் கே. எஸ். நாயுடுவின் பேத்தியும், பிரபல மிராசுதார் ஓ. கே. வேணுகோபால் நாயுடுவின் குமாரியுமான ரேவதி கலா. இவர்கள் திருமணம் 9-6-1957ல் நாகையில் அதி விமரிசையாக நடந்தேறியது.

படித்துப் பாருங்கள்

புத்தகமும் வித்தகமும்

கதையைப் போல் சுவாரஸ்யமாக ஆரம்பித்து, பலப் பல அனுபவங்களையும் கருத்துக்களையும் இடைஇடையே லாகவமாக அள்ளித் தெளித்து, உயர்ந்த நோக்குடன் முடியும் வண்ணம் எழுதும் வசனமே கட்டுரை.

இத்தகைய கட்டுரைகளை ஆங்கில மொழியில் ஏ. ஜி. கார்டினர், ராபர்ட்லிண்ட் போன்ற ஆசிரியர்கள் வெகு வெற்றிகரமாக எழுதி யிருக்கிறார்கள். அந்தக் கட்டுரைகளைப் படித்தவர்கள் தமிழில் இத்தகைய கட்டுரைகள் என்றைக்கு வெளியாகுமோ என்ற ஏக்கம் அடைந்திருக்கிறார்கள். சிலர், தாங்களும் மேற் கூறிய ஆங்கில ஆசிரியர்களின் கட்டுரைகளைப் படித்து உற்சாக மடைந்து அவர்களைப் போல் எழுதுவதாகக் கூறிக் கொண்டு பல கட்டுரைகள் தமிழில் எழுதி யிருக்கிறார்கள். ஆனால் திரு மு. அருணாசலம் அவர்கள் இத்துறையில் வெற்றி யடைந்திருப்பது போல் யாரும் இதுவரை வெற்றி யடையவில்லை என்று சொல்ல வேண்டும்.

இந்தக் கட்டுரைத் தொகுதியில் வெளியாகியுள்ள "அறியாமை" என்ற கட்டுரை எவ்வளவு அழகாக இருக்கிறது! "கருணாகர மூர்த்திக்கு, ஆராதனை என் அறியாமை ஒன்றுமே!" என்று ஆழ்வாரின் அடிகளுடன் முடித்திருப்பது மிக வாய்ப்பாக இருக்கிறது!

ரஸிகமணி டி. கே. சி. யைக் கேட்பது போன்ற பிரமை தோன்றுகிறது. இதற்குக் காரணம் ஆசிரியர் முன்னுரையில் கூறி விடுகிறார். "இக் கட்டுரைகள் எழுதிய காலம் டி. கே. சி அவர்கள் என் உள்ளத்தை ஆட்கொண்டு, ஓரளவுக்கு என் வாழ்க்கை முழுமையும் ஆட்கொண்ட காலம் என்று எழுதியிருக்கிறார். இது முற்றிலும் உண்மை என்பதை, குறிப்பிட மாட்டாதவன், யார் அறிவார், தமிழருமை, புலமைப் பகட்டு, புதுமைத் தமிழ் முதலிய கட்டுரைகளில் டி. கே. சி.யின் கருத்துக்களிலிருந்து அறிகிறோம்.

"தமிழ்ப் புத்தகங்கள்—1943" என்ற கட்டுரையில் அந்த ஆண்டு வெளியான புத்தகங்களைப் பற்றி ஒரு விமர்சனமே புரிந்திருக்கிறார். இந்தக் கட்டுரையைப் படிக்கும்போது இன்றைய நிலையையும் ஒப்பிட்டுப் பார்க்கத் தோன்றுகிறது. அப்போது தமிழ் பல துறைகளில் முன்னேறி வருகிறது என்ற நம்பிக்கை ஏற்படுகிறது!

ஆசிரியர்: மு. அருணாசலம்; பிரசுரம்: தமிழ்நூலகம், திருச்சிற்றம்பலம், குத்தாலம்; விலை: ரூபாய் ஒன்று.

முழக்கம்

மூவேந்தர்களில் ஒருவனான சோழப் பேரரசன் கரிகால் வளவன் சேரபாண்டியர்களின் சூழ்ச்சி வலைகளில் சிக்குண்டு, பிறகு தப்பி, சேரபாண்டியர்களைப் போரில் வென்று தமிழ் நாட்டின் சரித்திரத்திலே அழியா இடம் பெற்றான். அவனது வீரவரலாற்றை வழங்கியுள்ளார் இந்நூலாசிரியர்.

நாடகப் பாணியிலே அமைந்துள்ள இந்த வரலாற்றுச் சரித்திரத்திலே திருமாவளவன் புரியும் வீரமுழக்கமும், கொல்லி மலை இளவரசி மூலமே அவன் காதலையடையப் புரியும் அரிய சாதனைகளும் படிக்கப் படிக்கச் சுவையூட்டுகின்றன. இனிய தமிழிலே அழகிய நடையிலே நாடகப் பண்போடு அமைந்திருக்கிறது இந்நூல்.

சேரபாண்டியர்கள் வளவனைக் கைது செய்து பாசறைக்கு இழுத்து வருகிறார்கள். மாற்றாரின் கையில் சிக்கியும் நெஞ்சுறுதி தளராத வளவனின் சொற்கள் நம்மைப் புல்லரிக்கச் செய்கின்றன.

"சிலந்திக் கனவானே! நான் சிற்றெறும்பு தான். எனக்குச் சூழ்ச்சி வலை பின்னத் தெரியாது. உருவத்தில் சிறியவன் தான்; ஒத்துக் கொள்கிறேன். ஆனால் நான் உம்மைத் தாக்கிக் கொல்கின்ற நேரத்திலே நான் சிறுத்தை கூட இல்லை, சிங்கம் என்பதைத் தெரிந்து கொள்வீர். வாய் வீரம் எதற்கு அன்பரே! வலிமை இருந்தால் வாள் வீரம் காட்டும்!" என்று போருக்கு அறை கூவி அழைக்கும் அவ்வீர வாலிபனிடமிருந்து உயிர்த் துடிப்புள்ள வார்த்தைகள் வெளி வருகின்றன. தமிழ் பேசுகிறது.

ஆசிரியர்: இனியவன்; பிரசுரம்: ஔவை மன்றம், கந்தர்வ கோட்டை, தஞ்சை மாவட்டம். விலை ரூ 1.

வசந்த பைரவி

காதல் மனிதர்களை என்ன வெல்லாம் பாடாய்ப் படுத்தி வைக்கிறது என்பதையும், மனிதர்கள் காதலை எப்படி யெல்லாம் பாடாய்ப் படுத்துகிறார்கள் என்பதையும் இந்தக் கதை அழகாகவும் விறு விறுப்பாகவும் விளக்குகிறது. உண்மைக் காதல் என்று தீர்மானமாக நினைத்து வந்தது பொய்க் காதலாகிறது. புதுக் காதல் பிறக்கிறது. பழைய காதல் விடை பெற்றுக் கொள்ளுகிறது. உடனே புதுக் காதல் கருகிவிடுகிறது. பழைய காதல் தளிர் விடப் பார்க்கிறது. கடைசியில் எல்லாம் கனவாகி ஓய்ந்து போகிறது.

பூவை எஸ். ஆறுமுகம் இந்த நாவலைச் சுவை ததும்ப எழுதி யிருக்கிறார். காதலர்களாக இருந்த ரமண்-சுநீதா இருவரும் தங்கள் காதலை மறந்து விதியின் சதியினால் கடைசியில் சகோதர அன்பை மேற்கொண்டு ஒருவருக்கொருவர் துணையாக வாழ்கின்றனர் என்பது சற்று விசித்திர முடிவாகக் காணப்பட்டாலும் விபரீத முடிவாகக் கூற முடியாது. ஆசிரியரின் தமிழ் நடை இனிமையை ஊட்டுகிறது.

எழுதியவர். பூவை எஸ். ஆறுமுகம்; பிரசுரம்: உமா வெளியீடு, தபால் பெட்டி எண் 1377, சென்னை-1. விலை: அணா 8.

மலைச்சாரல் மாதவி

அத்தியாயம் 35

ஜயந்தியின் கடிதம்


கருணாகரன் எப்போதுமே துடுக்காகப் பேசுபவன் என்று பெயர் வாங்கியவன். அதிலும் கோபம் வந்து விட்டால் அவனால் நாவைக் கட்டுப்படுத்திக் கொள்ளவே முடிவதில்லை.

தான் கூறுவது சரியில்லை என்று உள் மனத்துக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். ஆனால் வார்த்தைகளைத் தடுத்து நிறுத்த அவனால் முடியாது. தன் செயலை ஜயந்தி சிறிதும் விரும்ப மாட்டாள் என்று அவனுக்குச் சில சமயங்களில் தோன்றும். அதனாலேயே அவனுடைய வெறி மேலும் அதிகமாகும்.

சிவசங்கரன் சென்றபிறகு மாதவியின் நிலை மிகவும் பரிதாபகரமாக இருந்தது. தான் அவரிடம் அவ்வாறு பேசியதை எண்ணி அவள் மனம் புழுங்கினாள். அவர் உண்மையிலேயே கோபித்துக் கொண்டு போயிருப்பாரென்று எண்ணியபோது மாதவியின் மனம் வெடித்து விடும் போல இருந்தது. தன்னையே நொந்துகொண்டாள்; தான் பிறந்த வேளையை நொந்தாள்; தன் அதிர்ஷ்டத்தை எண்ணி நொந்து கொண்டாள். அவளுக்குக் கருணாகரனிடம் கூடக் கோபம் வந்தது.

"இந்தப் பாதகனிடம் எவ்வளவு அன்பு வைத்திருந்தேன். எனக்காகவாவது அவரை அவ்வளவு துச்சமாகப் பேசாமல் இருந்திருக்கக்கூடாதா? அவன் பேசியதும் அல்லாமல் என்னையும் அல்லவா விபரீதமாகப் பேச வைத்துவிட்டான்? இவனுக்காக நான் என்ன பாடு பட்டிருக்கிறேன். கொஞ்சமாவது அவனுக்கு என்னிடம் அன்பு இருந்தால், அவர் உண்மையாகவே இவனுக்குக் கெடுதல் செய்திருந்தால் கூட, 'அக்கா! அவர் எனக்குக் கெடுதல் செய்தாலும், உனக்காக, நான் அதைப் பாராட்டவில்லை' என்று பெருந்தன்மையோடு கூறியிருக்க மாட்டானா? என்ன வேண்டியிருக்கிறது பாசம்? அன்பு, பாசம், இந்த வார்த்தைகளுக்கெல்லாம் அர்த்தமே கிடையாது. எல்லாம் பொய். பிரபஞ்சமே மாயை என்று இதனால் தான் சொல்கிறார்கள் போலிருக்கிறது" என்றெல்லாம் எண்ணமிட்டாள்.

உடனேயே 'அது எப்படிப் பொய்யாக இருக்க முடியும்? அவரை நினைக்கும் போது என் இதயத்திலிருந்து ஒரு அமுத தாரை பொங்கிப் பெருகுகிறதே. அதற்கு என்ன பெயர் சொல்வது? அவரைப் பார்க்கும்போது என் மனம் பூரிக்கிறதே? அதை என்னவென்று சொல்வது? அவ-



ருடைய கனிந்த பார்வையைக் காணும் போது என்னுடைய மெய் சிலிர்க்கிறதே. இதெல்லாம் என்னமாகப் பொய்யாக இருக்க முடியும்?

ஏன்? அவரை எடுத்துக் கொள்வானேன்? அவரிடம் அன்பும், பரிவும் ஏற்படவாவது காரணம் இருக்கிறது. அவர் அன்பே உருவானவர், அடக்கத்தையே ஆபரணமாக அணிந்து கொண்டிருப்பவர். கருணாகரன் அவ்வளவு பயங்கரமாகக் குற்றம் சாட்டியபோது கூட அவர் பேசியதில் சண்டிப்பும், கோபமும் இருந்தனவே தவிர, குரோதமும், படபடப்பும் இல்லையே. இப்படிக் குற்றம் சாட்டினால் யாருக்குத்தான் கோபம் வராது? அவ்வளவு காரணம் இருந்தும் அவர் வார்த்தைகளைப் படபடவென்று கொட்டினாரா? இல்லையே. அவருடைய கோபத்தில் கூடக் கம்பீரம் இருந்ததே. கோபம் வந்தால் அவர் மற்றவர்களைப் போல மிருக சுபாவத்தை அடைந்துவிடவில்லை. அவர் தம்முடைய நிலையிலிருந்து சிறிதும் தாழ்ந்து விடவில்லை. அவர்தான் எவ்வளவு படித்தவர்? படிப்பினால் மட்டும் பெருந்தன்மையும், நன்னடத்தையும் வந்துவிடுகின்றனவா? அவர் பிறக்கும்போதே அந்த அருங் குணங்களுடன் பிறந்திருக்கிறார். அவரது அன்னை மகாபாக்கியசாலியாக இருக்க வேண்டும்.

இப்படிப் பட்டவரிடம் எனக்கு அன்பு ஏற்படுவதில் என்ன அதிசயம் இருக்கிறது? இத்தனை பேச்சு பேசிய கருணாகரனிடம் எனக்குப் பாசம் அடித்துக் கொள்கிறதே. அது அல்லவா விந்தை? அவனுக்குக் கோபம் வரக் கூடாதே என்றும் அவனுடைய மனம் புண்பட்டு விடக் கூடாதே என்றும் எவ்வளவு கவலைப்படுகிறேன். ஒரு நாளாவது அவன் அப்படி நினைத்திருக்கிறானா? சுயநலமே பெரிதாக அல்லவா எண்ணியிருக்கிறான். இந்தத் தம்பியிடம் எனக்கு ஏன் பாசம் அடித்துக் கொள்கிறது? அவனுக்கு மனம் புண்படக் கூடாதே என்பதற்காக மனமறிந்து அவர் மனத்தை நோகச் செய்துவிட்டேனே பாவி! எனக்கு மன்னிப்பு உண்டா? அவர் திரும்பி வந்து என்னை மன்னித்ததாக ஒரு வார்த்தைசொல்லி



விட்டுப் போகக்கூடாதா? என்றெல்லாம் நினைத்து நினைத்துக் கலங்கினாள் மாதவி.

'உங்கள் முகத்தில் விழிக்கமாட்டேன்' என்று சிவசங்கரன் கூறியது ஞாபகம் வந்தது. 'ஒருவேளை உண்மையிலேயே என்னை அவர் மறந்துவிட்டால் என் கதி என்ன ஆகும்?' என்று நினைத்தாள். அவளால் பொறுக்க முடியவில்லை. அழுகை வெடித்துக் கொண்டு வந்தது.

மாதவி விம்மி அழும் சத்தம் கேட்ட போது. கருணாகரனுக்கு முதலில் பரிதாபமாக இருந்தது. உடனேயே வெறுப்பும் கோபமும் உண்டாயிற்று. மாதவி தனக்காக வருத்தப்படவில்லை என்பதும், சிவசங்கரனைப் புண்படுத்தி விட்டோமே என்பதற்காகத்தான் மனம் வருந்திக் கண்ணீர் விடுகிறாள் என்பதும் கருணாகரனுக்குத் தெரியாமல் போய் விடுமா? அவனுக்குத் தன் அக்காவின் மீது ஆத்திரம் உண்டாயிற்று.

அவளைச் சமாதானம் செய்யலாம் என்று முதலில் நினைத்தவன் இந்த எண்ணம் தோன்றியதும் பேசாமல் தன் அறைக்குச் சென்றான். மேஜையில் சில புத்தகங்கள் இறைந்து கிடந்தன.

அவற்றில் ஒரு புத்தகத்தைக் கையில் எடுத்தான் கருணாகரன். அது பல ஆங்கிலக் கவிஞர்களுடைய காதல் கவிதைகளின் தொகுப்பு. அதை ஜயந்தி அவனுக்குப் பிறந்த நாள் பரிசாக அளித்திருந்தாள். அவற்றில் ஒன்றிரண்டைத் தான் கருணாகரன் படித்திருந்தான். அதற்கு மேல் அவனுக்கு அதில் சிரத்தை ஏற்படவில்லை. இன்று அதைப் பார்த்ததும் அவனுடைய நெஞ்சு வலித்தது. காரணமில்லாமல் புத்தகத்தின்மீது அவனுக்குக் கோபம் வந்தது. அதை எடுத்து ஒவ்வொரு பக்கமாகக் கிழித்தான். மாதவியின் விம்மல் ஒலி கேட்டுக் கொண்டே இருந்தது.

கிழித்த காகிதங்களை அறையின் நடுவே குவித்து வைத்தான். சைக்கிள் விளக்கு ஏற்றுவதற்காக எப்போதும் ஒரு நெருப்புப் பெட்டி அவனுடைய பையில் இருக்கும். அதை எடுத்துக் குச்சியைக் கிழித்தான். கீழே கிடந்த காகிதக் குவியலைப் பற்ற வைத்தான். மெல்லிய காகிதமாதலால் 'திகுதிகு'வென்றுபற்றி எரிந்தது. கருணாகரனின் மனமும் அத்துடன் சேர்ந்து எரிந்தது.

பேனாவையும் காகிதத்தையும் எடுத்து வைத்துக் கொண்டு ஜயந்திக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினான். முதலில் அவளிடம் எப்படித் தனக்கு அன்பு மலர்ந்தது என்பதை விவரித்தான். பிறகு அது எப்படிக் காதலாகப் பரிணமித்தது என்பதை எழுதினான். இப்போது தன் மனம் எவ்வளவு தூரம் நொந்து, உடைந்து போயிருக்கிறது என்பதையும் எழுதி விட்டுக் கடைசியில்,

'ஜயந்தி! இனிமேல் நான் உனக்குக் கடிதம் எழுதுவது கூடச் சரியல்ல. உன்னை நான் மணம் செய்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டு விட்டது. நான் மில் மானேஜர் பதவியை வகிப்பதற்குத் தகுந்தவன் என்பதாலேயே உன் தந்தை என்னை உனக்கும் தகுந்தவன் என்று தீர்மானித்தார். நான் மானேஜர் பதவிக்குத் தகுதியில்லாதவன் என்பது இப்போது தெரிந்து போய் விட்டது. ஆகவே உனக்கும் நான் ஏற்றவன் அல்ல. இந்த எண்ணம் எனக்கு வெகு நாட்களாகவே இருந்து வந்த போதிலும், அதை ஒப்புக்கொள்ள மனம் வந்ததில்லை. இன்று அதை நான் உணர்கிறேன்.

உன்னுடைய அழகுக்கும், படிப்புக்கும், செல்வத்துக்கும் ஏற்ற கணவன் உனக்கு வாய்க்க வேண்டும் என்பது என் பிரார்த்தனை. உன் அருகிலேயே உனக்கு ஏற்றவர் இருக்கிறார்.

என்னை நீ மறந்து விடு. நான் இப்படிக் கேட்டுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. நீ கொஞ்சம் கொஞ்சமாக என்னை மறந்து விட்டாய். கோவிந்தன் வந்த பிறகு உனக்கு என்னைப் பார்ப்பதிலும், என்னுடன் பேசுவதிலும் ஆசை குறைந்துபோய் விட்டது. அதற்காக நான் உன்னைக் குற்றம் சொல்லவில்லை. நான் உனக்கு ஏற்றவனில்லை என்பது எனக்கு முன்பே தெரியும்.

ஆனால் அதற்காக என்னை இவ்வளவு தூரம் எல்லாருமாகச் சேர்ந்து அவமானப்படுத்தியிருக்க வேண்டியதில்லை. கோவிந்தனை நீ மணந்துகொள்ள விரும்பியிருந்தால் தாராளமாக மணந்து கொண்டிருக்கலாம். நான் ஆட்சேபித்திருக்கப் போவதில்லை.

ஆனால் அதற்காகக் கோவிந்தன் தொழிலாளர் சங்கத்தில் எல்லோருக்கும் லஞ்சம் கொடுத்து என் மீது வழக்கு போடச் சொல்லியிருக்க வேண்டாம். எனக்கு முதலிலேயே அவரைப் பார்த்ததும் நல்ல எண்ணம் ஏற்படவில்லை. அவருடைய இந்தச் செய்கையை அறிந்தது முதல் என் மனம் என்ன பாடுபடுகிறதென்பதை உன்னால் ஊகிக்கக் கூட முடியாது.

உனக்கு இது தெரியாமல் இருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை. வழக்கு தோற்றுப் போனதினால் எனக்கு ஏற்பட்ட அவமானத்தையும், துயரத்தையும் யாராலும் துடைக்க முடியாது.

உன்னிடம் உண்மையான அன்பு வைத்ததற்காகவும், உன் தந்தைக்கு உண்மையாக உழைத்ததற்காகவும் நான் நல்ல பலன் அடைந்து விட்டேன்.



ஈரோடு ஆஞ்சனேய மோட்டார் டிரான்ஸ்போர்ட் கம்பெனி பார்ட்னரும் ராமனுதபுரம் ஜில்லா, காஞூர் கிராமம் பிரபல மிராசுதாரருமான ஸ்ரீ சொ. சிவசிதம்பரம் பிள்ளையின் குமாரத்தி செல்வி ஜெயலட்சுமிக்கும் காஞூர் மிராசுதார் ஸ்ரீ சௌ. பாலசுப்ரமண்ய பிள்ளையின் குமாரன் செல்வன் செல்லச்சாமி என்கிற சந்திரசேகரனுக்கும் காஞூரில் ஜூன் 2-ந் தேதி மணமகள் இல்லத்தில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. மணமக்களுக்குப் பல வாழ்த்துப் பத்திரங்களும் செய்திகளும், பரிசுகளும் வெகுமதிகளும் வழங்கப்பட்டன.

வாழ்க, மணமக்கள் !

இனிமேல் இந்தப் பொய்யும், வஞ்சனை ம் நிறைந்த உலகில் வாழவே எனக்கு ருப்பமில்லை. மலைமீது ஏறிக் கால் பாகும் திசையில் போகப் போகிறேன். ான் திரும்பி வராவிட்டால் அதிசயப் டவேண்டாம். என் அக்கா மாதவியை நினைத்தால்தான் எனக்குக் கஷ்டமாக இருக்கிறது. ஆனால் அவள் சாமர்த்திய சாலி. அவளைப் பற்றி நான் கவலைப்பட வேண்டியதில்லை.

இப்படிக்கு,
கருணாகரன்'

என்று எழுதி முடித்தான். அதை எழுதிய பிறகு அவனுக்குச் சற்று வேதனை குறைந்தது போல இருந்தது. கடிதத்தை ஜயந்தி படித்தால் மிகவும் வருத்தப்படுவாளே என்று தோன்றியதும், கிழித்தெறிந்து விடலாமா என்று ஒரு கணம் நினைத்தான். பிறகு, 'ஏன் கிழிக்க வேண்டும்? என்னை இவ்வளவு தூரம் அவமானப்படுத்தியவள் கொஞ்சம் வருத்தப்படத்தான் செய்யட்டுமே!' என்று எண்ணிக் கொண்டே, ஒரு உறையை எடுத்து அதில் கடிதத்தைப் போட்டு ஒட்டினான்.

அதை எப்படி ஜயந்தியிடம் சேர்ப்பது என்ற கேள்வி பிறந்ததும், தபாலில் கடிதத்தைச் சேர்த்து விடலாம் என்று தீர்மானித்துக் கொண்டான்.

அப்போது மாதவி கூப்பிடும் குரல் கேட்டது. பதில் சொல்லாமலேயே அவள் அருகில் சென்றான் கருணாகரன். அவனைப் பார்த்ததும் மாதவி, ''வாசு வில் ஜயந்தி அனுப்பிய ஆள் நின்று கொண்டிருக்கிறான்'' என்றாள்.

ஜயந்தி கடிதம் எழுதி அனுப்பி யிருந்தாள். அந்த ஆளைச் சற்று இருக்கச் சொல்லி விட்டுக் கருணாகரன் உள்ளே சென்று கடிதத்தைப் பிரித்துப் படித்துப் பார்த்தான்.

ஜயந்தி சுருக்கமாக எழுதி யிருந்தாள்.

'அன்பரே!

நான் நேரில் வந்து உங்களைப் பார்க்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். வழக்கு எப்படியோ முடிந்து விட்டது. அதற்காக வருந்த வேண்டாம். அப்பாவுக்கு உடம்பு இன்று மோசமாக இருப்பதால் என்னால் வர முடியவில்லை. நாளை சந்திக்கிறேன். ஜயந்தி'

இந்தக் கடிதத்தைக் கண்டதும் கருணாகரனின் கோபம் கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது. 'வருத்தப்பட வேண்டாம் என்று இவள் யார் சொல்வதற்கு? நான் இவளை வரச் சொன்னேனா? என்ன அகம்பாவத்துடன் கடிதம் எழுதி யிருக்கிறாள்?' என்று நினைத்துக் கொண்டே தான் எழுதிய கடிதத்தை அந்த ஆளிடம் கொடுத்து அனுப்பினான். அதை ஜயந்தி படிக்கும் போது அவள் முகம் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பார்த்துக் கொண்டே, துப்பாக்கியை எடுத்துக் கொண்டு மலைமீது ஏறிச் சென்றான். அவன் ஒன்றுமே சொல்லாமல் ஆத்திரத்தோடு கிளம்பி மலைப்பாதை மீது ஏறுவதை மாதவி கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அத்தியாயம் 36

சிவசங்கரனின் துயரம்

மலையிலிருந்து வீசிய குளிர்ந்த மலய மாருதம்கூட மாதவியின் வீட்டிலிருந்து கோபத்துடன் புறப்பட்ட சிவசங்கரனின் மனத்தைக் குளிர்விக்கவில்லை. வேகமாக மலைமீது ஏறிச் சென்றார். மாதவியை முதன் முதலில் பார்த்த இடம் வந்ததும் சற்று நின்றார். அவள் ஸ்நானம் செய்து விட்டு மலைப் பாதையில் இறங்கிவந்த அந்த அற்புதக் காட்சி அவர் கண் முன் வந்து நின்றது.

அங்கிருந்து இன்னும் உயரச் சென்ற போது மாதவி ஸ்நானம் செய்யும் அருவி வந்தது. அங்கு இருவரும் உட்கார்ந்து பேசிய பாறைகளைப் பார்த்த போது அவருடைய நெஞ்சம் குமுறத் தொடங்கியது.

அருவி தடாகத்தில் விழும் இடத்தில் தண்ணீர் சுற்றிச் சுழன்று அலை மோதிக் கலங்கிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்துக் கொண்டிருந்த சிவசங்கரனுக்கு அந்தத் தடாகத்தில் தன் மனநிலை பிரதிபலிப்பதாகத் தோன்றியது. 'இந்தத் தடாகத்தைப் போலவே என் மனமும் கலங்குகிறது' என்று அவர் நினைத்துக் கொண்டார்.

'இதே அருவிக் கரையில் எத்தனை இன்பமான வார்த்தைகளைக் கூறினாள் மாதவி? அடாடா! அந்த வார்த்தைகள் என் மனத்துக்கு எவ்வளவு இதமாக இருந்தன. யார் யாரோ சொல்லியும்—ஏன், என்னுடைய அருமைத் தாயார் என்னை எவ்வளவோ வற்புறுத்தியும் என் மனத்தை மாற்ற முடியவில்லை. அவர்களுடைய வார்த்தைகள் என் லட்சியத்தை மாற்றுவதற்குப் பதிலாக மேலும் உறுதிப்படுத்தின. ஆனால்

மாதவியைப் பார்த்தவுடனேயே என்னை அறியாமல் என் மனம் மாறியது. அவளுடைய தேனினும் இனிய வார்த்தைகள் என் பிரமச்சரிய விரதத்தைத் தகர்த்து எறிந்து விட்டன. நான் கல்யாணம் செய்து கொள்வது என்று தீர்மானம் செய்து கொண்டேன். அவளை ஒரு நாள் பார்க்காவிட்டால் நான் எப்படியெல்லாம் வேதனைப்பட்டிருக்கிறேன். அவள் அமுத மொழிகளைக் கேட்பதற்காக நான் எத்தனை முறை அவளைத் தேடிச் சென்றிருக்கிறேன்? என் மனம் நோகாமல், நான் திருப்தியுடன் இருக்க வேண்டும் என்பதற்காகவே என்னிடம் இன்மொழி பேசி வந்த மாதவியா இன்று இவ்வளவு துச்சமாகப் பேசிவிட்டாள்? அவள் இத்தனை நாள் என்னிடம் கூறியது எல்லாம்



பொய்! அவள் பேசியதெல்லாம் பகல் வேஷம்!'

சிறிது நேரம் சிந்தனை சக்தியை இழந்து விட்டமாதிரி அசையாமல் உட்கார்ந்திருந்தார் சிவசங்கரன். பின்னர் பைத்தியம் பிடித்தவரைப் போல அருவியைப்பார்த்து,' அருவியே! மாதவி எப்படி மாறிவிட்டாள் பார்த்தாயா? மாதவி இங்கே சொன்னவற்றையெல்லாம் நீ கேட்டிருக்கிறாயே. அந்த மாதவி இன்று என்னிடம் என்ன சொன்னாள் தெரியுமா? 'வெளியே போய் விடுங்கள்' என்று சொன்னாள். 'முகத்தில் விழிக்காவிட்டால் கூடப் பரவாயில்லை. போய் விடுங்கள்' என்று சொல்லி அவமானப் படுத்தினாள். அதற்கு யாரும் சாட்சி இல்லையே. அவளுக்கு மனம் என்று ஒன்று இருந்தால் அது சாட்சியாக இருந்து அவளை உறுத்தாதா?' என்று வாய்விட்டுப் புலம்பினார்.

தாம் வாய் விட்டுப் புலம்புவதை உணர்ந்ததும் அவரே திடுக்கிட்டுப் போனார். 'எனக்கு என்ன ஆகி விட்டது? சித்தப் பிரமை பிடித்து விட்டதா, என்ன?' என்று தம்மைத் தாமே கேட்டுக் கொண்டார். கருணாகரன் கூறிய அபாண்டமான பழி நினைவுக்கு வந்தது. அதை நினைத்தபோதுதான் அவருடைய தேகமெல்லாம்பற்றி எரிவதுபோல இருந்தது. 'அதைக் கேட்டுக்கொண்டு மாதவி பேசாமல் இருந்தாளே. அவள் ஒரு மனிதப் பிறவியா? என்னைப் பற்றித் தெரியாதவளா? முகத்தில் விழிக்காதே என்று கருணாகரனைப் பார்த்தல்லவா சொல்லியிருக்க வேண்டும்? கண்களைத் திறந்து கொண்டே நான் படுகுழியில் விழுந்தேனே! என் முட்டாள்தனத்தைத் தான் நோக வேண்டும். எத்தனை பேருக்குப் புத்தி சொன்னேன்? கடைசியில் நானே ஒரு பெண்ணிடம் நன்றாக மாட்டிக் கொண்டு அவஸ்தைப்படுகிறேன்' என்று நினைத்துத் துயரப்பட்டார்.

மாதவி 'வெளியே போய் விடுங்கள்' என்று கூறியது அவரை அவ்வளவு தூரம் கலங்கச் செய்து விட்டது.

அவரையும் அறியாமல் அவருடைய கண்களிலிருந்து சில கண்ணீர்த் துளிகள் கசிந்தன. தான் அதற்கு முன்பு கண்ணீர் விட்ட எந்தச் சந்தர்ப்பமும் அவருக்கு ஞாபகம் இல்லை. இன்று ஒரு பெண்ணுக்காகத் தாம் கண் கலங்குவதைக் கண்டு அவருக்குச் சிரிப்பு வந்தது.

இவ்வாறு குழப்பமான எண்ணங்களுடன் அவர் அருவிக்கரையில் உட்கார்ந்திருந்தபடியால் அச்சுதன் மலைமீது ஏறி வருவதை அவர் கவனிக்கவில்லை. அவர் குறிப்பிட்ட எதையுமே பார்க்காமல் எங்கேயோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அந்தப் பார்வையில் உயிர்க்களையே இல்லை.

அச்சுதன் மிகவும் சமீபத்தில் வந்து நின்று, ''மிஸ்டர் சிவசங்கரன்!'' என்று கூப்பிட்ட பிறகுதான் அவருக்குச் சுய உணர்வு வந்தது.

அவருக்கு யாருடனும் அப்போது பேச விருப்பமிருக்கவில்லை. ஆகையால் யாரென்று திரும்பிப் பார்த்து விட்டு மறுபடியும் தம்முடைய முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

அச்சுதன் சிவசங்கரனுக்கு எதிரே வந்து நின்றுகொண்டான். அவன் கையிலிருந்த துப்பாக்கி அவனும் வேட்டையாடும் நோக்கத்துடன் தான் புறப்பட்டிருக்கலாம் என்று அறிவித்தது.

''மிஸ்டர், சிவசங்கரன்! மலைச்சாரல் பங்களாவில் நடந்ததையெல்லாம் இப்போதுதான்கேள்விப்பட்டேன்..

கருணாகரன் இவ்வளவு மோசமாக நடந்து கொள்வானென்று நான் எதிர் பார்க்கவே இல்லை. அதற்காக நான் மிகவும் வருந்துகிறேன்'' என்று பேச்சை ஆரம்பித்தான் அச்சுதன்.

''ரொம்ப அழகாக இருக்கிறதே. நீங்கள் எதற்காக வருந்த வேண்டும்?'' என்றார் சிவசங்கரன்.

''உங்கள் மனம் ஏற்கனவே புண் பட்டுப் போயிருக்கும். இப்போது நான் பேசுவது நியாயம் அல்லதான். ஆனாலும் ஒரு முக்கியமான விஷயத்தைத் தங்களிடம் சொல்லித்தான் ஆக வேண்டும்'' என்றான் அச்சுதன்.

''அப்படிப்பட்ட முக்கியமான விஷயம் என்னவோ?''

''கருணாகரனின் மனத்தில் யாரோ வேண்டுமென்றே இவ்வாறு விஷ விதையைத் தூவியிருக்கிறார்கள்! சில நாட்களுக்கு முன்பு நீங்கள் என் வீட்டுக்கு வந்து விருந்து சாப்பிட்டீர்கள் அல்லவா? அன்று நாம் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தோம். அதை வைத்துக் கொண்டு யாரோ வேண்டுமென்றே கருணாகரனிடம் இவ்வாறு கதை கட்டியிருக்கிறார்கள். அது யார் என்பதை மாத்திரம் கண்டு பிடித்தோமானால் நல்லது'' என்றான் அச்சுதன்.

''யாராக இருந்தால் என்ன? அதைக் கண்டு பிடித்து நாம் என்ன செய்யப் போகிறோம்? என்ன நேர வேண்டுமோ அது நடந்து விட்டது. இனி எது எப்படிப் போனாலும் எனக்கு அக்கறை இல்லை'' என்று மிகுந்த வெறுப்புடன் கூறினார் சிவசங்கரன்.

''அப்படிச் சொல்லாதீர்கள். அதைத் தெரிந்து கொண்டால் நம் இருவருக்குமே பயன் உண்டு. நீங்கள் லஞ்சம் வாங்கியதாகவும் நாங்கள் கொடுத்ததாகவும் இருக்கும் அவப் பெயரை நீக்கிக் கொள்ளலாம் அல்லவா? இந்த விஷமம் பண்ணியது யாரென்று கண்டு பிடிப்பது என் பொறுப்பு. அது கிடக்கட்டும். நான் உங்களிடம் சொல்ல வேண்டிய விஷயத்தை முதலில் சொல்லி விடுகிறேன்'' என்றான் அச்சுதன்.

''சீக்கிரம் சொல்லுங்கள்.''

''எனக்குக் கருணாகரனிடம் பகை கிடையாது. என் தந்தை அவனுக்கு அநீதி இழைத்திருக்கலாம். அவர்களுக்கு உதவி செய்யாமல் இருந்திருக்கலாம். ஆனால் அதற்கு நான் உடந்தையாக இருக்கவில்லை. என் மீது அவன் கோபித்துக் கொள்ளக் காரணமே இல்லை.''

''இது தான் எனக்குத் தெரியுமே. தெரிந்ததையே சொல்ல வேண்டாம்.''

''இல்லை. அதைப் பற்றிய விஷயம் இல்லை. கருணாகரனின் முன்கோபம் அவனை அடிக்கடி பல தொல்லைகளுக்கு உள்ளாக்குகிறது. அவனுடைய கோபத்தை எவ்வளவு நாட்கள் தான் தொழிலாளர்கள் பொறுத்துக் கொள்வார்கள்?'' என்று கூறினான் அச்சுதன்.

''அதுதான் தெரிகிறதே.''

''அலுத்துக் கொள்ளாதீர்கள், மிஸ்டர் சிவசங்கரன்! விஷயத்துக்கு வருகிறேன். விஜயராகவனுக்குத் தம் மகள் ஜயந்தியைக் கருணாகரனுக்குக் கல்யாணம் செய்து கொடுத்துத் தம்முடனேயே வைத்துக் கொள்ள வேண்டுமென்று ஆசை இருந்தது.''

''நீங்கள் இன்னும் புதிதாக ஒன்றும் சொல்லவில்லை'' என்று பொறுமை இழந்து கூறினார் சிவசங்கரன்.

அதை லட்சியம் செய்யாமல் அச்சுதன் தொடர்ந்தான்.

''உங்களுக்குத்தான் தெரியுமே. அதை நான் கெடுத்து விடுவேனோ என்று கூடக் கருணாகரன் பயந்தான். என் தந்தையுடன் நான் தேங்காய் வியாபாரம் சம்பந்தமாக அங்கே சில சமயம் போயிருக்கிறேன். என் தந்தைக்கு ஜயந்தியை எனக்கு விவாகம் செய்து வைக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. ஆனால் எந்தக் கணம் கருணாகரனைப் பற்றி நான் தெரிந்து கொண்டேனோ அது முதல் நான் அவர்கள் வீட்டுக்குப் போவதில்லை. வீண் மனஸ்தாபம் வளர இடம் கொடுக்கக்கூடாதென்று கருதியே நான் விஜயராகவனுடன் அதிகத் தொடர்பு வைத்துக் கொள்ளவில்லை. அவருடைய உறவினரான கோவிந்தன் என்னிடம் வலுவில் வந்து சிநேகம் செய்து கொண்டார். அதை நான்



அருள் வாக்கு

செலவை எல்லோரும் குறைத்துக் கொள்ள வேண்டும். எனக்கு மூன்று விதத்தில் குறைக்கலாம் என்று தோன்றுகிறது. வரதக்ஷிணை வாங்கு வதைக் குறைத்துக் கொள்ள வேண்டும். எல்லோரும், ஸ்திரீகள் உள்பட கதம்பமான மலிந்த வஸ்திரம் தான் வாங்குவது என்று வைத்துக் கொள்ள வேண்டும். காலையில் கோதுமைக் கஞ்சிதான் சாப்பிடுகிறதென்று வைத்துக் கொள்ள வேண்டும்; அல்லது மோர் சாப்பிடலாம். இப்படிச் செய்து வந்தால் வீண் ஆடம்பரம் போகும்.

— ஸ்ரீ சங்கராச்சாரியார், காமகோடிபீடம்

எப்படித் தடுக்க முடியும்? இதனால் வேறு கருணாகரனுக்கு என்மீது ஆத்திரம் அதிகமாகி யிருக்கிறது.

"விஜயராகவனுக்குச் சில நாட்களாகவே கருணாகரனின் நடத்தை பிடிக்காமல் போய் விட்டது. அவனுக்குத் தம் பெண்ணைக் கொடுப்பதும், ஆலையை அவனிடம் ஒப்படைப்பதும் முடியாத காரியம் என்று தீர்மானித்து விட்டார்."

"ஏதாவது உளற வேண்டாம். அவர் விவாகத்துக்கு நாள் பார்த்துக் கொண்டுதான் இருந்தார். இந்த விடுமுறையில் இரண்டு கல்யாணத்தையும் சேர்த்து நடத்தி விடலாமா என்று சில நாட்களுக்கு முன்புதான் என்னிடம் கேட்டார். இந்த வழக்கு மாத்திரம் முளைத்திருக்கா விட்டால் எல்லாம் வேறு விதமாக நடந்திருக்கும்.'

சிவசங்கரனுக்கு அதைக் கூறும்போதே துயரம் கவிந்து கொண்டது. இந்த விடுமுறையில் விவாகத்தை முடித்து, மாதவியை அழைத்துக் கொண்டு உல்லாசப் பிரயாணம் செய்ய வேண்டுமென்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்தார். தம் அன்னையிடம் கூடக் குறிப்பாகத் தெரிவித்திருந்தார். இப்போது விவாகம் நடக்கவே வழி யில்லாமல் போய் விட்டது. இனிமேல் மாதவி விரும்பினாலும் தாம் அவளை மணப்பது என்பது சாத்தியமா? 'வஞ்சகி. என்ன பேச்சு பேசினான்?'

திடீரென்று அவருக்கு அச்சுதன் மீது கோபம் வந்தது. இந்த மனிதனால் தானே இவ்வளவு சங்கடம்? இவனுடன் நான் பழகியிருக்கா விட்டால் இத்தனை துன்பம் வந்திருக்காது என்று நினைத்துக் கொண்டே எழுந்தார்.

"மிஸ்டர் சிவசங்கரன்! நீங்கள் இவ்வளவு பொறுமை இல்லாதவரென்று நான் நினைக்கவே இல்லை. முழுவதையும் சொல்லி விடுகிறேன். விஜயராகவனுக்குத் தம் மகள் ஜயந்தியை உங்களுக்கு விவாகம் செய்து கொடுத்து விட வேண்டும் என்று தோன்றி விட்டது. உங்களிடம் இதைக் கூடிய சீக்கிரம் பிரஸ்தாபிப்பார் என்று நினைக்கிறேன். இனிமேல் கருணாகரன் ஆலையில் வேலை செய்வது முடியாத காரியம் அல்லவா?"

அத்தனை கோபத்திலும் சிவசங்கரனுக்குச் சிரிப்பு வந்தது.

"அச்சுதன்! இதை விட வேடிக்கையாக, கற்பனையாக உங்களால் கதை சொல்ல முடியாதா? கருணாகரனுக்குப் பதிலாக ஆலையில் மானேஜராக நான் இருப்பேன் என்று விஜயராகவன் எதிர் பார்க்கிறாரா?"

"இல்லை! ஜயந்தியை நீங்கள் மணம் செய்து கொண்டு விட்டால் அவருக்கு மன நிம்மதி ஏற்படும். ஒரு நல்ல மனிதரிடம் பெண்ணை ஒப்படைத்தோம் என்ற திருப்தி இருக்கும். ஆலை ஜயந்தியின் பெயரில் இருந்து விட்டுப் போகிறது. ஆலையின் நிர்வாகத்தைக் கோவிந்தன் கவனித்துக் கொள்வார்."

"பேஷ்! நல்ல யோசனை! இதையெல்லாம் யார் உம்மிடம் சொன்னது?"

"கோவிந்தனே சொன்னார்!"

"அப்படியா? ரொம்ப சரி அச்சுதன்! உமக்கு நான் ஒரு விஷயம் சொல்லுகிறேன். என்னைப் பற்றிய விஷயமாதலால் தைரியமாகச் சொல்லுகிறேன். நான் நேற்று வரையில் விவாகம் செய்து கொள்ள வேண்டுமென்று தான் நினைத்துக் கொண்டிருந்தேன். மாதவி எப்போது என்னை நிராகரித்து விட்டாளோ அப்போதே எனக்கு வாழ்வில் இருந்த ருசி போய் விட்டது. மாதவியை நினைத்த மனத்தால் இன்னொருத்தியை நினைக்கக் கூட என்னால் முடியாது. மேலும் இந்த மாதிரி கதைகளை யெல்லாம் நீங்கள் நம்ப வேண்டாம். இதை நீங்கள் நம்புவதாக இருந்தால், நீங்கள் எனக்கு லஞ்சம் கொடுத்த கதையையும் நம்பத் தான் வேண்டும். இந்த அர்த்தமில்லாத கதையை இவ்வளவு சிரமப்பட்டு மலையேறி வந்து என்னிடம் கூறி யிருக்கவே வேண்டாம். யாருடனும் பேசும் மனோ நிலையில் நான் இல்லை. தயவு செய்து என்னுடன் நீங்கள் வரவேண்டாம். என்னைத் தனியே விட்டு விடுங்கள். நான் சற்று நேரம் அலைந்து திரிந்து விட்டுப் பிறகு வந்து சேருகிறேன்" என்று கூறி விட்டு மலைப்பாதையில் ஏறத் தொடங்கினார் சிவசங்கரன்.

அச்சுதன் தன் துப்பாக்கியை ஊன்றிக் கொண்டு மலைப்பாதை வழியே கீழே இறங்க ஆரம்பித்தான். (தொடரும்)

அன்பின் ஆணையில்...!

வீராணத்து ஏரியின் நீர்ப்பரப்பின்மேல் உலகத்து அமைதியெல்லாம் வந்து குடிகொண்டாற் போன்றிருந்தது. கண்ணுக்கு எட்டிய வரையில் சமுத்திரத்தைப் பார்க்கிற மாதிரி ஒரே நீர்ப்படலம். வெள்ளிப் பாளங்களும், பனிப் படலங்களும் சேர்ந்து நிரம்பிக் கிடந்தாற்போல் ஒரே வெண்மை மயம்! இயற்கை விளைவித்த இந்தப் பேரழகு தமக்கே உரியது என்று கொண்டாடி அநுபவிப்பது போல் மீன் கூட்டங்கள் இங்கும் அங்கும் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தன.

ஏரிக்கரையின் இறக்கத்திலும் இரண்டு ஜீவன்கள் பேசிச் சிரித்துக் கொண்டு விளையாடாமல் விளையாடிக் கொண்டிருந்தன.

"இந்த வெத்திலையைக் கிள்ளுகிறதே ஒரு அழகு. இதை விசிறி மாதிரி கவுளி கவுளியா எப்படியம்மா நீ அடுக்கி வைக்கிறே? ஒருவேளை உன்மாதிரி அழகா யிருக்கிறவர்களாலேதான் இப்படியெல்லாம் செய்ய முடியுமா?" என்று வியப்புடன் கேட்டான் முத்துக்குமரன்.

"வெத்திலை கிள்ளி அடுக்க அழகும் வேண்டாம்; ஒண்ணும் வேண்டாம். அறிவும் அநுபவமும் இருந்தாப் போதும்" என்றாள் ராஜாயி.

அவளும் அவனும் கொஞ்ச காலமாக ஜோடி சேர்ந்திருந்தார்கள். அவர்கள் தினம் தவறாமல், வேளை தவறாமல் அந்த வெற்றிலைக் கொடிக்காலுள் தான் சந்திப்பது வழக்கம். வெற்றிலைக் கொடிக்கால் ஒரு அழகிய நந்தவனம் போல்தான் அவர்களுக்குத் தோன்றியது. நெடுகிலும் ஆத்திக் கீரைப் போத்துக்கள் உயர்ந்து அடர்ந்து இணைந்து நின்றன. அவற்றைப் பற்றியபடி வெற்றிலைக் கொடிகள் படர்ந்து 'தள தள' வென்றிருந்த காட்சி மிக அழகாயிருந்தது.

அவர்கள் பேச்சு தொடர்ந்தது.

"அப்படியானால் எனக்கு அறிவு இல்லை என்று சொல்கிறாயாக்கும்!" என்றான் முத்துக்குமரன்.

"அப்படித் தீர்மானமாகச் சொன்னேனா? அறிவும் அநுபவமும் வேணுமென்று சொன்னேன். இந்தத் தொழிலிலே உங்களுக்கு அதெல்லாம் இல்லாது போனால் வேறே எதிலுமே இல்லை என்று அர்த்தமாகிவிடுமா? உங்களுடைய வாய்க்கால், மதகு, ரோடு வேலைகளிலே நீங்கள்தான் சிங்கமாயிற்றே! இதிலே இல்லாமல் போனால் என்ன? அறிவும் அநுபவமும் இல்லை என்றால் புத்தி மூளை



என்று அர்த்தம் எடுத்துக் கொள்ளக் கூடாது. என்னவோ எனக்கு அவ்வளவுதான் பேச வரும்; இனிமேல் நீங்கள் இங்கே வரவும் வேண்டாம். நாம் சந்திக்கவும் வேண்டாம்!'' என்று சிறிது பொய்க் கோபத்துடன் வெற்றிலைக் கௌளிகள் அடங்கிய கூடையுடன் கிளம்பினாள் ராஜாயி. முத்துக்குமரன் இரு கைகளையும் நீட்டி வழியை மறித்தான்.

''போகாதே! நான் தப்பாக எடுத்துக் கொள்ளவில்லை. நீயும் கண்ணீர்த் தாரையை வரவழைத்துக் கொண்டு ஓட வேண்டாம்!'' என்றான் முத்துக்குமரன்.

ராஜாயி முகத்தில் தாரகை ஒளி போல் ஒரு புன்னகை தோன்றியது.


* * *

வீராணத்து ஏரி அந்தப் பிராந்தியத்துக்கு ஒரு கேந்திரமாக விளங்கியது. சர்க்கார் மராமத்து இலாக்காவின் நிர்வாகத்தில் இருந்தது அது. ஏராளமான வயல்கள், தோட்டங்கள், இதர பயிர் பச்சைகளுக்கும் குடி தண்ணீருக்கும் பெருவாரியாக ஏரித்தண்ணீர் உபயோகப்பட்டது.

முத்துக்குமரன் மேற்படி இலாகாவில் வீராணத்து ஏரி ஸப்-டிவிஷனில் ஒரு லஸ்கரா யிருந்தான். ஆனால், நிரந்தரமாக நியமனம் பெறாமல், லீவு எடுத்துச் செல்லும் லஸ்கர்களுக்கெல்லாம் அவ்வப்போது பதில் ஆளாக வேலை பார்த்து வந்தான்.

லஸ்கர்களின் தொழில் ஏரி மதகுகளையெல்லாம் காவந்து பண்ணிக் கொண்டும், மதகின் முக்கியமான பாகங்களுக்கு எண்ணெய் போட்டுத் துடைத்தும், ஏரிக்கரையை அவ்வப்போது சரிப்படுத்திக் கொண்டும் இருக்க வேண்டியதாகும். முக்கியமான வேலை ஏரியின் வடிகால் மதகான கலுங்கில்தான். ஏரி நிரம்பி வழிகிற சமயம் மேற்படி கலுங்கைத் திறந்துவிட்டு விடுவார்கள். தண்ணீர் பிரளயம் போல் பயங்கரக் காட்சியுடன் கலுங்கில் வழிந்து ஓடும்.

கலுங்கில் பதினாறு ஷட்டர்கள் போட்டு ஏரியின் வாயை அடைத்திருந்தார்கள். ஒவ்வொன்றும் பெரிய பெரிய ஷட்டர்கள். ஷட்டர்களுக்கு மேலே ஏரியின் வாயைக் கடந்து செல்ல ஒரு ஒற்றையடிப் பாதை அளவுக்குப் பாலம் அமைக்கப்பட்டிருந்தது. முக்கியமாக அந்தப் பாலம், ஷட்டர்களைத் தூக்கவும் இறக்கவும் அமைந்துள்ள இரும்புச் சுழற் கம்பிகளைச் சுழற்றிகளால் சுழற்றுவதற்காக லஸ்கர்கள் நடந்து செல்லத்தான் போடப் பட்டிருந்தது. வடிகாலில் வெள்ளம் போகிற சமயங்களில்





தரங்கம்பாடியில் ஜூன் மாதம் 18ந் தேதி ஆறுவது உலக இளைஞர் கலைத் திருவிழா விமரிசையாக நடந்தது. அந்த வைபவத்தில் குமாரி சாந்தி அபாரமாகப் பரதநாட்டிய மாடிச் சபையோரை மகிழ்வித்தார். குமாரி சாந்தியின் திறமையைப் பாராட்டித் திரு ரஞ்சன் தங்கப் பதக்கமும், பாராட்டு இதழும் வழங்கும் காட்சியைப் படத்தில் காணலாம்.

அந்தப் பாலத்தின் மத்தியில் நின்று பார்த்தால் ஒரே பயங்கரமாயிருக்கும். ஒரு புறம் திரும்பினால் எதிரே கொந்தளித்துக் கொண்டு கிடக்கும் ஏரியின் விரிந்த — முடிவே தெரியாத — தோற்றம்; பின்புறம் திரும்பினால் வடிகாலில் புரண்டு புரண்டு 'ஹோ' என்ற ஓசையுடன் செல்லும் வெள்ளப் பெருக்கின் தோற்றம்; காலுக்கும் கீழே பாலத்தின் அடியில் ஷட்டர்களுக்குக் கீழாகத் தண்ணீர் வடிகிற சத்தம் பயங்கரமாகக் கேட்கும்.

இப்படிப்பட்ட கலுங்கலே நிர்வகிக்க இலாகா சூபர்வைஸர் ஒருவரும் லஸ்கர்கள் பன்னிரண்டு பேரும் இருந்தனர்.

முத்துக்குமரன் அந்தப் பன்னிருவரில் ஒருவன். அமிருதலிங்கமும் ஒருவன். இந்த அமிருதலிங்கத்தின் பேத்திதான் ராஜாயி. அவளுக்குத் தாயார் தகப்பனார் கிடையாது. பாட்டனுக்குச் சிசுருஷை செய்து கொண்டு இருந்தாள். முத்துக்குமரனை அமிருதலிங்கம் தான் வேலைக்குக் கொணர்ந்தவன். ஏதோ கிடைக்கிற சர்க்கார் சம்பளத்தில் பசியில்லாமல் சாப்பிட்டுப் போகட்டும் என்றுதான் முத்துக்குமரனை அவன் வேலைக்குக் கொண்டு வந்து அமர்த்தினான். அவன் தாற்காலிக ஊழியனாதலால் மற்றவர்களைப் போல் அவனுக்கு லஸ்கர் வரிசைகளில் சர்க்கார் விடுதி கொடுக்கப்படவில்லை. அமிருதலிங்கம் அவனைத் தன்னுடனே தன் வீட்டிலேயே இருக்கச் சொல்லி விட்டான்.

தன்னை வேலைக்கு அமர்த்தியதையும், தன் வீட்டிலேயே அமிருதலிங்கம் தன்னை இருக்கச் சொன்னதையும் முத்துக்குமரன் வேறு விதமாகக் கற்பனை செய்து கொண்டு விட்டான். ராஜாயியைக் கிழவன் தனக்குக் கல்யாணம் செய்து கொடுத்துவிடப் போகிறான் என்று எண்ணிக் கொண்டு விட்டான் அவன்.

ராஜாயி ராஜாத்தி மாதிரி இருந்தாள். கிராமியச் சூழ்நிலையில் வளர்ந்த 'மினு மினு' வென்ற சரீரம்.

முத்துக்குமரன் ராஜாயியைக் கண்டு தேனில் விழுந்த ஈ மாதிரி மாறிவிட்டான்.

ராஜாயி தனது மூக்கில் ஒரு வெள்ளை முத்து அணிந்திருந்தாள். அது அவள் அழகை எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தது.

"ஏ பொன்னு! .... உன்னை நான் என்னன்னு கூப்பிடறது? .... அந்த முத்து இருக்கிறதே. அது உனக்கு எவ்வளவு அழகைக் கொடுக்கிறது, தெரியுமா? நீ பேசும் போதும் சிரிக்கும்போதும் அந்த முத்து எப்படிக் கிடந்து ஆடுது, தெரியுமா?"

"இந்த முத்து கிடந்து ஆடுறாப்போலவா?"

"எப்படி வேணுமானாலும் வைச்சுக்கோயேன்....உன் முகமே ரொம்ப அழகு, ராஜாயி! அதுவும் நீ சிரிக்கும்போது கன்னத்திலே குழி விழுது பாரு! ...."

"பார்க்கிறேன், பார்க்கிறேன்! உனக்கும் ஒரு குழி வெட்டிவிட்டு அப்புறம் பார்க்கிறேன்!" என்றாள் ராஜாயி.

இப்படி அவர்கள் ஆரம்பித்த நட்பும் பேச்சும் வெற்றிலைக் கொடிக்காலில் துளிர் வெற்றிலை துளிர்க்கிறாற் போல் துளிர்த்து நிரந்தரமாகப் படர ஆரம்பித்து விட்டன.

* * *

முத்துக்குமரன் ராஜாயியுடன் வெற்றிலைக் கொடிக்காலில் சுற்றுவதைக் கேள்விப்பட்டு அமிருதலிங்கம் அவனைக் கண்டித்தான்.

"ஏதோ உன் வயிற்றைக் கழுவிக்க ஒரு வேலையைப் பார்த்துக் கொடுத்தேன். அது வரைக்கும் பார்த்துக்கிட்டு அக்கடான்னு இல்லாமே இந்தமாதிரி விவகாரமெல்லாம் கூட வைச்சுக்கிட்டயா, தம்பி? நாளையிலே இருந்து வீட்டுக்கு வருகிறதை விட்டு விடு. ராஜாயி கூடப் பழகுகிறதையும் நிறுத்திக் கொள். அதெல்லாம் வீண் வேலே!" என்று அடக்கமாயும் அளவுடனும், அதே சமயம் அழுத்தமாகவும் அமிருதலிங்கம் சொல்லிவிட்டான்.

"ஒரு முகூர்த்தம் பார்த்துக் கல்யாணத்தை நடத்திப்புடலாமே, மாமா!" என்று 'பளி' ரென்று கேட்டான் முத்துக் குமரன்.

"யாருக்கும் யாருக்கும்?"

"இது என்ன கேள்வி! எனக்கும் உங்க பேத்தி ராஜாயிக்கும்தான்!"


"அப்படி நீ தீர்மானம் பண்ணியிருக்கிறயாக்கும்! அது பாதிக் கல்யாணம்தான். நான் அப்படித் தீர்மானம் பண்ணவில்லையே! ஒண்டிக் கட்டை நீ... உனக்குப் போய்...."

"கல்யாணத்துக்கு முந்தி எல்லாரும் ஒண்டிக் கட்டையாகத்தானே மாமா இருப்பாங்க? நாளைக்குக் கல்யாணம் முடிந்தால் நாம் எல்லாரும் சேர்ந்து குடித்தனம் இருக்கலாம்; நீங்க, நான், ராஜாயி... கொஞ்ச காலம் போனால் குழந்தை குட்டி பிறக்காதா...?"

சிறு குழந்தையும் அறியும்...

ரின்ஸோ அதிவெண்மையாக

வெளுக்கும் என்பதை!



சலவைக்கு ரின்ஸோ உபயோகிக்கும் தாய்மார்களின் எண்ணிக்கை மேன்மேலும் பெருகி வருவதன் காரணம் ரின்ஸோ வெள்ளைத் துணிகளை அதிவெண்மையாகவும், வர்ணத் துணிகளை அதிகப் பிரகாசத்துடனும் வெளுப்பதனால்தான்.

சலவைக்கு ரின்ஸோ உபயோகியுங்கள். உங்கள் குழந்தைகளின் ஆடைகள் உள்பட, குடும்பத்தின் சகல துணிகளையும் அற்புதமான சுத்தத்தோடு சலவை செய்வதைக் காண்பீர்கள். ரின்ஸோவின் விறுவிறுப்பான நுரை அழுக்குகளை அறவே அகற்றிவிடுகிறது — அடித்துத் துவைக்கவோ, அழுத்தித் தேய்க்கவோ வேண்டியதில்லை!

. . . உங்கள் வேலையை
இலகுவாக்கும் அற்புத
சோப் பவுடர்



R. 13-50 TM

அமிருதலிங்கம் சிரித்தான். ஆனால் அவன் மனம் மாறவில்லை.

"இப்போ வாழ்க்கையிலே என்ன பொறுப்பு தம்பி உனக்கு இருக்க முடியும்? வேலையாவது காயமாகணும்!..."

"வேலை காயமாகிறதா! சரியாப்போச்சு; வேலை மிஷினிலே உடம்பிலேதான் காயம்படுது... உங்களமாதிரி அறுபது வயசுக்காரர்களெல்லாம் வேலை பார்க்கிறவரையில் எனக்கு வேலை எங்கே மாமா காயமாகும்?" என்று வினாவினான் முத்துக்குமரன்.

பிறகு அவன் என்னென்னமோ சொல்லி வாதாடிப் பார்த்தான். அமிருதலிங்கம் அந்தக் கல்யாணத்துக்கு இசையவில்லை. அவன் வேறு யாரை மனத்தில் குறித்து வைத்திருந்தானோ? முத்துக்குமரன் அவர்கள் வாழ்க்கையில் நடுவில் வந்தவன்தானே?

கடைசியில் முத்துக்குமரன் அமிருதலிங்கத்தின் முன்னாலேயே ஒரு சபதம் செய்தான்:

"மாமா! நீங்க என்னவோ நினைக்கிறீங்க: என் உயிர் உடம்பில் இருக்கிறவரைக்கும் ராஜாயியை இன்னொருத்தன் கட்ட விடமாட்டேன். இது மாத்திரம் நிச்சயம்!"

முத்துக்குமரன் சபதம் செய்த வெள்ளிக்கிழமைக்கு அடுத்த வெள்ளிக்கிழமையன்று இயற்கையன்னை அந்தப் பிராந்தியத்தில் விளையாடத் தொடங்கி விட்டாள்! அதிகாலையில் மப்பும் மந்தாரமுமாய் இருந்தது! பிறகு மழை பிடித்துக் கொண்டு கொட்டத் தொடங்கியது. மாலையில் பெரு மழையும் காற்றுமாய்ச் சேர்ந்து அடித்தது. ஏரி சமுத்திரம் போல் பொங்கத் தொடங்கி விட்டது.

வடிகாலை அன்று காலையிலேயே திறந்து விடச் சொல்லி சூபர்வைஸர் உத்தரவு பிறப்பித்து விட்டார். ஏற்கெனவே ஷட்டர் இடுக்குகள் வழியாகக் கசிந்த நீரே பெரிய வாய்க்கால் போல வடிகாலில் பெருகத் தொடங்கியது. ஷட்டர்களைத் தூக்கியவுடன் வடிகால் காட்டாறுபோல் கட்டறுத்துக் கொண்டு பெருகியது.

அன்றிரவு முத்துக்குமரன் காரியாலயத்துக்குப் பின்னாலிருந்த டீக் கடையில் இரண்டு பொறைகளைத் தின்று விட்டு, மழைக்கு இதமாக ஒரு சப் டீயையும் குடித்துவிட்டுத் தன் இருப்பிடத்தில் வந்து படுத்துக் கொண்டான். அமிருதலிங்கம் தனது வீட்டை விட்டு அவனை வெளியே போகச் சொன்ன பிறகு முத்துக்குமரன் ஒரு மோட்டார் ஷெட்டில் தன் ஜாகையை வைத்துக் கொண்டான்.

அந்த ஷெட் முத்துக்குமரனுக்கு இப்போது பெரிய மாளிகையாக இருந்தது. அதில் படுத்துக் கொண்டு ராஜாயியை நினைத்துக் கொண்டான். அவளது மூக்கு மூத்து அசைந்தபடி அவள் சிரித்துக் கொண்டு பேசுகிறாப் போலவும், தன்னை எப்படியாவது ஏற்றுக் கொள்ளும்படி அவள் கெஞ்சுவது போலவும் அவனுக்குத் தோன்றியது.

அதே சமயம், "முத்து!" என்று ஒரு குரல் வெளியிலிருந்து கேட்டது.

"யாரது?" என்று போர்வையை உதறிப் போட்டு விட்டுச் சிங்கம்போல் வெளியில் வந்தான் முத்துக்குமரன்.

வெளியில் மழையில் நனைந்தபடி கிழவன் அமிருதலிங்கம் நின்று கொண்டிருந்தான்.

"என்ன, மாமா?" என்றான் முத்துக்குமரன்.

"தம்பி, முத்து! உன்னை உத்தேசம் பண்ணி எனக்கு ஒரு ஒத்தாசை பண்ண வேணும்! செய்ய முடியுமா?" என்று கேட்டான் அமிருதலிங்கம்.

"தாராளமாகச் செய்கிறேன், மாமா! உங்களைப் போல நானும் பிடிவாதம் பிடிக்கிறவன் இல்லை. பிடிச்ச முயலுக்கு மூணே கால் என்று சொல்ல மாட்டேன்!" என்றான் முத்துக்குமரன்.

"அது ஒரு பெரிய ஒத்தாசை! எனக்கு இன்றைக்கு ஆபீஸிலே ராத்திரி வேலை. என் முறை இன்றைக்குத்தான்! ராத்திரி கலுங்கல் ஷட்டர்கள் தூக்கி இறக்கும்படியாயிருக்கும். ஏரி இருக்கிற நிலைமையைப் பார்த்தால் ஊரே வெள்ளக்காடாகி விடும் போலத் தெரியுது. இந்தத் தள்ளாத வயசிலே என்னாலே ஷட்டர் தூக்கி இறக்க முடியாது. இதை வெளிப்படையாகச் சொன்னால் எனக்கு உத்தியோகம் போயிடும்! சர்க்காரு உத்தியோகம், பாரு! அதனாலே எனக்காக நீ கொஞ்சம் ராத்திரி வேலை பார்க்கணும்!" என்றான் அமிருதலிங்கம்.

"சூபர்வைஸர் ஒத்துக்குவாரா மாமா?" என்றான் முத்துக்குமரன்

"அவருக்குத் தெரிய வேண்டாம்! நான் போய் மருந்துச் சாமான்களையெல்லாம் வாங்கி வந்துடறேன். அப்புறம் அவர் என்னைத்தைக் கண்டாரு! யார் வேலை பார்த்தாங்க என்று அவருக்கு எப்படித் தெரியும்?"

"சரி; செய்யுங்க. ஆனால், ஒரு விஷயம் சொல்கிறேன்; முதலிலே கேட்டுக்குங்க. எனக்குப் பொறுப்பு இருக்கிறதென்றும், உத்தியோகம் காயமாகாத பயல் என்றும் நீங்கள் பேசி அவமானம் பண்ணினீங்க. மனம் பொருந்தி இருக்கிற நானும் ராஜாயியும் கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு நீங்கள் இல்லாத காரணத்தையெல்லாம் சொன்னீங்க. இப்பொழுதாவது எனக்கு ஒரு வாக்கு கொடுங்க. இன்றைக்கு ராத்திரி வேலை பார்த்து விட்டு நான் 'பிழைத்து வந்தேன்னு' ராஜாயியைக் கல்யாணம் செய்து கொள்ளலாமா? சொல்லுங்க. அதற்கு வாக்கு கொடுத்தால் உத்தியோகம் காயமான நீங்க பார்க்க வேண்டிய வேலையைக் காயமாகாத இந்தக் கற்றுக் குட்டி பார்த்துக் கொள்ளும்!" என்று ஆவேசமாகப் பேசினான் முத்துக்குமரன்.

"அதென்ன, அப்படிப் பிழைத்து வந்தால் என்று சொல்கிறாயே! ஏன்?"

"ஆமாம்; காற்றும் மழையும் இருக்கிற ஜோரைப் பார்த்துச் சொல்கிறேன். இன்றைக்கு ராத்திரி ஷட்டர் தூக்குகிறவன் உயிர் ஆண்டவன் கையிலேதான்!"

"தம்பி, முத்துக்குமரு! நீ உண்மையான வீரன்தான்டா! இருபது வருஷங்கள் சர்வீஸிலே இருந்து வீராணத்து ஏரியின் வாயை மூடித்திறந்திருக்கிற எனக்கு இப்போதுதான் நாலைந்து வருஷமா அதுங்கிட்டே போகவே பயமாயிருக்கு! அதுவும் இன்று என்னவோ செய்யுது மனசை!"

"நான் பார்த்துக்கறேன், கவலைப்படாதீங்க மாமா. ஆனால்...."

"நீ வேறே ஒன்றும் என்னைக் கேட்க வேணும். ராஜாயி உனக்குத்தான்!"

அடுத்த நிமிஷம் இருளைப் பிளந்து கொண்டு கம்பீரமாகக் கலுங்கல் பாலத்தின் மீது ஏறினான் முத்துக்குமரன்.

* * *

இயற்கை அன்னை புன்னகை புரிந்தால் இமன் காற்று வீசுகிறது; கண்ணைச் சிமிட்டினால் மின்னல் வெட்டுகிறது; கண்ணீர் வடித்தால் பெரு மழை பொழிகிறது. ஆனால், அவள் கோரத் தாண்டவம் ஆட ஆரம்பித்து விட்டால்....? இவை எல்லாவற்றுடனும் புயலும் சேர்ந்து வீசும்!

அந்தப்புயல் அங்கே வீசிக்கொண்டிருந்தது. மழை கொட்டிக் கொண்டிருந்தது. வடிகாலில் அளவுக்கு மேல் ஜலம் ஓடிக் கொண்டிருந்தது. பக்கத்து ஊர்கள் வெள்ளத்தில் மிதக்க இன்னும் சில நிமிஷங்களே பாக்கி இருந்தன.

திடீரென்று அங்கே டார்ச் ஒளி வீசியது. கலுங்கல் பாலத்தில் நின்று கொண்டிருந்த அமிருதலிங்கம் ஓடிவந்தான்.

"ஷட்டர் எத்தனை அடி தூக்கியிருக்கிறது?" என்று இரைந்து கேட்டார் சூபர்வைஸர்.

"ஆறடி!" என்று டார்ச் வெளிச்சத்தில் ஆறு விரல்களைக் காண்பித்துச் சொன்னான் அமிருதலிங்கம். பேசுவது ஒன்றும் இடியோசையில் காதில் விழவில்லை.

"ஷட்டரை முழுதும் அழுத்தி விடு!" என்றார் அதிகாரி.

"ஐயோ! ஏரியிலே தண்ணீர் நிற்காது; ஷட்டர் மேலே வழிய ஆரம்பிச்சுடுமே! ஏரியும் உடைச்சுக்கும்!...."

"நீ அழுத்திவிட்டு வாடா என்றால் எனக்குப் பாடம் படிக்கிறாயே! டெலிபோன் செய்தி வந்திருக்குது. தெரியுமா? ஊரெல்லாம் வெள்ளமாகுதாம்!.... எனக்குத் தெரியும் ஷட்டர்களை யெல்லாம் அழுத்திவிட்டு வா!" என்று இரைந்தார் அவர்.

அமிருதலிங்கம் பாலத்தின்மேல் திரும்பினான். உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு பதினாறாவது ஷட்டர் பக்கம் சென்றான். அங்கேதான் முத்துக்குமரன் கீழே சுழற்றியுடன் நின்று கொண்டிருந்தான். அவன் தலைக்கு நேராக நின்று கொண்டு அமிருதலிங்கம், "ஷட்டர்களை யெல்லாம் கீழே இறக்கிவிடு!" என்று உரக்கக் கூவினான்.

முத்துக்குமரனுக்குப் பிரமை பிடித்தாற் போலிருந்தது. இருளில் அமிருதலிங்கத்தின் முகத்தைக் கூட அவனால் பார்க்க முடியவில்லை. இரைச்சல் நடுவில் பேசவும் முடியவில்லை. கண்ணுக்குத் தெரிந்ததெல்லாம் 'ஹோ'வென்று மின்னல் ஒளியில் பொங்கித் தெரிந்த ஏரி நீர்ப் பரப்புதான்!

ஒவ்வொரு ஷட்டராக அழுத்தத் தொடங்கினான் முத்துக்குமரன். அவனால் இயலவில்லை. வெள்ளத்தின் விசையில் ஷட்டர்களைத் தூக்குவதுதான் எளிது; இறக்குவது மிகக் கடினமான செயல். பலம் கொண்ட முத்துக்குமரனாலேயே இந்தக் காரியத்தை எளிதில் செய்ய முடியவில்லை.

மிகக் கஷ்டப்பட்டு மூன்று ஷட்டர்களை இறக்கினான். அடைபட்ட தண்ணீர் ஷட்டர்கள்மேல் மோதி அவனையும் கீழே தள்ளப் பார்த்தது. அப்போதுதான் முத்துக் குமரனுக்கு ஒரு அதிசயமான எண்ணம் தோன்றியது.

'ஒரு வேளை நம்மை வேலை தீர்ப்பதற்கென்றே இந்தக் கிழவன் இப்படி ஒரு சூழ்ச்சி செய்திருப்பானோ! ராஜாயி விஷயத்தில் நான் குறுக்கே நிற்பது கண்டு இப்படி ஒரு திட்டம்....'—இப்படி அவனுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. எல்லா ஷட்டர்களையும் 'கட கட' வென்று தூக்கிவிட்டு வந்துவிடலாமா என்று யோசித்தான். ஆனால் அப்படிச் செய்தால் வடிகாலில் வெள்ளம் பெருகி வல்கர் வரிசை முழுதும் மிதக்கத் தொடங்கி விடும். அந்த வெள்ளத்தில் ராஜாயியும்!.... அவனால் அதை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

மெள்ள நான்காவது ஷட்டருக்கு வந்தான். அங்கே என்ன இப்படி வெள்ளம் ஒரேயடியாய்ச் சுழல்கிறதே! பாலத்தைப் பிடித்துக் கொண்டு ஷட்டர்க் கம்பி வழியாக இறங்கி மெதுவாக வெள்ளத்தில் ஒரு காலை வைத்துப் பார்த்தான். வெள்ளத்தின் வேகம் அந்தக் காலை இழுத்துக் கொண்டு ஷட்டர் மேல் மோதியது. ஆனால், அப்போது ஒரு அபாயம் பற்றி முத்துக்குமரன் தெரிந்து கொண்டு விட்டான்!

உடனே "மாமா!" என்று கூவினான்; மேலே நின்றிருந்த அமிருதலிங்கம் 'டார்ச்'சை அடித்துப் பார்த்து, 'என்ன?' என்று கேட்டான்.


"இந்த ஷட்டர் பலகை பொத்துக் கொண்டிருக்கிறது, மாமா!" என்றான்.


"அப்படியானால் ஜாக்கிரதை! நீ மெள்ள ஏறி வந்திடு, தம்பி! ஓடி வந்திடு! வந்திடு!" என்று கத்தினான் அமிருதலிங்கம். ஒரு நிமிஷம் கழித்து டார்ச்சை மீண்டும் போட்டுப் பார்த்தபோது அங்கே முத்துக் குமரனைக் காணவில்லை!

மறுநாள் பொழுது விடிந்தது. அமைதியும் கூடவே எழுந்தது. புயல் அடங்கியது. மழை நின்று விடவும் வெயில் எட்டிப் பார்த்தது. இருள் பிரியுமுன்னரே அமிருதலிங்கம் ஓடிக் கொண்டு வந்து சொன்ன செய்தியைக் கேட்டு இன்னும் சில வல்கர்கள் ஓடி வந்து பார்த்தனர்.

ஏரியில் ஷட்டர்மேல் மோதிய அலை நின்று தண்ணீர் அமைதியாயிருந்தது. அந்த நான்காவது ஷட்டரில் ஏற்பட்டிருந்த பெரிய ஓட்டையில் முத்துக்குமரனின் உடல் சிக்கிக் கொண்டிருந்தது. பாதி உடல் வடிகால் புறமும் மற்றொரு பாதி ஏரியின் புறமுமாயிருந்தது.

அப்படி இரண்டு மணி நேரம் அவன் உடல் அந்த ஷட்டரை அடைத்துக் கொண்டிருந்ததால்தான் பக்கத்துக் கிராமங்கள் வெள்ளத்தினின்றும் தப்பின என்று அதிகாரிகள் நிலைமை அறிந்து கணக்கிட்டுச் சொன்னார்கள். ஆனால், முத்துக்குமரனின் உயிர்த்தியாகம் ராஜாயியின் உயிரையும் உள்ளத்தையும் துரத்துமே, என்ன செய்வது?


பினிக்ஸ் உங்களை அழகு படுத்துகிறது
Ruia fabrics
பினிக்ஸ், ப்ரிண்ட்ஸ், வாயில் வீஜேஸ்
உங்களுக்கேற்ற, ஆனால் நீங்கள் இதுவரை கண்டிராத கண்ணைப் பறிக்கும் கலர்களிலும், டிசைன்களிலும் இப்போது கிடைக்கின்றன. பினிக்ஸ் ப்ரிண்ட்ஸ் மற்றும் வாயில்களையே வாங்குங்கள். நாள் முழுவதும் அணிந்தபோதிலும் அவை மொற மொறப்பையும் புதுமையையும் இழக்கமாட்டா.
அவை நேர்த்தியானவை என்பதை நீங்கள் உணர்வீர்கள்
தி பினிக்ஸ் மில்ஸ் லிமிடெட், லோயர் பரேல், பம்பாய்—13


கலிங்கா
ட்யூப்ஸ்
தண்ணீர், மற்றும் 'காஸ்'
விநியோகத்துக்கும் சகல
விதமான தொழிற்சாலை,
வீட்டுத் தேவைகளுக்கும்
உயர்தர ஸ்டீல் குழாய்கள்.
KALINGA TUBES LTD.
33, CHITTARANJAN AVENUE,
CALCUTTA-12.
Works : CHOUDWAR, CUTTACK
INDIA'S FIRST CONTINUOUS STEEL TUBE FACTORY

மாமாவின் உதவி!

சோமாஸ்

யார் வாழ்த்தினாலும் வாழ்த்தா விட்டாலும், கேசவன் இப்பொழுது சர்வ வியாபியாக விளங்கும் விஷ ஜுரத்தை மனப் பூர்வமாக வாழ்த்தினான். அந்த விஷ ஜுரம் மட்டும் வரவில்லையென்றால் பள்ளிக்கூடக் கதவுகள் இதுவரையில் மூடிக் கிடக்குமா?

பள்ளி உபாத்தியாயர் வேலையில் அவனுக்கு மோகம் ஏற்பட்டதே வருஷத்துக்கு ஒரு முறை இரண்டுமாத ஓய்வு கிடைப்பதனால் தான். இப்பொழுது விஷ ஜுரத்தின் விஜயத்தினால் எதிர்பாராத விதமாகப் பள்ளிக்கூடங்களின் திறப்பு ஒத்திப் போடப்பட்டதில் கேசவனுக்கு அளவுகடந்த மகிழ்ச்சி.


ஆனால் அந்தச் சந்தோஷம், பாவம், கேசவனுக்கு நிலைத்திருக்கவில்லை. அவன் உள்ளத்தில் பொங்கிய சந்தோஷத்தை அவனுடைய மாமாவின் வருகை அடித்து வீழ்த்திவிட்டது. விஷ ஜுரம் வந்திருந்தால்கூடக் கேசவன் அத்தனை வேதனைப் பட்டிருக்கமாட்டான். மாமாவின் வருகை அவனை அடியோடு கவலையில் ஆழ்த்தி விட்டது. காரணம் இரண்டு தான். ஒன்று: மாமா கணக்கில் புலி. இரண்டு: கேசவனுக்கு அதில்தான் தகராறு. புலியைக்கண்ட ஆட்டைப்போல் நடுங்குவான் கேசவன், மாமாவையும் கணக்கையும் கண்டு.

மாமாவுக்குக் கேசவனிடம் ரொம்ப அன்பு. ஊரிலிருந்து வரும்போதெல்லாம் அவனுக்கு ஏதாவது பரிசுப் பொருள்கள் வாங்கி வருவார். அவர் வெளியூரில் உயர் நிலைப்பள்ளியில் கணித உபாத்தியாயரா யிருந்தார். விடுமுறை நாட்கள் வரும்போதெல்லாம் மாமா கேசவன் வீட்டுக்கு வரத் தவற மாட்டார். எல்லோரிடமும் அன்பாய்ப் பழகிக் குசலம் விசாரிக்கும் மாமா, கேசவனிடம் மாத்திரம் கணக்குப்போட ஆரம்பிப்பார், வந்ததும் வராததுமாக.

"என்னடா கேசவா, சமர்த்தாய்ப் படிக்கிறாயா, சரி, உட்காரு. நான் சில கணக்குகள் போடுகிறேன். நீ அவைகளுக்கெல்லாம் விடை சொல்லு, பார்க்கலாம்!"

உடனே கேசவனுக்கு விஷ ஜுரம் வந்தமாதிரி ஆகிவிடும்.

"உம், கவனி! ஒரு வண்டியும் மாடும் ஐந்நூறு ரூபாய் விலை; மாட்டின் விலை வண்டியின் விலையை விட இருபதுசதவிகிதம் குறைவு. மாட்டின் விலையையும் வண்டியின் விலையையும் தனித் தனியாகச் சொல்லு—உம்! பத்து எண்ணுவதற்குள் சொல்ல வேண்டும்!"



கேசவனுக்கு இங்கேதான் ஒரு சந்தேகம் மூளையில் தோன்றி உதைத்தது.

'வண்டியின் விலை, மாட்டின் விலை இந்தச் சனியன்களெல்லாம் தெரிந்து என்ன ஆக வேண்டும்? எங்கேயாவது போகவேண்டியிருந்தால் யாராவது வண்டியையும் மாட்டையும் விலைக்கு வாங்குவார்களா, என்ன? அப்படியே ஒருவேளை வண்டி, மாடுகளை வாங்குவதாயிருந்தால், அவைகளை நம்மிடம் விற்பவனிடம் இரண்டுக்கும் தனித்தனியாக விலை கேட்டால், அவன் சொல்லிவிட்டுப் போகிறான்! இதற்கு நாம் மண்டையைப் போட்டு உடைத்துக் கொள்ளுவானேன்!'

தன் மூளையில் தோன்றித் தன்னை உதைக்கும் சந்தேகத்தை வாய்விட்டு மாமாவிடம் கேட்டால், மாமா நிச்சயம் தன்னை உதைப்பார் என்பது அவனுக்கு நன்றாய்த் தெரிந்த விஷயம். ஆகவே, அந்தச் சந்தேகத்தைக் கொஞ்சமும் சந்தேகத்துக்கு இடம் இல்லாமல் விழுங்கி விட்டான்.

சின்ன வயசில், எட்டு, ஒன்பது வயதுப் பையனா யிருந்தபோது கேசவனுக்கு மாமா கணக்குப் போட்டது இன்னும். நினைவில் பசுமையா யிருந்தது. அவர் போட்ட கணக்குகளை மறந்தாலும், அவர் அன்று அவன் முதுகில் போட்ட பூசைகளை மறக்கவில்லை.

அன்று மாமா அவனுக்குக் கூட்டல், கழித்தல் கணக்குகள் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தார். என்ன முயன்றும் கேசவனின் மூளையில் கணக்கைத் திணிக்க முடியவில்லை

ஒரு கணக்கை ஆரம்பிப்பார், மாமா. கேசவனும் விழிக்க ஆரம்பிப்பான். கணக்குப் போட்ட மாமாவே அவற்றின் விடைகளையும் போடவேண்டி யிருக்கும்.

"டேய், கேசவா, நான் ஒரு சின்னக் கணக்குப் போடுகிறேன். கவனமாய்க் கேள். ஒன்றில் ஐந்து போகுமா?" என்று அவனைக் கேட்டார் மாமா.

கேசவன், பளிரென்று பதில் சொன்னான். "ஒன்றில் ஐந்து போகும், மாமா!"

மாமா பளிரென்று கேசவனின் கன்னத்தில் ஒரு அறை கொடுத்து, "முட்டாள், எப்படியடா ஒன்றில் ஐந்து போகும்?" என்று கோபத்துடன் கேட்டார்.

பொங்கி வந்த அழுகையை அடக்கிக் கொண்டு கேசவன் பதில் சொன்னான்: "ஒரு பூட்ஸுக்குள்ளே ஐந்து விரல்களும் போகவில்லையா, மாமா! அடிக்கிறீர்களே!"


இதைக் கேட்டதும் மாமாவுக்குக் கடுங் கோபம் வந்து விட்டது.

"முட்டாள், உனக்கு மூளையே இல்லை. இந்தா, கடைக்குப்போய் ஓரணாவுக்கு மூளை வாங்கிக் கொண்டு வா" என்று கூறி ஓரணாக் காசை அவனிடம் வீசி எறிந்தார்.

கேசவன் அதை எடுத்துக்கொண்டு கடைக்குப் புறப்பட்டான். கொஞ்சம் போனதும், அவனுக்கு முன்பு ஒருதடவை ஒரு சாமான் வாங்கக் கடைக்குப் போய் அங்கே நிகழ்ந்தது நன்றாக நினைவு இருந்தது.

ஆகவே, அவன் உடனே திரும்பி வந்தான்.

''என்னடா?'' என்று கேட்டார் மாமா.




''இல்லை, மாமா! நீங்கள் வாங்கி வரச் சொன்ன பொருள் உங்களுக்காகத்தான் என்று சொல்லி வாங்கிக்கொண்டு வரட்டுமா? எனக்கு என்றால் கடைக்காரன் கொடுக்க மாட்டானே!'' என்றான்.

மாமா என்ன செய்வார், பாவம்!

* * *

இப்பொழுது பல வருஷங்களுக்குப் பிறகு மாமா கேசவனைப் பார்க்க வருகிறார். கேசவனுக்கு அவரிடமிருந்த பயம் இன்னும் நீங்கவில்லை. அந்த பயம் இப்பொழுது இன்னும் அதிகமாயிருந்தது. அதாவது, முன்பு மாமா சின்னக் கணக்குகள் போட்டுப் பிராணனையெடுத்தார். இப்பொழுது பெரிய கணக்குகளாகப் போட்டுப் பழி வாங்கவா மல்லவா?

மாமா வந்தார். அவருடன் கூட அவர் அருமைக் குமாரி செங்கமலமும் வந்தாள். சின்னப் பெண்ணாயிருந்த போது கேசவன் அவளைப் பார்த்திருக்கிறான். இப்போதைய செங்கமலத்துக்கும் அன்றைய அந்தச் சிறுமி செங்கமலத்துக்கும் தான் எத்தனை வித்தியாசம்! அப்பொழுது உலகம் அறியாத சிறுமி. இப்பொழுது அசைந்து ஆடும் பூங்கொடி. கணக்குப் பயத்தில் கேசவனுக்கு அவளைப் பார்க்கவே தோன்றவில்லை. வழக்கம்போல மாமா கேசவனிடம் ரொம்பப் பிரியமாயிருந்தார். ஆனால் என்ன ஆச்சரியம்! கேசவன் எதிர்பார்த்தபடி அவர் அவனை ஒரு கணக்குக் கூடக் கேட்கவில்லை. ஒவ்வொரு சமயம் அவர் பேசும்போதும், எங்கே தன்னைக் கணக்குக் கேட்பாரோ என்று கேசவன் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தான்.



மாமா அவன் மனதில் இருப்பதை உணர்ந்து கொண்டு, ''கேசவா! அநாவசியமாக நீ பயப்படுகிறாய். நீ சின்னவனாக இருந்தபோது உனக்குக் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தேன். நீ பெரியவனாகி விட்டாய். இனிமேல் உனக்குக் கணக்குப் போட்டுத் தொந்தரவு கொடுக்க மாட்டேன். எல்லாவற்றுக்கும் ஒரு கணக்கு உண்டோ, இல்லையோ? நீ கணக்கில் கொண்ட பயத்தில் பாவம், செங்கமலத்தைக் கூடச் சரியாய்ப் பார்க்கவில்லை. இல்லையா?'' என்று கேட்டுக் குறும்பாகச் சிரித்தார்.


அந்தச் சமயம் செங்கமலம் அங்கே தோன்றினாள். அடேயப்பா! அவள்தான் எத்தனை அழகாயிருந்தாள்! கேசவன் இப்பொழுது தைரியத்தோடு அவளைத் தலை நிமிர்ந்து பார்த்தான். சாதாரணமாகத் தடாகத்திலே பூத்திருக்கும் தாமரைப் பூவை அவன் பார்த்திருக்கிறான். ஆனால் அவளது முகத்தழகு அந்தப் பூவுக்கு ஏது? எலி வால் பின்னலும், குட்டைப் பாவாடையுமாக எதற்கெடுத்தாலும் அழுது கொண்டிருந்த அசட்டுச் செங்கமலமா இத்தனை அழகாக மாறிவிட்டாள்! இவள் தலையில் அடர்ந்து சுருண்டு வளர்ந்து படிந்திருக்கும் அழகுக் கூந்தல் எங்கிருந்து வந்தது? முன்பு எப்போதும் கண்டிராத நாணமும், மனத்தை இழுக்கும் வனப்பும் திடீரென்று எப்படி இவளிடம் வந்தன!' என்று சிந்தித்தவாறு தன்னை மறந்தான் கேசவன்.

''அப்பா வெளியே போய் விட்டார். இன்னும் ஏன் விழித்துக்கொண்டு நிற்கிறீர்கள்? என்ன யோசனை?'' என்று இன்னிசை கலந்த குரலில் செங்கமலம் கேட்டுவிட்டுக் கலகலவென்று சிரித்தாள்.

அவளது சிரிப்பொலி கேட்டு விழிப்படைந்த கேசவன், ஆசையோடு அவளை நெருங்கி அவளது கரங்களைப் பற்றினான்.

செங்கமலம் அரும்பும் குறும்பு முறுவலுடன் அவன் கைப்பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு, ''இதோ, அப்பா வந்து விடுவார். வந்ததும் வராததுமாக நம் கல்யாணக் கணக்கை உங்களிடம் சொல்லிப் போடச் சொல்லப் போகிறார்!'' என்றாள்.

அப்பொழுது உள்ளே வந்து கொண்டேயிருந்த கேசவனின் மாமா, ''இல்லையம்மா செங்கமலம்! அந்தக் கணக்கையெல்லாம் நானும் இவன் அப்பாவுமாகப் போட்டுக் கொள்கிறோம். முன்னேயெல்லாம் கணக்கில் கவனம் இல்லாமல் தப்பு தப்பாகப் போடுவான். இப்பொழுது உன்மேல் உள்ள கவனம் காரணமாகக் கணக்கைப் போடவே இவனால் முடியாது!'' என்றார். கேசவனின் முகம் வெட்கத்தினால் தானாகக் கவிழ்ந்து கொண்டது. செங்கமலத்தின் முகம் நாணத்தினால் செவ்வல்லி மலரைப் போலச் சிவந்தது.



திரண்ட விடமின் சத்துக்களடங்கியது
விடமின்-ஏ
விடமின்-பி-1.
விடமின்-ஸி
விடமின்-டி
நல்ல ருசியுள்ள, புஷ்டிதரக் கூடிய மால்ட் எக்ஸ்ட்ராக்ட் அடிப்படையில் மேற்கண்ட அத்யாவசியமான விடமின் சத்துக்கள் அடங்கியது. போஷாக்கு குறைவானவர்கள், நோயினின்றும் தேறுபவர்கள், கர்ப்பிணிகள் மற்-றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு மிக உகந்தது என சிபார்சு செய்யப்படுகிறது.
Vitomalt
ITL
தயாரிப்பவர்கள் :
தி மைசூர் இண்டஸ்ட்ரியல் & டெஸ்டிங் லாபரேடரி லிட்.
மல்லேஸ்வரம், பெங்களூர் - 3.
விற்பனை டிப்போ : 35/37, தம்பு செட்டி தெரு, சென்னை 1



மக்ளீன்ஸ் பற்களை
முன்னைவிட அதிவெண்மையாக
சுத்தம் செய்கிறது!
MTY 44 TAM
MACLEANS
peroxide
TOOTH PASTE
மக்ளீன்ஸால் வெண்மையாக்கப்பட்ட பற்கள் ஆரோக்கியமானது மட்டுமல்லாமல் பற்சிதைவினின்றும் காப்பாற்றப்படுகின்றன.



விபரீதப்

ஆபத்சகாயன் மில்லின் சொந்தக்காரரான முத்துரங்கம் அரசியலில் ஈடுபட்டிருந்தால் இன்று விரோத நாடுகளுக்கிடையே சமாதான தூதராக அங்குமிங்கும் பறந்து கொண்டிருக்க வேண்டியவர். பாவம், அத்தகைய ஒரு தர்மசங்கட நிலை ஏற்படவில்லை அவருக்கு. ஏராளமாக இருந்த பூர்வீக ஆஸ்தியைக் கொண்டு, சுமார் எட்டு வருஷங்களுக்கு முன் ஆபத்சகாயன் மில்லை ஆரம்பித்தார். நங்கனூர்ப் பிராந்தியத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த பல இளைஞர்களுக்கு ஆபத்சகாயன் மில் ஒரு சோலைவனமாகி வாழ்க்கை வசதியளித்தது. எட்டு வருஷங்களுக்கு முன் மில் தொழிலாளியாகச் சேர்ந்த இளைஞர்களில் வெற்றிவேலும் ஒருவன்.

மில்லில் தொழிலைக் கற்றுக் கொண்டவுடன் வெற்றிவேல் உற்சாகத்துடன் வேலை பார்த்து வந்தான் முதல் மாதச் சம்பளத்தைக் கையில் வாங்கிய போது, அதைப் பொற்சுரங்கத்திலிருந்து முதல்முதலாகக்கிடைத்த புதையல்பொருளாக எண்ணி மகிழ்ந்தான். பூர்வீக ஆஸ்தியாகக் கொஞ்சம் நிலமும் இருந்தது அவனுக்கு. மாத வருமானம் எண்பது ரூபாயில் தன்னுடைய செலவை நடத்தியதோடு சிறிது சேர்த்து வைக்கவும் திட்டம் வகுத்துக் கொண்டான். முதல் தடவையாக 'போனஸ்' என்று ஒரு தொகை அவன் கையில் கிடைத்தபோது, தான் எதிர்பார்த்ததற்கு மேல் மாசூல் கிடைக்கப்பெற்ற விவசாயியைப்போல ஆனந்தமடைந்தான் வெற்றிவேல். அடுத்த வருஷம் அவனுக்குக் கலியாணம் நடைபெற்றது. மில் முதலாளி முத்துரங்கம் அவனுடைய கலியாணத்துக்கு நேரில் வந்து அவனுக்குத் திருமணப் பரிசாக இருபத்தைந்து ரூபாயைக் கொடுத்தபோது அவனுடைய மகிழ்ச்சி எல்லை கடந்து போய் விட்டது. உலகமே அன்புமயமாகத் தோன்றியது அந்தச் சமயத்தில்.

ஆபத்சகாயன் மில்லில் சுமார் ஆயிரம் ஆட்கள் வரை வேலை பார்த்து வந்தார்கள். முத்துரங்கத்துக்கு அவர்கள் எல்லோரையும் பற்றி நன்றாகத் தெரியாது. ஆனால், கூர்ந்த புத்தியுடனும் நேர்மையுடனும் வேலை செய்து வந்த வெற்றிவேலைப் பற்றி அவர் நன்றாக அறிந்திருந்தார். அதனால் இரண்டே வருஷங்களில், நுட்பத் தொழிலுக்கான பகுதிக்கு அவனை உயர்த்தினார். அப்பொழுதெல்லாம் முதலாளியும் ஆபத்சகாயன் மில்லும் செழித்தோங்கி வளர வேண்டுமென்று வெற்றிவேல் மனமாரப் பிரார்த்தித்துக் கொள்வதுண்டு. எந்தெந்த ஊர்களிலோ கதவடைப்பு 'வேலை நிறுத்தம்' என்ற மில் செய்திகளைக் கேள்விப் பட்டபோது அதெல்லாம் அவனுக்கு விபரீதமாகப் பட்டது.

திட்டப்படி செலவு, நேர்மையான நடத்தை, அன்பு கனிந்த உள்ளம், தொழிலில் உண்மையான பற்றுதல், போதுமென்ற மனம் ஆகிய நற்பண்புகள் வெற்றிவேலின் வாழ்க்கையை இன்ப மயமாக அமையச் செய்தன. அமைதியான வாழ்க்கை அவனிடம் இந்த மூன்று வருஷங்கள் தான் நீடித்திருந்தது.





போக்கு!

தங்களூர்ப் பொட்டலில் அயலூர்த் தோழர் ஒருவர் பிரசங்கம் பண்ணுவதற்கு ஏற்பாடாயிற்று. வெற்றிவேலும் அந்தப் பிரசங்கத்தைக் கேட்கச் சென்றிருந்தான். ''தொழிலாளத் தோழர்களே! நீங்கள் மில் முதலாளிகளின் பசப்பு வார்த்தைகளில் மயங்கி விடாதீர்கள். அவர்கள் உங்களுடைய இரத்தத்தை உறிஞ்சும் அட்டைகள்! விஷக் கொடுக்குகளால் பற்றிப் பிடித்து உயிரைக் குடிக்கும் கடல் சிலந்திகள்! ஏமாற்று வார்த்தைகளால் உங்களை வஞ்சக வலையில் வீழ்த்தி, உங்கள் மாமிசத்தைக் கொத்தித் தின்னும் கழுகுகள்! அவர்கள் ஏறிச்செல்லும் உல்லாச மோட்டார்கள் எதனால் ஆக்கப் பட்டது தெரியுமா? தொழிலாளத் தோழர்களே! அது உங்களுடைய எலும்புத் துண்டுகளால் ஆக்கப்பட்டது என்பதை மறக்காதீர்கள். அந்த மோட்டாருக்குத் தண்ணீர் போலத் தாராளமாக ஊற்றுவது பெட்ரோலா? இல்லை! இல்லை! மில்லில் பாடுபடுகிறானே ஏழைத் தொழிலாளி அவனுடைய ரத்தக் குழாய்களில் ஓடவேண்டிய ரத்தம். அதுவே முதலாளியின் கார்களுக்குப் பெட்ரோலாகப் போய்ப் பாய்கிறது. காரின் டயர்களுக்குள் அடைக்கப்படுவது காற்று? அல்ல! அல்ல! தொழிலாளியின் சுவாசப் பையை நிரப்பவேண்டிய பெருமூச்சு.''

பிரசங்கத்தை மிகவும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த வெற்றிவேலின் தலை சுழல ஆரம்பித்தது. கூட்டம் முடிந்தவுடன் பிரசங்கியாரின் அருகில் போய் அவரோடு பேசக் கொடுத்தான். அதிலிருந்து அவனுடைய சுபாவமே அடியோடு மாறி விட்டது.

மறுநாள் அதிகாலையில் மில்லுக்குப் போகவில்லை அவன். லீவு எழுதி அனுப்பி விட்டுத் தனது நெருங்கிய நண்பர்கள் சிலரைப் போய்ப் பார்த்தான். பிரசங்கியார் மேடையில் கூறிய பொன்மொழிகளை, ஒலிப்பதிவு நாடாவிலிருந்து ஒலி பரப்புவதுபோல் அவர்களிடம் ஒப்புவித்தான்.

''முதலாளி பேசுவது அத்தனையும் பசப்பு வார்த்தைகள்; குள்ளநரிப் பேச்சு; ஓநாயின் ஓலம்; முதலையின் கண்ணீர். உருத்திராட்சப் பூனையின் உபதேச மந்திரம். அவருடைய வஞ்சக வார்த்தைகளைக் கேட்டு நாம் இது வரை மோசம் போய் விட்டோம். இனியாவது விழித்தெழுவோம்!'' என்றும் ஒரு குட்டிப் பிரசங்கம் பொழிந்தான்.

நாளாக நாளாக அவனுடைய பிரசங்கத்தின் வேகம் அதிகரித்தது. அவனைப்போலக் குட்டிப் பிரசங்கம் பண்ணும் தொழிலாளர்களும் ஆபத்சகாயன் மில்லில் பெருகி வந்தார்கள்.

''தொழிலாளராகிய நாம் கஞ்சி குடிக்க வேண்டுமானால், குடிசையிலாவது வாழ வேண்டுமானால், மில்லில் வேலைநிறுத்தம் செய்தே ஆகவேண்டும். வாரத்தில் மூன்றரை நாட்கள் ஓய்வுபெற்றே ஆகவேண்டும். வருஷத்தில் ஆறுமாத காலம் சம்பளத்துடன் விடுமுறை பெற்றே ஆகவேண்டும். தினமும் ஐந்தரை மணி நேரமே வேலை பார்த்தாக வேண்டும். ஆறு மாதங்களுக்கு ஒருமுறை இரண்டு மாதச் சம்பளத் தொகையைப் போனஸ் ஆகப் பெற்றாக வேண்டும். மாதச் சம்பளம் குறைந்த பட்சம் நூற்றைம்பது ரூபாயாவது கொடுக்கப்பட வேண்டும். இந்த நிபந்தனைகள் நிறைவேற்றப் படாவிட்டால் வேலைநிறுத்தம் நடத்துவோம்'' என்று தங்களூர்ப் பொட்டலில் கூட்டம் கூடிப் பேசினார்கள் ஆபத்சகாயன் மில் தொழிலாளர்கள்.

முத்துரங்கம் முன்யோசனை உடையவர். தொழிலாளர்களின் நிபந்தனைகள் வெறும் ஆகாசக் கோட்டைகளாக இருப்பதை அறிந்து, சர்க்காருக்குத் தகவல் கொடுத்து

மாறன்



உலகில் முதல் இடம்

உலக நாடுகளிடையே தென்னுப்பிரிக்கா எதில் முதல் ஸ்தானம் வகிக்கிறது என்று கேட்டால், நிறவெறியில் முதல் ஸ்தானம் வகிக்கிறது என்று பலரும் சொல்லுவார்கள்! உலகத்திலேயே பிரும்மாண்டமான சகாரா 'பாலைவனம் அந்த நாட்டில்தான் இருக்கிறது என்பதும் எல்லோரும் அறிந்ததே. ஆனால், உலகத்திலே வேறு எங்கும் இராத பெரிய தங்கச் சுரங்கமும் வைரச் சுரங்கமும் தென்னுப்பிரிக்காவில்தான் இருக்கின்றன என்பதை எல்லோரும் அறிந்திருக்க முடியாது.



தென்னுப்பிரிக்காவில் உலகத்திலேயே பெரிய வைரச் சுரங்கம் இருப்பதுடன், முன்பின் எவரும் கண்டிராத மிக மிகப் பெரிய வைரம் அந்தச் சுரங்கத்திலிருந்துதான் எடுக்கப்பட்டது. சுமார் 3100 காரட்டுகளுக்கு மேல் எடை உள்ள, விலை மதிக்க முடியாத, உலக அதிசயங்களில் ஒன்ருன கல்லினன் என்ற வைரம்தான் அது!

விட்டு, இரண்டு மாதங்களுக்கு மில்லை மூடி விட்டார். ஆபத்சகாயன் மில் தொழிலாளர்களின் சார்பில் அயலூர்த் தோழர்கள் சிலர் நங்கஞூருக்கு வந்து கொடுமை, உரிமைகளைப் பற்றிப் பேசினுர்கள். முதலாளியின் மீது வழக்கு தொடரும்படி தொழிலாளர்களைத் தூண்டிவிட்டார்கள்.

ஆபத்சகாயன் மில் முதலாளி கொண்டு வந்து காட்டிய வரவு செலவுக் கணக்குகளைப் பார்வையிட்டு நீதி வழங்கிய மத்தியஸ்தர், முதலாளிக்குச் சாதகமாகவே தீர்ப்பளிக்க நேரிட்டது. ஆகவே இரண்டு மாத காலம் வருவாயின்றிச் சிரமப்பட்டுக் கொண்டிருந்த தொழிலாளர்கள், தங்கள் கோரிக்கைகளை வாபஸ் பெற்றுக்கொண்டு வேலைக்குத் திரும்பினுர்கள். ஆயினும் மனக் கசப்புடன்தான் வேலை செய்தார்கள்.

வெற்றிவேலின் மனைவி காமாட்சிக்கு எட்டிய உறவினர் ஒருவர், ஏராளமான ஆஸ்தியுள்ளவர். வாரிசின்றி இறந்துபோனுர். அந்தச் சொத்துக்குப் பலர் வாரிசுரிமை கொண்டாடினுர்கள். ஆனல் வெற்றிவேலின் மனைவி காமாட்சிதான் ஓரளவு நெருங்கிய வாரிசு பாத்தியதை உள்ளவள் என்பதை வக்கீல் ஒருவர் தெரிந்து கொண்டு வெற்றிவேலுக்குக் கடிதம் எழுதினுர். அதன்படியே அவன் அந்த வக்கீலை அமர்த்தி வழக்காடியதில் லட்ச ரூபாய்க்கு மேலான சொத்து வந்து சேர்ந்தது.

அந்தச் சொத்துக்களை ரொக்கப் பணமாக்கிக் கொண்டு வந்து நங்கஞூரில் விளைநிலமாக வாங்கி விடவேண்டும் என்று காமாட்சி எவ்வளவோ எடுத்துச் சொன்னுள். பரம்பரை பரம்பரைக்கும் அழியாத வகையில் அந்தப் பணத்தை நல்ல விதத்தில் ஒரு ஆஸ்தியாக ஆக்குவதற்குப் பல வழிகளைக் காட்டினுள். வெற்றிவேலுக்கு அவள் கூறியது ஒன்றும் பிடிக்கவில்லை. புதிதாகக் கிடைத்த பணத்தைக் கொண்டு நங்கஞூரிலேயே சொந்தமாக ஒரு மில் திறக்க நிச்சயித்துத் திட்டங்கள் வகுத்தான். உடனே ஆபத்சகாயன் மில்லிலிருந்து விலகிப் புதிய மில் ஸ்தாபிக்கும் வேலையைத் துரிதமாக ஆரம்பித்தான். வெற்றிவேல் புதிய மில் ஆரம்பிக்கப் போகும் செய்தி, அவனோடு வேலை பார்க்கும் தொழிலாளத் தோழர்கள் அனைவருக்கும் தெரிந்தது. ஆபத்சகாயன் மில் முதலாளி மறுத்து விட்ட அத்தனை வசதிகளையும் பெறலாம் என்ற நம்பிக்கையும் பிறந்தது.

அதிர்ஷ்டவசமாகக் கிடைத்த சொத்துக்களை யெல்லாம் பணமாக மாற்றிய பின் வெற்றிவேல் நினைத்தபடியே சிலமாதங்களில் வெற்றிவேல் மில்லை உருவாக்கி விட்டான்.

ஆபத்சகாயன் மில்லில் வேலை பார்த்து வந்த தொழிலாளர்களில் பாதிக்கு மேல் இங்கு வந்து சேர்ந்து விட்டார்கள். பலத்த சிபார்சுகளின் பேரில் புதிதாக முந்நூறு ஆட்களையும் தனது மில்லில் வேலைக்கு அமர்த்திக் கொண்டான் வெற்றிவேல்.

வெற்றிவேல் மில்லில் ஒரு நாளைக்கு ஐந்தரை மணி நேரம்தான் வேலை; வாரத்தில் இரண்டரை நாள் ஓய்வு; மாதச் சம்பளம் இருநூறு ரூபாய்; வருஷத்துக்கு இரண்டு முறை போனஸ்; தொழிலாளர் குடும்பங்களுக்கு வைத்திய வசதி; அவர்களுடைய பிள்ளைகளுக்குக் கல்வி வசதி என்று தொழிலாளர்களுக்குத் தாராளமாக வசதிகளைத் திட்டமிட்டிருந்ததால் பல விவசாயிகள் கூட மில் தொழிலாளர் ஆவதற்குப் பெரு முயற்சி செய்தார்கள்.

கிட்டத்தட்ட ஆயிரம் தொழிலாளர்களுடன் வெற்றிவேல் மில்ஸ் ஓட ஆரம்பித்தது. தொழிலாளர்கள் யாவரும் வெற்றிவேலைப் புகழ்ந்தும் முத்துரங்கத்தை நாவாரத் திட்டியும் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள். வெற்றிவேல் தங்களுக்குத் தாராளமாகப் பல வசதிகளைச் செய்திருப்பதைக் கண்டு, மேலும் மேலும் புதிய வசதிகள் செய்து கொடுக்கும்படி அவனை வற்புறுத்தினுர்கள்.

முதல் மாதம் சம்பளப் பட்டுவாடா முடிந்த போது வெற்றிவேலின் கையிருப்புப் பணம் முழுவதும் காலியாகி விட்டது. மில்லுக்கும் தன் குடும்பத்துக்கும் தேவைப்படும் செலவுகளை அடுத்த மாத மில் வருமானத்திலிருந்துதான் செலவழிக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டது அதற்கு அடுத்த மாதத்தில்.

மூன்ருவது மாதம் தொழிலாளர்களின் சம்பளப் பட்டியலையும் சென்ற மாதத்தின் வருமானத்தையும் ஒப்பிட்டுப் பார்த்த

போது, சம்பளப் பட்டுவாடாவுக்குப் பதினாயிரம் ரூபாய் குறைவாக இருந்தது. ஐம்பது தொழிலாளர்களுக்கு மட்டிலும் அந்த மாதம் சம்பளம் இல்லை என்று அவன் எப்படிச் சொல்ல முடியும்? மேலும் பஞ்சுப் பொதிகள் வரவழைப்பதற்கும் பணம் ஏராளமாகத் தேவைப்பட்டது. வெற்றிவேல் மில்லின் முதலாளி என்ன செய்வதென்று தெரியாமல் திணறிக் கொண்டிருந்தான்.

குறைந்தது இருபதினாயிரம் ரூபாயாவது கடன் வாங்கினால்தான் மில்லை மேற்கொண்டு நடத்த முடியும் என்ற முடிவுக்கு வந்தபோது வெற்றிவேலுக்குப் பைத்தியம் பிடித்து விடும் போலிருந்தது.

புதுப் பண மோகத்தில் பணத்தை வாரி இறைக்கும் வெற்றிவேலின் போக்கைக் கண்குத்திப் பாம்பு போலக் கவனித்துக் கொண்டிருந்த லேவாதேவிக்காரர் ஒருவர் வெற்றிவேலுக்குக் கடனுதவி செய்ய முன்வந்தார். ஆரம்பத்தில் அவனே தொழிலாளர்களுக்கு மிகக் குறைந்த வேலை நேரத்தையும் மிக அதிகமான ஊதியத்தையும் திட்டம் போட்டு அதை மாற்றுவதில்லையென்று வாக்குறுதியும் அளித்திருந்தான். ஆகையால் மில்லில் தொழிலாளர்களுக்கு வசதிகளும், வெற்றிவேலுக்குப் பொருளாதார நெருக்கடியும் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தன.

இதேசமயத்தில் வெற்றிவேலுக்கு அவ்வப்போது கடன் கொடுத்து வரும் லேவாதேவிக்காரர் அவனை அடிக்கடி பார்த்துப் பேச வந்தார். மில்லைத் தம்மிடம் விட்டு விட்டால் பாக்கிகளைத் தீர்த்து விட்டு, அவன் நிம்மதியாக வெளியேறலாம் என்ற யோசனையையும் அவர் சூசகமாக வெளியிட்டார். வெற்றிவேலுக்கு லேவாதேவிக்காரர் தெரிவித்தபடி நடப்பதைத் தவிர வேறு வழி எதுவும் தோன்றவில்லை.

வெற்றிவேல் மில்ல் ஆட்டம் கண்டு விட்டதை அறிந்தவுடன் பல தொழிலாளிகள் ஆபத்சகாயன் மில்லுக்குப் போய் வேலை தரும்படி கெஞ்சினார்கள். அதன் முதலாளியான முத்துரங்கத்தினிடம் அவர்கள் வெற்றிவேலின் கண்மூடித்தனமான போக்கை வர்ணித்து நையாண்டி செய்தார்கள். ஆனால் முத்துரங்கம் அதைக் கேட்டு வருந்தினார். தம்மைப்போலவே தொழிலாளர்கள் நலனில் அக்கறையுள்ள வெற்றிவேல், தவறான புள்ளி விவரங்களை வைத்துக்கொண்டு பணத்தைச் செலவிட்டதனால் மில்லையே மூடிவிட நேர்ந்தது என்பதை உணர்ந்து அவர் அவனுக்கு உதவிசெய்ய முன்வந்தார். லேவாதேவிக்காரர் அவனைச் சுற்றி வட்டமிடுவதையும் அவர் தெரிந்து கொண்டிருந்தார்.

பஞ்சு வியாபாரிகளிடமிருந்தும், தொழிலாளர்களிடமிருந்தும் பாக்கித் தொகைக்காக வந்து சேர்ந்த வக்கீல் நோட்டீசுகளைப் பார்த்து விட்டுக் கலங்கிய உள்ளத்தோடு வீட்டில் உட்கார்ந்திருந்தான் வெற்றிவேல். சற்று முன்புதான் லேவாதேவிக்காரர் மிகக் கருணையுடன் அவனுக்கு உபதேசம் செய்து விட்டுப் போனார். அந்த உபதேசத்தின்படி மில்லை அவரிடம் கொடுத்து விட்டுத் தலை முழுகி விடுவது என்ற முடிவுக்கும் வந்து விட்டான் வெற்றிவேல். அன்று மாலையில் அவருக்குத் தனது பதிலைத் தெரிவிப்பதாகச் சொல்லியிருந்தான். மாலையில் அவர் வந்ததும் ''ஐயா! மில்லை ஏற்றுக்கொண்டு எனக்கு விடுதலை யளியுங்கள்'' என்று சொல்லி விடத் தீர்மானித்துக் கொண்டு அவன் எழுந்தபொழுது பச்சைநிற பியூக் மோட்டார் அவன் வீட்டு வாசலில் வந்து நின்றது.

எதிர்பாராதபடி முத்துரங்கம் தன் வீடு தேடிக் காரில் வந்திருப்பதைக் கண்டதும், வெற்றிவேல் ஒரு விநாடி திகைத்து விட்டு 'வணக்கம்' என்று வரவேற்றான். வந்தார் முத்துரங்கம். அவர் பிடித்த பிடியிலிருந்து அவருடைய உண்மையான அன்பை உணர்ந்தான் வெற்றிவேல். அதே சமயம், அளவுக்கு மீறிய துயரத்தினால் கொதித்துக் கொண்டிருந்த வெற்றிவேலின் நாடித் துடிப்பை அறிந்தார் முத்துரங்கம். தனது பழைய முதலாளி என்ற முறையில் அடக்க ஒடுக்கத்துடன் எட்டி நின்றான் வெற்றிவேல்.

''நான் தொழிலாளிகளின் ரத்தத்தை உறிஞ்சி விடும் அட்டையல்ல, வெற்றிவேல்! பூர்வீகச் செல்வத்தைத் தொழிலாளர் நலனுக்காகப் பயன்படுத்தும் ஒரு தொழிலாளி நான். ஆகையால் அருகில் வந்து உட்காரு'' என்று அவனைத் தமது பக்கத்தில் இழுத்து உட்கார வைத்தார் முத்துரங்கம். அவர் இப்பொழுது கூறிய வார்த்தைகள் வெற்றிவேலுக்குப் பசப்பு வார்த்தைகளாகப் படவில்லை. முன்பு அவர் காட்டிய கணக்குகள் யாவும் உண்மையானவை என்பதை இப்பொழுதுதான் அவனால் உணர முடிந்தது.

வெற்றிவேல் மில்லின் அப்போதைய நிலைமையைக் கேட்டறிந்த முத்துரங்கம் தாமே அந்த மில்லை வாங்கிக் கொள்வதாக வாக்களித்தார். லேவாதேவிக்காரரிடம் தனது மில்லையும் தொழிலாளர்களையும் ஒப்படைக்கத் தயங்கிக் கொண்டிருந்த வெற்றிவேலுக்கு, முத்துரங்கம் இவ்வாறு உறுதி கூறியது மிகவும் மகிழ்ச்சியளித்தது.

முத்துரங்கம் இரண்டு மில்களின் முதலாளியானார். வெற்றிவேல் பழையபடி ஆபத்சகாயன் மில்லில் ஒரு தொழிலாளியாகிவிட்டான். உள்ள நிறைவோடு தொழிலாளியாக இருப்பதே அவனுக்கு இப்பொழுது இன்பமாக இருந்தது. மில்லின் முதலாளியாக இருந்த போது அனுபவித்த மனத்துயரங்களை எண்ணிப் பார்க்கவே அஞ்சினான் வெற்றிவேல்.

தொழிலாளர்களுக்கு அளவுக்கு மேல் சம்பளம் கொடுத்தால் மில் ஓடமுடியாது என்பதையும், வெளியிலிருந்து கொண்டு தொழிலாளர்களின் மனத்தில் அதிருப்தியையும் துவேஷத்தையும் தூண்டிவிடும் புள்ளி விவரப் பொன்மொழிகளில் தொழிலாளர்கள் மயங்கிவிடக் கூடாதென்பதையும் வெற்றிவேல் அவர்களுக்கு அனுபவ பூர்வமாக எடுத்துக் கூறினான். தொழிலாளர்கள் இப்பொழுது அவனுடைய வார்த்தையில் நம்பிக்கைகொண்டு சமாதானமடைந்தார்கள். ஏனென்றால் வெற்றிவேல் இப்பொழுது தொழிலாளியாக வேலை பார்த்ததோடு முத்துரங்கத்துக்குத் தொழிலாளர் நல ஆலோசகராகவும் நியமிக்கப்பட்டிருந்தான்.


மாஸ்டா
பல்புகள்
(இந்திய தயாரிப்பு)
Mazda
பிரகாசம் அதிகம்
நீடித்து உழைக்கும்
BTH
பிடிஹெச் பரம்பரை
யைச் சேர்ந்த பல்புகள்
அஸோஸியேட்டட் எலக்ட்ரிகல்
இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) பிரைவேட் லிட்.
கல்கத்தா, பம்பாய், புது டில்லி, மதராஸ், பெங்களூர்
கோயமுத்தூர், நாகபுரி
AIX- 126TM


பூரண வாய் சுத்தத்திற்கென
தயாரிக்கப் பட்டது
• கிருமிகள் அகற்றப்பெற்ற நைலான் முடிகள்.
• அழகிய பிளாஸ்டிக் பிடியில் நன்கு இணைக்கப்பட்ட முடிகள்.
• உங்கள் பற்களுக்கான உருப்பெற்றது; சுலபமாக சுத்தம் செய்கிறது.
• மிருதுவான சுத்தி—பல்லின் எனாமலை பாதிக்காது.
• மெதுவான முறையில் ஈறுகளை பலப் படுத்துகிறது.
அதிக பலனுடன்!
பற்களைப் பூரணமாக சுத்தம் செய்கிறது. ஈறுகளை மிருதுவாக தடவி விடுகிறது.
மூன்று அளவுகள்: பெரியவர்களுக்கு, சிறியவர்களுக்கு, குழந்தைக்கு
• ஹார்ட் • மீடியம் • ஸாப்ட்
கால்கேட்
நைலான் டூத் பிரஷ்
மலிவு–நீடித்த உழைப்பு



கார் லைட்
அதிக
வெளிச்சம்
அதிக
ஆபத்து
TVS
எதிர் நோக்கிப் போகும்
போது லைட் அணைத்து,
வேகம் குறைத்து விபத்தை
விலக்கலாம்
நிறுத்தும் விசை வழுவாமல்
கவனிக்கவும்
கூர்ந்து கவனித்து ஓட்டவும்
தி மதராஸ் மோட்டார் இன்ஷ்யூரன்ஸ் கோ., லிட்.
(டி. வி. எஸ். ஸ்தாபனம்)
சென்னை
பண்பாட்டால் விபத்தை விலக்கி பயனடையலாம்
MMI/107

விளையாட்டு மன்னர்கள் 5

புலிக்குப் பிறந்தது....



பூமியில் அதல பாதாளத்திலே எண்ணெய் இருக்கின்றது பூமியைத்தோண்டி எண்ணெய் எடுத்துப் பயன் படுத்தினால்தானே அதன் பெருமை தெரிகிறது? எத்தனையோ வைரச் சுரங்கங்கள் இருக்கின்றன. ஆனால் சுரங்கங்களை வெட்டி எடுத்துக் கனிகளிலிருந்து வைரத்தைப் பிரித் தெடுத்தால் தானே அதன் ஒளி சுடர் விடுகிறது? அவற்றைப் போலத்தான், விளையாட்டுக் கலையிலே தலைசிறந்த நிபுணர்களிருந்தாலும் அவர்களுக்கு ஆதரவும் சந்தர்ப்பமும் கிடைக்காவிட்டால் அவர்கள் குப்பையில் கிடக்கும் குன்றிமணிகளைப் போலத்தான் கருதப்படுவார்கள். விளையாட்டுக் கலையில் தேர்ச்சி எவ்வளவு அவசியமோ, அவ்வளவு ஆதரவும் சந்தர்ப்பமும் மிக மிகத் தேவை.

ஹைதராபாத்தில் 1955-ம் வருஷம் நியூஸிலந்து கிரிக்கெட் கோஷ்டிக்கும் இந்திய கிரிக்கெட் கோஷ்டிக்கும் டெஸ்ட் பந்தயம் நடந்தது. அதுவே முதன் முறை கிரிக்கெட் டெஸ்டில் கலந்து கொண்ட திரு கிருபால் சிங்குக்குப் புகழையும் பெருமையையும் தேடித் தந்தது; அதோடு ஒரு படிப்பினையும் கற்றுக் கொடுத்தது. அன்று நடந்த கிரிக்கெட் பந்தயத்தில் திரு கிருபால் சிங் 87 ஓட்டங்களைப் பிரமாதமாக ஆடிக் குவித்தார். இது மற்ற விளையாட்டுக் காரர்களுக்குப் பெருமை யளிப்பதற்குப் பதிலாகப் பொறாமையைப் பெருக்கி விட்டது. அவர்கள் திரு கிருபால் சிங் நூறு அடிப்பதற்குள் பந்தயத்தை 'டிக்ளேர்' செய்து விட வேண்டும் என்று காப்டன் குலாம் முகம்மதை அணுகினர். ஆனால் அவர் பெருந்தன்மையுடன் திரு கிருபால் சிங்குக்குச் சந்தர்ப்பம் அளித்தார். திரு குலாம் முகம்மது திரு கிருபால் சிங்குக்குப் பதினைந்து நிமிஷங்கள் அதிக நேரம் கொடுத்து அவர் நூறு ஓட்டங்கள் எடுக்கச் சந்தர்ப்பம் கொடுத்தார். அப்படி அவர் செய்திரா விட்டால், திரு கிருபால் சிங்கின் பெருமை வெளியுலகத்துக்குத் தெரியாமலே போயிருக்கும்.



திரு கிருபால் சிங் புகழ் பெற்ற கிரிக்கெட் ஆட்டக்காரரான திரு ராம்சிங்கின் அருமைப் புதல்வர். புலிக்குப் பிறந்தது பூனையாகி விடுமா? இன்று திரு கிருபால் சிங் 'மகன் தந்தைக்காற்றும் உதவி'யைச் செய்துவிட்டார். தந்தைக்கு அகில உலகிலும் பெருமையைத் தேடித் தந்து விட்டார்.

கிருபால் சிங் 1933-ம் வருஷம் ஆகஸ்டு ஆறாம் தேதி சென்னையில் பிறந்தார். இவர் செண்ட் பீட்ஸ் கல்லூரியில் கல்வி பயின்று, லயோலா கல்லூரியில் சேர்ந்து பி. ஏ. (ஆனர்ஸ்) பட்டம் பெற்றுக் கல்வித் துறையிலும் தேர்ச்சி பெற்றவர்.


தற்சமயம் திரு கிருபால் சிங் பாரி அண்ட் கம்பெனியில் உர நிர்வாக இலாகாவில் உதவி மானேஜராக இருக்கிறார். 1948-49ம் வருஷத்தில்தான் கிரிக்கெட் துறையில் அவர் முழுமூச்சுடன் ஈடுபட்டார்.

1951-ம் வருஷம் ரஞ்சித் கிரிக்கெட் பந்தயத்தில் வெகு நன்றாக ஆடினார். அவர் குறுகிய காலத்துக்குள்ளே ஆயிரம் ஓட்டங்களை எடுத்துத் தென்னிந்திய விளையாட்டுக்காரர்களுக்குள்ளே வெகு விரைவில் ஓட்டங்களை எண்ணிக் குவிப்பதில் தலைசிறந்தவர் என்னும் புகழ் மாலையைச் சூட்டிக் கொண்டார். 1954—1955-ம் வருஷத்தில் மூவாயிரத்தைந்நூறு ஓட்டங்களை எடுத்து, அதில் பதினான்கு நூறு ஓட்டங்களையும் போட்டு, தாம் நிகரற்றவர் என்று காண்பித்து விட்டார்.

'நன்றி மறப்பது நன்றன்று' என்பது நம் தமிழ் முதுமொழி. திரு கிருபால்சிங் தம்மைக் கிரிக்கெட் துறையில் உருவாக்கிய தம் அருமைத் தந்தையையும், கிரிக்கெட் விளையாட்டுக் கலையைப் பயில்விப்பதில் தேர்ந்த திரு வென்ஸ்லியையும், தமக்கு ஹைதராபாத் டெஸ்டில் சந்தர்ப்பமளித்து உதவிய திரு குலாம் முகம்மதையும் மறக்கவில்லை.

ஆகஸ்டு மாதத்தில் பம்பாயிலுள்ள சுந்தர் கிளப் கிரிக்கெட் கோஷ்டியினர் ஆப்பிரிக்காவில் ஏழு வாரங்கள் விளையாடச் செல்கிறார்கள். அந்தக் கோஷ்டியில் திரு கிருபால் சிங்கும் ஒருவராகச் செல்கிறார். அவர் நம் தென்னிந்தியாவின் பெருமையை அங்கு நிலை நாட்டி விட்டு வரவேண்டும் என்று விரும்புகிறோம்.

—குண்டுமணி



கமலா பின்கட்டில் அமர்ந்திருந்தாள் போலும்.

துரை ஆபீஸ் உடையைக் களைந்துவிட்டு முகத்தைச் சோப்பு போட்டுக் கழுவிக் கொண்டான். துடைத்துக் கொள்வதற்காகக் கொடியிலிருந்த துண்டை எடுத்தவன் முகத்தில் துண்டிலிருந்து சுகந்தமான பவுடர் நெடி 'குப்' என்று வீசியது.

'ஓகோ! அலங்காரம் எல்லாம் முடிந்து தயாராக இருக்கிறாற் போலிருக்கிறது' என்று சொல்லி இலேசாகச் சிரித்துக் கொண்டான்.

அவனுடைய கருத்தை ஊர்ஜிதம் செய்வது போலத் துண்டின் ஓரத்தில் இரண்டு மூன்று இடங்களில் குங்கும அடையாளம் கண்ணில் பட்டது. கமலாவுக்கு எப்பொழுதுமே எடுத்த எடுப்பில் சரியாகப் பொட்டு வைத்துக் கொள்ள வராது. அது அநேகமாக அவளுடைய பிரமையாகக்கூட இருக்கலாம். இரண்டு மூன்று முறைகள் அதை அழித்து அழித்து இட்டுக்கொண்டால்தான் அவளுக்குத் திருப்தி வரும்.

கமலாவின் பொட்டு அலங்காரமும் முடிந்து விட்டது என்று இப்பொழுது சந்தேகமறத் தெரிந்து விட்டது. வண்ணப் பசையுடன் கலந்த வாசனைக் குங்குமத்தின் அடையாளம் அழுத்தமான பட்டைக் கோடாகத் துண்டில் பதிந்திருந்தது. பவுடர் மணம், வாசனைக் குங்குமம், மெழுகுப் பசை ஆகிய பெண்மையின் சுவையான அம்சங்கள் படிந்திருந்த அந்த ஈரத்துண்டை ஏதோ ஒரு கிறக்கத்தில் மீண்டும் முகத்தில் ஒற்றிக் கொண்டான் துரை.

"ஓ, நீங்க வந்தாச்சா?" என்று கேட்டுக் கொண்டே வந்தாள் கமலா.

"அது சரி, உன் அலங்காரம் எல்லாம் முடிந்து விட்டதா?"

"எல்லாம் முடிந்தாற் போலத்தான்" என்று சொல்லிக் கொண்டே சுவரில் மாட்டியிருந்த கண்ணாடியை எடுத்து முகத்தைப் பார்த்துக் கொண்டாள்.

இடது கையால் கண்ணாடியை முகத்துக்கு எதிராகத் தூக்கிப் பிடித்தபடி வலது ஆள்காட்டி விரலால் திலகத்தை இரண்டு முறை அழுத்திவிட்டுக் கொண்டாள். கமலாவின் முகத்தை அருகில் நின்ற துரை பார்க்க முடியாதபடி கண்ணாடி மறைத்துவிட்டது. கண்ணாடிக்குப் பக்கவாட்டில் அகன்று மடிந்த 'தந்தத்திலுல் கடைந்தெடுத்த' அவளது வலக் கரத்தையும், உடலை இறுகப் பற்றிய சோளியையும் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான் துரை.

சட்டென்று கண்ணாடியைத் தாழ்த்திய கமலா துரையின் பார்வையைக் கண்டு சிரித்தபடி, "குறும்பைப் பார், குறும்பை!" என்றாள்.

"நீதான் முகத்தைப் பார்க்க முடியாதபடி கண்ணாடியால் மறைத்துக் கொண்டு விட்டாயே, நான் என்ன பண்ணுவதாம்?" என்று குழந்தை மாதிரி சிணுங்கினான் துரை.

"ஓகோ அதற்காக....உம். அது சரி. இந்தப் பொட்டு சரியாக இருக்கிறதா? கொஞ்சம் பார்த்துச் சொல்லுங்களேன். இன்றைக்கு என்னவோ சரியாகவே அமையமாட்டேன் என்கிறது."

"என்றைக்குத்தான் சரியாக அமைந்திருக்கிறது? சரி, இங்கே வா, பார்த்துச் சொல்கிறேன்."

"ஒன்றும் வேண்டாம். நீங்கள் அங்கிருந்தே பார்த்துச் சொன்னால் போதும்" என்றாள் கமலா.

"என்னவோ நான் சொன்னேன். கேட்டால் கேள், இல்லாவிட்டால் இப்படியே 'கோணமாண' என்று இருக்கிற பொட்டோடு வெளியே புறப்



படு. நாலு பேர்கள் பார்த்துப் பரிகாசம் செய்யட்டும். அந்தச் சமயமாகப் பார்த்து நான் உனக்கும் எனக்கும் சம்பந்தமே இல்லாதவன் மாதிரி வேறு எங்கேயாவது பார்த்துக் கொண்டு இருந்துவிட்டுப் போகிறேன்.''

''நிஜமாகவா நீங்கள் சொல்லுகிறீர்கள்?''

''பின்னே என்னவாம்?'' என்றான்.

''ஐய, நிஜமாகத்தான் கேட்கிறேன். சொல்லுங்களேன். நெற்றியில் பொட்டு சரியாகவா இல்லே?''



''எனக்குத் தெரியாது.''

கமலாவுக்கு இனிமேல் பணிவதைத் தவிர வேறு வழியில்லே. இப்பொழுது தான் துரை வேண்டுமென்றே அலமாரியில் மும்முரமாக எதையோ தேடுவதாகப் பாசாங்கு செய்தான்.

கமலா இந்த இடைவேளையில் இரண்டு முறை கண்ணாடியில் முகத்தைப் பார்த்துக் கொண்டாள். பொட்டு சரியாக அமையாதது போலத்தான் அவளுக்குத் தென்பட்டது.

மெள்ளத் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''இங்கே பாருங்களேன்'' என்று கூறினாள்.

''சொல்லு, கேட்கிறேன்'' என்றான் துரை முகத்தைத் திருப்பாமலேயே.

கமலாவினால் இந்த உதாசீனத்தைப் பொறுக்கவே முடியவில்லே. உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

''சரி, நீங்களே சரி செய்துவிடுங்கள்'' — வார்த்தைகளே அரைகுறையாகச் சொல்லிவிட்டு எச்சிலோடு தோல்வியையும் விழுங்கிக் கொண்டாள்.

''உம். அப்படி வா வழிக்கு'' என்று வெற்றிப் புன்னகையுடன் அவள் பக்கம் திரும்பினான் துரை.

கமலா முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டாள்.

துரைக்குச் சிரிப்பு வந்தது.

''எதற்குச்சிரிப்புஇப்போ?''

''நீ இப்படி 'உம்' என்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டால் எப்படிச் சரி பண்ணுவதாம்?''

''சரி, சரி!'' முகத்தை இரண்டு முறை வேகமாக ஆட்டிவிட்டுச் சாதாரணமாக வைத்துக்கொண்டாள் கமலா.

துரை திலகத்தைச் சரியான முழு வட்டத்தில் அமைப்பதில் ஈடுபட்டான்.

ஒரு கையின் அடிவாரத்தை அவள் தலையில் ஆதாரமாகப் பதித்துக் கொண்டு விரலால் திலகத்தின் எல்லேப்புறங்களேச் சரி செய்ய ஆரம்பித்தான். பட்டு முகத்தில் பவுடரின் சன்னப் பொடி வேறு கலந்து அவனது கையைவழுக்கிவிட்டது.

''உம். எத்தனை நேரம்?'' என்று அவசரப் படுத்தினாள் கமலா.

''உம், சபாஷ்! இப்பொழுது பார்!''

சந்தேகப் பிராணியான கமலா மறுபடியும் கண்ணாடியில் பார்த்து விட்டு, ''இப்பொழுது சரியாக இருக்கிறதா?'' என்று கேட்டாள்.

''பிரமாதமாக இருக்கிறது'' என்று ஒரு போடு போட்டான் துரை.

பிறகு தொடர்ந்து பேசினான்: ''இன்னொன்று சொல்கிறேன், கேட்கிறாயா?''

''என்னது?''


''இந்தப் புடவை வேண்டாம். நான் தேர்ந்தெடுத்துத் தருவதைத்தான் அணிவாளாம் ராணி, என்ன?''

''சரி, சரி! ரொம்பக் குழையாதீர்கள். போனால் போகிறது. இன்றைக்கு ஒரு நாளேக்கு உங்கள் விருப்பப்படியேதான் அலங்காரம் செய்து கொண்டு விடுகிறேனே, திருப்திதானே?''

அடுத்த நிமிஷம் துரை புடவைகளேத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தான்.

துரையின் காரியாலய நண்பர் ஒருவரின் குழந்தையின் ஆண்டு நிறைவையொட்டிய விசேஷத்துக்காகத் தான் அன்று மாலே அவர்கள் சென்று கொண்





பிரபல கொழும்பு தினசரியான வீரகேசரி பத்திரிகையின் அதிபர் ஸ்ரீ பி. பி. ஆர். சுப்பிரமணியச் செட்டியாரின் புதல்வர் ஸ்ரீ எஸ். வீரகேசரி அச்சுத் தொழிலில் விசேஷப் பயிற்சி பெறுவதற்காக இங்கிலாந்துக்குப் புறப்பட்டார். ஸ்ரீ வீரகேசரியை "ஸ்ட்ராத்மோர்" கப்பலில் அவரது நண்பர்கள் வழியனுப்பி வைத்தார்கள்.

டிருந்தார்கள். நண்பரின் மனைவி கமலாவுக்கு உயிர்த் தோழி வேறு.

அவர்கள் போய்ச் சேர்ந்தபொழுது பலரும் முன்பே வந்து விட்டிருந்தார்கள். பெண்களுடைய எண்ணிக்கைதான் பெரும்பான்மையாக இருந்தது. கமலா பெண்கள் கூட்டத்தினுள் சென்று ஐக்கியமாகி விட்டாள்.

முன் கூடத்தில் ஆடவர்களுக்கெனத் தனியாக ஒதுக்கப்பட்டிருந்த பகுதியில் சிற்றுண்டி அருந்திய வண்ணம் நண்பர்களுடன் வேடிக்கையாக உரையாடிக் கொண்டிருந்தான் துரை.

வீட்டுக்குத் திரும்பும் நேரம் ஆகியும் கமலா எழுந்திருந்து வரும் வழியைக் காணும். 'பெண்களுக்குத்தான் பேச ஆள் கிடைத்து விட்டால் பொழுது போவதே தெரியாதே' என்று எண்ணியவாறு கமலாவை அழைப்பதற்காக இரண்டாம் கட்டுக்குச் சென்றான் துரை.

அங்கே மற்றப் பெண்கள் கமலாவிடம் எதையோ சொல்லிப் பெரிதாகச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

துரை மேலே போகாது திகைத்து நின்று விட்டான்.

"என்னடி கமலா இன்றைக்கென்று தேடிப் பிடித்தாயே, இந்த அலங்காரத்தை!"

தொடர்ந்து ஒரே சிரிப்பு.

துரைக்குத் 'திக்' என்றது.

"பொட்டையாவது சரியாக வைத்துக் கொண்டிருக்கிறாளா பாரேன்! ஆஸ்திரேலியா மாதிரி!"

துரையும் தன்நெற்றிப் பொட்டை அமுக்கி விட்டுக் கொண்டான்.

"அதுசரி! எங்கிருந்தடி கிடைத்தது இந்தப் பொடிக் கலர் சோளிக்கு 'மாட்'சா இந்த 'டார்க் கலர்' புடவை? சந்தனக் கலர் அல்லது இலேசான மஞ்சள் நிறத்தில் உடுத்திக் கொண்டிருக்கக்கூடாதோ?"

கமலா முதலில் உடுத்திக் கொண்டு அவன் வற்புறுத்தலுக்காக வீட்டில் உதறி விட்டு வந்த இளம் மஞ்சள் வர்ணப் புடவை இப்பொழுது துரையின் முகத்துக்கு எதிரே வந்து கேலி செய்தது!

அதற்குள் கமலா ஏதோ பதில் சொல்ல ஆரம்பித்தாள்.

"அப்பொழுதே 'இவர்' அடித்துக் கொண்டார், நான்தான் அவகாசம் இல்லாததால் ஏதோ கையில் அகப்பட்டதை உடுத்திக் கொண்டு வந்தேன். அவசரக் கோலம் பின்னே எப்படி இருக்குமாம்?"

துரையின் தலை தென்படுவதைக் கண்ட ஒருத்தி கமலாவை மெள்ளக் கிள்ளி, "அடி! உன் கணவர் உன்னைக் கூப்பிடுகிறார் போலிருக்கிறது" என்றாள்.

"அப்பொழுது நான் வரட்டுமா?" என்று அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டாள் கமலா.

"ரொம்ப நேரமாகக் காத்துக்கொண்டிருக்கிறீர்களோ?" என்று கமலா துரையைக் கேட்ட அதே சமயத்தில், "என்ன இருந்தாலும் சில சமயங்களில் புருஷர்களுக்கு இருக்கிற கலையுணர்ச்சி நமக்கு இருப்பதில்லையல்லவா?" என்று யாரோ சொல்லிக் கொண்டிருப்பது துரை—கமலா இருவருடைய காதிலும் வந்து விழுந்தது.

உதட்டைப் பரிதாபமாகப் பிதுக்கிய துரையைப் பார்த்து, "ஐயோ பாவம்! போனால் போகிறது!" என்றாள் கமலா அநுதாபமாக.

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10
for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam.



உங்கள் மனதிற் குகந்த பவுடர்
வசீகர நறுமணங் கமழ்வதான...
பியர்ஸ் டால்கம்
கொள்ளைகொள்ளும் நறுமணம், சருமத்தோடு குலவும் இன்பம், பியர்ஸ் மேன்மை — இவ்வளவையும் உங்களுக்கு அளித்திடுவது பியர்ஸ் டால்கம்! உன்னதமாக நறுமணமூட்டப் பெற்ற இந்தப் பவுடரை உபயோகித்தால் கோடையின் உச்சநிலையிலும் நீங்கள் மாறாத புது மலர்ச்சியுடன் நாள் முழுவதும் மிளிர முடியும். இள மஞ்சள் நிறமும் பச்சை நிறமும் எடுப்பாக அமையப்பெற்ற டின்களில் வரும் பியர்ஸ் டால்கம் பவுடரை வாங்குங்கள்.
PEARS
TALCUM
மேனியின் பராமரிப்புக்கு, கிளிசரின் அடங்கிய பியர்ஸ் சோப் உபயோகியுங்கள். தூய்மையே உருவான சிறந்த சோப் பியர்ஸ் தான் என்பது உங்களுக்கே புலப்படும்!
லண்டனிலுள்ள ஏ. & எப். பியர்ஸ் லிமிடெட்டுக்காக இந்தியாவில் தயாரித்தது

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

